Vol.6, Issue 10 | Annual Subscription ₹ 480
Rotary News, March 2024, Chennai

@NewsRotary
/RotaryNewsIndia

# ரோட்டரி நியூஸ்

இந்தியா
www.rotarynewsonline.org

மார்ச் 2024



Rotary

ADVT.

Rotary



CREATE HOPE in the WORLD

# Yadhumanaval

A Project by Rotary Club of Virudhunagar Dist-3212

## Goes Global Now

*Yadhumanaval at Sri Lanka 19.02.2024 to 28.02.2024*




## She is Everything

We are proud to declare that the main speaker of the program Yadhumanaval **Dr Jayanthasri Balakrishnan has touched the lives of 100,000 girls in India and Srilanka. A journey of 25 months.. 79 Sessions.**

Dr Jayanthasri Balakrishnan is determined to reach out and inspire many others to become stronger version of themselves.

She helps all young girls to realise their potential and makes them to understand that they can do anything they put their mind to.

Girl students of various institutions are at the heart of the Yadhumanaval program - which aims to empower them across the Universe.

Do you wish to organize Yadhumanaval for the girl students of a school in your town/city/district ?
We are waiting to partner with you.

Get in Touch
Yadhumanaval Project Chairman
Rtn D. Vijayakumari
+91 94887 66388

IDHAYAM
PROMISE OF HEALTH AND HAPPINESS

LEKHA ads/Mar 24/Rotary-1

#உள்ளே


**12** புற்று நோயை எதிர்த்துப் போராடும் இலங்கை ரோட்டேரியர்கள்

**18** ரோட்டரி-ரோட்ராக்ட் உறவு இன்றும் தொடர்கிறது

**22** விவசாயிகளின் வாழ்க்கையை மாற்றும் ரோட்டரி தடுப்பணைகள்

**28** ஜெர்மன் பரிமாற்ற மாணவரை கவர்ந்திழுத்த கேரளா மற்றும் புனே

**34** வந்தே பாரத்தின் வரலாற்றை சொல்லும் அதன் கர்த்தா

**38** 835 பயனாளிகளின் மனதைத் தொடும் ப்ராஜெக்ட் கிரியேட் ஹோப்

**40** ரோட்டரி பீஸ் பெல்லோஷிப்பிற்கு விண்ணப்பிக்கவும்

**46** சவால்களை எதிர்த்து சாதனைபுரிந்த திருநங்கைகளுக்கு சென்னையில் கௌரவம்!

**49** பரபரப்பான குஜராத்திக் கண்காட்சி

**52** ஃபாலி நரிமனின் வீரியத்தையோ தீவிரத்தையோ வயது குறைக்கவில்லை

**54** அமைதியான நம் இளமைப்பருவத்தின் குரல்

**60** ஓபன்ஹைமருக்கு ஒரு புதிய முடிவு

**64** அழகிய தூக்கத்தை அனுபவிக்கவும்

**68** சுற்றுச்சூழல் உணர்வுடன் வீட்டை மாற்றுங்கள்




## வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரோட்டரி நிவாரணம்




*பிப்ரவரி இதழின் அட்டைப் படம் தென் தமிழகத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களின் அவல நிலையைச் சித்தரிக்கிறது, ஆனால் ரோட்டேரியர்கள் நிவாரண உதவிகளை வழங்குவதும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது மனதுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. RI தலைவர் கார்டன் மெக்கினலி, ரோட்டேரியர்கள் நல்ல மன ஆரோக்கியத்தைப் பேணுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்து கிறார், அதேநேரத்தில் ஆசிரியரின் குறிப்பு மனநல சவால்களை எதிர் கொள்பவர்களுக்கு ஆதரவளிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. RI இயக்குநர் ராஜு சுப்ரமணியன், புதிய உறுப்பினர்களைத் தக்கவைத்துக் கொள்வதற்காக சங்கங்களின் செயல்பாடுகளை அதிக ஈடுபாட்டுடன் செய்ய ஊக்குவிக்கிறார். TRF அறங்காவலர் தலைவர் பேரி ராசின் ரோட்டரி அமைதி மையங்களின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறார். ஒட்டுமொத்தமாக, தெளிவான மற்றும் வண்ணமயமான படங்களுடன் கட்டுரைகள் சிந்தனையைத் தூண்டும் வகையிலும், படிக்கத் தகுந்தவையாகவும் இருந்தது. சிறந்த பிப்ரவரி இதழைத் தொகுத்ததற்காக செய்தி குழுவிற்கு என் பாராட்டுக்கள்.*

*பிலிப் முலப்போன் M T*
*RC திருவனந்தபுரம்*
*புறநகர் — D 3211*

### LBW: ஒரு மகிழ்ச்சிகரமான வாசிப்பு

எனக்கு ரோட்டரி நியூஸ் கிடைக்கும் போதெல்லாம், கடைசிப் பக்கத்தில் உள்ள TCA ஸ்ரீனிவாச ராகவனின் LBW பத்தியைப் முதலில் படிப்பேன். அன்றாடச் சூழ்நிலைகளை வாழ்க்கையின் பெரிய யதார்த்தங் களுடன் தொடர்பு படுத்தும் அவரது தனித்துவமான எழுத்து நடை எப்போதும் சுவாரஸ்யமாக இருக்கும். ஜனவரி இதழில், சிறுவயதில் தன்னையும் மூன்று பள்ளித் தோழர்களையும் உள்ளடக்கிய சிறு குறும்புகளைப் பகிர்ந்து கொண்டார். அவர்களில் ஒருவர் சிறையில் அடைக்கப்பட்டார், மற்ற இருவரைப் பொறுத்தவரை? ராகவன் சாமர்த்தியமாக, “அவர்கள் ஒருவேளை அரசியல்வாதிகளாக மாறியிருக்கலாம்” என்று அறிவுறுத்து கிறார். இந்த நகைச்சுவையான கருத்து என்னை சத்தமாக சிரிக்க வைத்தது, இப்போது ஒவ்வொரு புதிய இதழிலும் அவரது கட்டுரையை முதலில் படிக்க ஆவலுடன் காத்திருக்கிறேன்.

சசிதரன் K, RC மாவேலிகரா — D 3211

கவனக்குறைவாக வாகனம் ஓட்டுவது தொடர்பாக ஜனவரி இதழில் தனது LBW பத்தியில் வெளிப்படுத்திய ஸ்ரீநிவாச ராகவனின் கருத்துக் களுடன் நான் உடன்படுகிறேன். எனது சொந்த ஊரான ஈரோட்டில் பள்ளி வேன்கள், வணிக லாரிகள், ஆட்டோரிக்ஷாக்கள் மற்றும் இரு சக்கர வாகனங்கள் போன்ற வாகனங்களை ஓட்டுபவர்கள் கூட அடிக்கடி அலட்சியமாக, ஆக்ரோஷமாக, போக்குவரத்து விதிகளை உதாசினப்படுத்தி பயணிக்கிறார்கள். அவர்கள் சட்டத்தை மதிக்கும் ஓட்டுநர்களை அவமரியாதையுடன் நடத்துகிறார்கள். சமீபத்தில், பள்ளி வேன் ஓட்டுநர் ஒருவர், நான் விதிகளை மீறாமல் இருந்தும், ஒரு சந்திப்பில் என்னை நோக்கி ஆக்ரோஷமாக நடந்து கொண்டார். அவரது பொறுப்பற்ற நடத்தை எனது காரில் இருந்த மற்ற பயணிகளை பயமுறுத்தியது, அவர்கள் எங்கள் பாதுகாப்பிற்காக பிரார்த்தனை செய்தனர். பொறுப்புடன் வாகனம் ஓட்டுவதும் மற்றவர்களுக்கு தீங்கு விளை விப்பதைத் தவிர்ப்பதும் அடிப்படைக் கொள்கையாக இருக்க வேண்டும். இறுதியில், விதிகள் எப்போதும் ஏற்றுக்கொள்ளப்படாததால், அன்பு நம் செயல்களை நிர்வகிக்க வேண்டும்.

V பசுபதி, RC ஈரோடு — D 3203

இது LBW நெடுவரிசையைக் குறிக்கும் பதிவு. நமது நாடு செல்வம், அதிகாரம் மற்றும் கல்வியில் ஏற்றத்தாழ்வுகளுக்கு பெயர் பெற்றது. இங்கே எழுத்தாளர் தன் குடும்பத்தில் சாதிக்காதவர் என்று பெருந்தன்மையுடன் ஒப்புக்கொண்டார். அவருடைய பெரும்பாலான கட்டுரைகளைப் படித்திருப்பதாலும், கடந்த காலத்தில் அவருடைய சில செயல்பாடுகளை அறிந்ததாலும், எழுத்தில் அவருக்கு இணையாக அவர் குடும்பத்தில் யாரும் இருக்க முடியாது என்று உறுதியளிக்கிறேன்.

A P M கோபாலகிருஷ்ணன்
RC கோட்டயம் — D 3211

ஆசிரியரின் குறிப்பில், மன அழுத்தத் தால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு உதவுவதற்காக ரோட்டேரியர்கள் தங்கள் கண்களைத் திறந்து வைத் திருக்கும்படி வலியுறுத்துவதில் நீங்கள் கவனம் செலுத்துகிறீர்கள். அதே சமயம், துன்பகரமான விளைவு களுக்கு வழிவகுக்கும் மனநோயை ஏற்படுத்தும் சமூக தீமைகளை ஒழிப்பதில் நமது முனைப்பு இருக்க வேண்டும். பெண்களின் மன ஆரோக்கியத்திற்கான திட்டங்களை ரோட்டேரியர்கள் செயல்படுத்த வேண்டும். உலகமே மனநலப் பிரச் சினைகளால் சிக்கித் தவிக்கும் நேரத்தில் இந்த தலையங்கம் எழுதப்பட்டுள்ளது.

அருண்குமார் தாஷ்
RC பரிபாடா — D 3262

RC பரூச் மற்றும் RK மருத்துவமனை இணைந்து முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளை உள்ளடக்கிய 300 பேர் கொண்ட ஒரு குழுவிற்கு நடைப்போட்டியை ஏற்பாடு செய்திருப்பது மனதைத் தொடுகிறது.

மனநலம் என்பது RI தலைவரின் முக்கிய திட்டம் என்பதால், சங்கத் தலைவர் ரிஸ்வானா டாக்கின் ஜமீன்தார் இந்த முயற்சியை சிறப்பு மக்களுக்காக எடுத்துள்ளார். மாற்றுத்திறனாளிகளுக்கான இந்த அருமையான வாய்ப்பை வழங்கியதற்காக அவருக்கும் அவரது குழுவினருக்கும் வாழ்த்துகள்.

N ஜெகதீசன்
RC ஏலூர் — D 3020

RI தலைவர் மெக்கினலியின் மனநலம் குறித்த கவனம் செலுத்தும் பகுதியை முன்னிறுத்துவதற்காக, மாற்றுத்திறனாளிகள் மற்றும் வயதானவர்களுக்காக RC பரூச் மற்றும் RK மருத்துவமனை மற்றும் பிற சேவை நிறுவனங்களுடன் கைகோர்த்து நடைப்போட்டியை நடத்தினர்.

சங்கத்தலைவர் ரிஸ்வானா டாக்கின் ஜமீன்தார் ஊனமுற்றவர்களுடன் பணியாற்றவும், மக்களை ஈடுபடுத்தவும், நேர்மறையான அதிர்வுகளை உருவாக்கவும், உள்ளடக்கிய தன்மை, பச்சாதாபம் மற்றும் மன ஆரோக்கியம் ஆகிய வற்றை மேம்படுத்த விரும்புகிறார். பின்பற்ற வேண்டிய திட்டம்.

V R T துரைராஜா
RC திருச்சிராப்பள்ளி — D 3000

பரத் மற்றும் ஷலன் சவுர் ஆகியோரின் "நன்மை பயக்கும் மன அழுத்தம்" என்ற கட்டுரையைப் படிப்பது சுவாரஸ்யமாக இருக்கிறது. மன அழுத்தம் என்பது ஒருவரின் மன மற்றும் உணர்ச்சி நிலையின் விளைவாகும் என்பதை அது சரியாகச் சுட்டிக்காட்டுகிறது.

M பழனியப்பன், RC மதுரை வெஸ்ட் — D 3000

## RN ஒரு இசை சிகிச்சை போன்றது

நான் எப்போதும் ரோட்டரி நியூஸ் அச்சு பிரதியை விரும்புகிறேன். படங்கள் என்னை மட்டுமல்ல, அதில் உள்ள வரிகளைப் படிக்கும் முன் இசையை விரும்பும் பெரும்பாலானோரை ஈர்க்கின்றன. அட்டைப் படங்கள் ஒற்றுமை மற்றும் வேற்றுமையில் தனித்துவமானது.

சௌமித்ரா சக்ரவர்த்தி
RC கல்கத்தா யுனிவர்ஸ் — D 3291

## தன்னைத்தானே தோற்கடிக்கும் கார் பேரணி?

ப்ராஜெக்ட் விக்னெட்டஸில் "கார் பேரணி காலநிலை மாற்ற விழிப்புணர்வை பரப்புகிறது" துணுக்கு என் கவனத்தை ஈர்த்தது. 14 நாட்களில் 5,905 கிமீ தூரத்தை கடக்கும் பேரணியை அது குறிப்பிட்டது, இதில் மறைமுகமாக பல கார்கள் அடங்கும். மாசு மற்றும் புவி வெப்பமடைதலுக்கு இந்த கார்களில் இருந்து வெளியாகும் உமிழ்வுகளை கருத்தில் கொண்டு, எலெக்ட்ரிக் வாகனங்களை (EVs) பயன்படுத்தாதது காலநிலை மாற்ற விழிப்புணர்வை ஊக்குவிக்கும் பேரணிக்கு முரணாக தெரிகிறது.மின் வாகனங்களை நோக்கிய உலகளாவிய மாற்றம் சுற்றுச்சூழல் கவலைகளை நிவர்த்தி செய்வதற்கான அவசரத்தை பிரதிபலிக்கிறது. நான் ஒரு ரோட்டரியன் அல்ல, ஆனால் பல ஆண்டுகளுக்கு முன்பு குரூப் ஸ்டடி எக்ஸ்சேஞ்ச் திட்டத்தில் பங்கேற்ற ஒருவர் என்ற முறையில் ரோட்டரியின் பணியின் நேர்மறையான தாக்கத்தை உங்கள் இதழின் மூலம் பார்த்திருக்கிறேன்.

C கோபிநாத்

*வாசகரின் கருத்தை நாங்கள் பாராட்டுகிறோம், ஏனெனில் இது நம் பயணத்தின் உமிழ்வுகள் மற்றும் கார்பன் தாக்கம் குறித்து நாம் நோக்கமாகக் கொண்ட விழிப்புணர்வை பிரதிபலிக்கிறது. எங்களின் தனி கார் பேரணி பிளாஸ்டிக் எதிர்ப்பு விழிப்புணர்வு, காடுகளின் மறுவளர்ப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தியது. எலெக்ட்ரிக் வாகனங்களின் பலன்களை நாம் ஒப்புக்கொண்டாலும், பேட்டரி மினரல்களுக்கான விரிவான சுரங்கம் மற்றும் நிராகரிக்கப்பட்ட பேட்டரிகளுக்கு போதுமான மறுசுழற்சி அமைப்புகள் போன்ற சிக்கல்கள் காரணமாக, எரிபொருளில் இயங்கும் ஆட்டோமொபைல்களுக்கு அவை சிறந்த மாற்றாக இல்லை என்று நாங்கள் நம்புகிறோம். எங்களின் கார்பன் தடயத்தை ஈடுகட்ட, பயணத்திற்கு முன், 32,320 மரக்கன்றுகளை வளர்ப்பதற்கு ஒரு நர்சரியை நிறுவினோம், இந்த ஆண்டு அதை நடவு செய்ய திட்டமிட்டுள்ளோம். "நிகர பூஜ்ஜிய" உமிழ்வை அடைவது சவாலானதாக இருந்தாலும், விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக அமைவதும் எங்களின் முதன்மையான குறிக்கோளாக இருந்தது.*

*சிவபாலா ராஜேந்திரன்*
RC *சென்னை மெராக்கி* — D 3232

**அட்டையில்:**
RI தலைவர் கோர்டன் மெக்கினலி மற்றும் RI இயக்குனர் ராஜு சுப்பிரமணியன் RID 3220 DG ஜெரோம் ராஜேந்திரம், DIR அமீர் அக்ரம், DRR சத்மா ஜெயசிங்க, இலங்கையில் ரோட்ராக்டர்கள் மற்றும் இன்டராக்டர்களுடன்.

**புகைப்படம்:** ரஷீதா பகத்

தங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் உங்கள் சங்கத்தின் நல திட்டங்கள் புகைப்படங்களுடன் rushbhagat@gmail.com அல்லது rotarynewsmagazine@gmail.com என்ற மின்னஞ்சலிற்கு அனுப்பலாம். WHATSAPP செய்திகள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது. மேலும் ரோட்டரி செய்திகளை எங்கள் www.rotarynewsonline.org என்னும் இணைய தளத்தில் Rotary News Plus என்னும் இதழில் காணலாம்.

RI தலைவரிடமிருந்து...



## ரோட்டரி அமைதித் தோழரைப்போல் சிந்தியுங்கள்

அமைதிக்குப் பல வழிகள் உள்ளன. இந்த உண்மையைத் திரும்பத் திரும்ப நிரூபித்துக் கொண்டிருக்கிற ரோட்டரி அமைதித் தோழர்கள் நமக்குக் கிடைத்திருப்பது ரோட்டரியின் நல்லூழ்.

ஒவ்வோர் ஆண்டும், உலகெங்குமுள்ள சுமார் 130 தலைவர்கள் அமைதி மற்றும் மேம்பாட்டைப்பற்றிப் படிப்பதற்கு வாய்ப்பு வழங்குகிறது ரோட்டரி. இந்த அமைதித் தோழர்கள் இங்கு கற்றுக்கொள்ளும் பாடங்கள், முரணைத் தடுத்தல், தீர்த்துவைத்தல் மற்றும் நேர்விதமான அமைதியை முன்னிறுத்தும் பணிக்கு அவர்களைத் தயார் செய்யும். இவர்கள் அமைதியை முன்னெடுத்துச்செல்லும் புதுமையான வழிகளுக்குச் சில எடுத்துக்காட்டுகள், இதோ.

அலெஜான்ட்ரா ருயெடா-ஜராடெ அமைதி மற்றும் முரண்களைத் தீர்க்கிற தன்னுடைய ரோட்டரி அமைதித் தோழமைப் படிப்பையும், ஆற்றல் மற்றும் வளங்களில் தான் பெற்ற முதுநிலைப் பட்டத்தையும் இணைத்து, கொலம்பியக் கிராமப்புறங்களைப் பாதுகாக்கும் தன் கனவை நனவாக்குகிறார். இவர் கொலம்பியாவிலும் லத்தீன் அமெரிக்கக் கிராமப்புறங்களிலும் உள்ள விவசாயிகள் வளங்குன்றாப் பண்ணைத்தொழில் தரநிலைகளை நிலைநிறுத்துவதற்கான அறிவையும் பயிற்சியையும் பெறுவதற்கு உதவும் NES நேச்சுரலேஜா என்ற அமைப்பை 2011ல் நிறுவினார். இது கிட்டத்தட்ட 4,500 விவசாயிகளுடைய வாழ்க்கைகளை மேம்படுத்தியுள்ளது.

ஜெஃப்ரே டீசல், கேதி டொஹெர்ட்டி ஆகிய அமைதித் தோழர்கள், வட அமெரிக்காவில் உள்ள ரோட்டரி நேர்வித அமைதிச் செயலாக்குவோர் துணைக்குழுவான "இனக்குழுச் சமநிலைத் திட்ட"த்தை நிறுவுவதற்குத் தங்கள் அமைதி மற்றும் மேம்பாட்டுக் கல்வித் தோழமைப் படிப்பைப் பயன்படுத்தியுள்ளார்கள். இந்தத் துணைக்குழு இனக்குழுப் பாகுபாட்டுக்கு எதிரான முயற்சிகளின் வழியாக இன்னும் அமைதியான சமூகத்தை உருவாக்கும் வழிகளை ஆராய்கிறது.

ஜேமி லெசுயுர் ரோட்டரி அமைதித் தோழமை வழியாக அமைதி மற்றும் முரண் ஆராய்ச்சியில் சமூக அறிவியல் முதுநிலைப் பட்டத்தைப் பெற்றார். இப்போது இவர் செஞ்சிலுவை மற்றும் செம்பிறை அமைப்புகளின் பன்னாட்டுக் கூட்டமைப்பின் நெருக்கடி நேரச் செயல்பாடுகளை வழிநடத்துகிறார், நெருக்கடி நேர எதிர்வினைச் சூழல்களில் அமைப்புகள் இணைந்து பணியாற்றுவதற்கான மேலாண்மை மற்றும் செயல்பாட்டுக் கட்டமைப்பை அமைக்கிறார். பேரிடர் எதிர்வினை என்கிற சிக்கலான உலகில் அமைதியைக் கொண்டுவருவதற்கு ஆராய்ச்சி தரவு ஓர் ஆற்றல் மிக்க கருவி என்று ஜேமி கண்டறிந்துள்ளார்.

இதுபோல் இன்னும் நூற்றுக்கணக்கான உண்மைக் கதைகள் உள்ளன. உலகெங்கும் அமைதியைக் கட்டமைக்கத் தயாராகவும் அதற்கேற்ற திறனுடனும் உள்ள தலைவர்கள் தலைமுறையை ரோட்டரி எப்படி உருவாக்குகிறது என்று இவை காண்பிக்கின்றன. ரோட்டரி அமைதி மையங்களில் இதுவரை கிட்டத்தட்ட 1,800 அமைதித் தோழர்கள் பயிற்சி பெற்றுள்ளார்கள், 140க்கும் மேற்பட்ட நாடுகளில் தங்கள் திறமையைக் காண்பித்துக்கொண்டிருக்கிறார்கள்.

அமைதித் தோழர்களுடைய, அவர்களை ஆதரிக்கும் ரோட்டரி உறுப்பினர்களுடைய தொடர்ந்த பணியானது, சேவை, நிதி திரட்டல், புதுமைச் சிந்தனையின் வழியாக உலகில் நம்பிக்கையை உருவாக்குவதற்கு உங்களுக்குத் தொடர்ந்து ஊக்கம் அளிக்கட்டும்.

**கோர்டன் மெக்கினலி**
தலைவர், ரோட்டரி இன்டர்நேஷனல்.



# இரு ஜாம்பவான்களுக்கு இரங்கல்

கடந்த பிப்ரவரி மாதம் 20 மற்றும் 21 இந்தியாவுக்கு மிகத் துயரமான நாட்கள். நல்ல குடிமக்களாக வளர்ந்து, ஹீரோக்களாக வணங்கத்தக்க இருவரை நாம் இழந்துவிட்டோம். இருவருமே சமுதாயத்தில் உயர்ந்த மனிதர்கள். ஒருவர் பிரபல சட்ட நிபுணர் ஃபாலி நரிமன். உண்மையைப் பேச தயங்காதவர், அச்சமற்றவர். மூத்த வழக்கறிஞர் ஸ்ரீராம் பஞ்சு, தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டபடி, அவர் அறிவுசார் நிபுணர். பொதுவாழ்க்கையில் நன்னடத்தையை கடைப்பிடித்தவர். எல்லாவற்றுக்கும் மேலாக, அதிகாரத்தின் மீதான அவரது அணுகுமுறை. அதிகாரத்தை நிலைநாட்டவும், அதை தவறாக பயன்படுத்தியவர்களை தட்டிக்கேட்கவும் தயங்காதவர். அவசர நிலை பிரகடனத்தை எதிர்த்து கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் பதவியை ராஜினாமாச் செய்தவர். கிறிஸ்துவர்கள் மீதான தாக்குதலுக்குப் பிறகு குஜராத் அரசின் கருத்துக்களை திருப்பியனுப்பியவர். அவர் நாட்டின் சிறந்த வழக்கறிஞர்களில் ஒருவர், ஆனாலும் அவரால் அட்டார்னி ஜெனரலாக முடியவில்லை. இதற்கான காரணத்தை ஊகிப்பவர்களுக்கு எந்த பரிசும் தேவையில்லை.

நாம் இழந்துவிட்ட மற்றொரு நபர், இந்தியாவில் உள்ள அனைத்து தரப்பு மக்களும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில், ஹிந்துஸ்தானி மொழியில் தனது இனிமையான குரலால் மயக்கி, மகிழ்வித்த அமீன் சயானி. சிலோன் வானொலியில், பிரபலமான பினாகா கீத்மாலா நிகழ்ச்சியில், அவரது குரலைக் கேட்க காத்திருந்த இந்திய ரசிகர்கள் ஏராளம். ஒவ்வொரு புதன்கிழமையும் வாரத்தின் மிகச்சிறந்த ஹிந்தி திரைப்பட பாடல்கள் பற்றிய அவரது வர்ணனையை கேட்க ரசிகர்கள் ஆவலோடு காத்திருப்பார்கள். லதா, ரஃபி, முகேஷ், கிஷோர், ஆஷா, மன்னா டே, ஹேமந்த் உள்ளிட்ட பிரபலமான பாடகர்களின் குரலையும், பாட்டில் இழைந்தோடும் இசையையும், அமீன் சயானியின் வர்ணனையுடன் கேட்கும்போது நாம் வேறு உலகத்துக்கே சென்று விடுவோம். இன்றைய தலைமுறையினர் மொபைல் போனில் தொட்டால் ஆயிரக்கணக்கான பாடல்கள் ஒலிக்கின்றன. ஆனால், தொலைக்காட்சி, செல்போன், இதர இசை கேட்கும் கருவிகள் இல்லாத அந்த காலத்தில் ஒவ்வொரு புதன்கிழமையும் ஹிந்தி திரைப்படப் பாடல்களை கேட்பதற்கு வானொலி முன்பு ரசிகர்கள், நேயர்கள் காத்திருப்பதை அவர்கள் கற்பனை செய்துகூட பார்க்க முடியாது. 1950-களின் முற்பகுதியில் இந்த நிகழ்ச்சி தொடங்கப்பட்டபோது ஒரு சில செல்வந்தர்களின் வீடுகளில் மட்டுமே கிராமபோன் (gramaphone) வசதி இருந்தது.

இந்த இரண்டு மாமனிதர்களுமே தங்கள் பணியில், பொதுவாழ்க்கையில் தங்கள் செயல்பாட்டின் மூலம் அவர்களை அறிந்த மக்களிடம் அழியாத முத்திரையை பதித்துவிட்டு சென்றுள்ளனர். இருவரின் நடத்தையிலும் பேச்சிலும் ஒரு மென்மை இருந்தது. மற்றவர்களிடம் பழகும்போது பண்புள்ளவர்களாகவே இருந்தனர். அவர்களின் ஆளுமையிலும் ஒரு வசீகரம் இருந்தது. இருவருமே பெரும்பாலான இந்தியர்களின் நன்மதிப்பையும் செல்வாக்கையும் பெற்றவர்களாக இருந்தனர். இன்றைய சூழலில் இதுபோன்ற நற்குணங்கள் கொண்டவர்களை காண்பது அரிதானது. நம்மைச் சுற்றி இருப்பவர்கள் எல்லாம் முரட்டுத்தனம், அதிகார துஷ்பிரயோகம், கத்திப் பேசுதல் மற்றும் ஆணவம் கொண்டவர்களாகவே இருக்கிறார்கள். உண்மையை துணிச்சலுடன் எடுத்துக் கூறும் தைரியம், ஏழைகளுக்காக போராடும் குணம், பாகுபாடுகளை எதிர்க்கும் குணம் அவர்களிடம் இல்லை. அரசியல், வர்த்தகம், தொழில்துறை அல்லது வேறு எந்த தொழிலானாலும் சரி அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு ஜால்ரா போடுவதை நாம் தவிர்க்க வேண்டும்.

ஒரு உதாரணம் போதும். இந்த நாளில் தேவையில்லாத, நியாயமற்ற, பொருத்தமில்லாத வகையில் பிரபல பாலிவுட் நடிகைமீது அரசியல்கட்சியைச் சேர்ந்த முக்கியப் புள்ளி ஒருவர் புழுதிவாறி தூற்றியிருக்கிறார். அவரிடம் கண்ணியமான செயல்களைத்தான் நாம் எதிர்பார்க்கிறோம். அமீன் சயானி, கீத்மாலா நிகழ்ச்சியைத் தொடங்கும் போது பெஹ்னோ அவுர் பாயோ என்றுதான் தொடங்குவார். பெண்களுக்குத்தான் அவர் முக்கியத்துவம் கொடுத்தார். நம்முடைய அரசியல்வாதிகளில் எத்தனைப் பேர் பெண்களை மதித்துப் பேசுகிறார்கள்? DEI மந்திரத்தை மறந்து விடுங்கள், பாலின சமத்துவத்தை பற்றி பேசும் நாள் வெகுதூரத்தில் இல்லை என்பது நினைவில் கொள்ளுங்கள்!

ரஷீதா பகத்

# உங்கள் மாநாட்டு அனுபவத்தைத் தனித்துவமாக்குங்கள்



சிங்கப்பூரில் நடைபெறும் ரோட்டரின் இன்டர்நேஷனல் மாநாடு பல சிறப்பு நிகழ்வுகள், தனித்துவமான அனுபவங்களை வழங்குகிறது. அதனால், நீங்கள் உங்கள் நேரத்தைத் திட்டமிட்டு இதை நன்கு பயன் படுத்திக்கொள்ளவேண்டும்.

மே 25லிருந்து 29வரை நடை பெறும் மாநாட்டுக்கு முன்கூட்டியே வாருங்கள், அல்லது, மாநாட்டுக்குப் பிறகும் தங்குங்கள், ரோட்டரி உறுப்பினர்களுக்கான சிறப்புச் சுற்றுலாவில் இணையுங்கள், அல்லது, பொருளாதார ஆற்றல் மிக்க இந்த நாட்டில் உள்ள பல பெரிய நிறுவனங்களின் தலைவர்களைச் சந்தித்துத் தொழில் உறவுகளை உருவாக்குங்கள். அத்துடன், சக உறுப்பினர்களுடன் கலந்து பேச மறக்கவேண்டாம்.

இந்த மாநாட்டின் ஏற்பாட்டுக் குழுவினர் சிங்கப்பூர், சுற்றியுள்ள பகுதிகளில் உங்களுக்கெனச் சுற்றுலாக்களை உருவாக்கியுள் ளார்கள். இவற்றை இங்கு பதிவு செய்யலாம்: *rotarysingapore2024.org.* அருகிலுள்ள மலேசியாவை மூன்று நாள் சுற்றிப் பாருங்கள்.

இந்த நகரில் குடியேறியுள்ளோர் மற்றும் விற்பனையாளர் மையப் பண்பாட்டைப்பற்றிக் கற்பதற்கான தனியார் சுற்றுலாவில் சீன, இந்திய, மலாய் பகுதிகளின் உணவுச் சந்தைகளைச் சுவை பாருங்கள்.

இந்தப் பகுதியைச் சேர்ந்த ரோட்டரியன்கள், இந்த நகரின் மையத்தில் உள்ள அழகிய இடங்களில் நடைபெறும் பண்பாட்டு மற்றும் உணவு நிகழ்வுகளுடனான உள்ளூர் விருந்தோம்பல் இரவுக்கு உங்களை அழைக்கிறார்கள். ரோட்டரி அறக்கட்டளைக் கொடையாளர் மாநாட்டில் உறுப்பினர்கள் தங்கள் ஆதரவின் தாக்கத்தைப்பற்றிய உண்மைக் கதைகளைக் கேட்கலாம்.

மே 24, 25ல், மாநாட்டுக்கு முந்தைய இளைஞர் பரிமாற்ற அலுவலர்கள் நிகழ்ச்சியில் ரோட்டரி இளைஞர் பரிமாற்றத்தின் முன்னாள் பயனாளர்கள் சந்திக்கலாம், யோசனைகளைப் பகிர்ந்து கொள்ளலாம்.

மாநாட்டுக்குப் பிறகு, ஜூன் 1லிருந்து 4வரை நடைபெறும் ஆசிய பசிஃபிக் உள்ளூர் ரோட்டராக்ட் மாநாட்டிலும் கலந்துகொள்ளுங்கள்.

**மேலும் தெரிந்துகொள்ள**
**பதிவு செய்ய:**
convention.rotary.org

**ஆளுநர் குழு**

| | |
|---|---|
| 2981 | செங்குட்டுவன் G |
| 2982 | ராகவன் S |
| 3000 | ஆனந்த ஜோதி R |
| 3011 | ஜீதேந்தர் குப்தா |
| 3012 | ப்ரியதோஷ் குப்தா |
| 3020 | சுப்பாராவ் ராவுரி |
| 3030 | ஆஷா வேணுகோபால் |
| 3040 | ரீத்து க்ரோவர் |
| 3053 | பவன் கண்டேல்வால் |
| 3055 | மேஹுல் ரத்தோட் |
| 3056 | நிர்மல் ஜெயின் குனாவத் |
| 3060 | நிஹிர் தாவே |
| 3070 | விப்பன் பாசின் |
| 3080 | அருண் குமார் மோங்கியா |
| 3090 | கன்ஷியாம் கன்சல் |
| 3100 | அஷோக்குமார் குப்தா |
| 3120 | சுனில் பன்சல் |
| 3131 | மஞ்சு ஃபாட்கே |
| 3132 | ஸ்வாதி ஹெர்கல் |
| 3141 | அருண் பார்கவா |
| 3142 | மிலின்த் குல்கர்னி |
| 3150 | சங்கர் ரெட்டி |
| 3160 | மணிக் பவார் |
| 3170 | நாசிர் போசத்வாலா |
| 3181 | கேஷவ் H R |
| 3182 | கீதா B C |
| 3191 | உதயகுமார் பார்கவா |
| 3192 | ஸ்ரீனிவாச மூர்த்தி V |
| 3201 | விஜய்குமார் T R |
| 3203 | Dr S சுந்தர்ராஜன் |
| 3204 | Dr சேது ஷிவ்ஷங்கர் |
| 3211 | Dr G சுமித்ரன் |
| 3212 | முத்தையா பிள்ளை R |
| 3231 | பரணிதரன் P |
| 3232 | ரவி ராமன் |
| 3240 | நிலேஷ் குமார் அகர்வால் |
| 3250 | பகாரியா S P |
| 3261 | மஞ்சித் சிங் அரோரா |
| 3262 | ஜெயஸ்ரீ மோஹன்டி |
| 3291 | ஹுராலால் யாதவ் |

அச்சு மற்றும் பதிப்பாளர் P T **பிரபாகர்** (முகவரி: 15 சிவசாமி சாலை, மைலாப்பூர் சென்னை-4). துகார் டவர்ஸ், 3-வது தளம், 34, மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை-600 008-யில் இயங்கும் ரோட்டரி நியூஸ் ட்ரஸ்ட் சார்பில் ராசி கிராபிக்ஸ் பி லிட், 40, பீட்டர்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை- 14 என்ற முகவரியில் அச்சிடப்படுகிறது. ஆசிரியர்: **ரஷீதா பகத்.**

கட்டுரைகளை திருத்தவோ/ சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.

Printed and published by PT Prabhakar, 15 Sivaswamy Street, Mylapore, Chennai 600004, on behalf of Rotary News Trust and printed at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah,Chennai - 600 014, India, and published at Rotary News Trust, Dugar Towers, 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

**அறங்காவலர் குழுவினர்**

| | |
|---|---|
| அனிருதா ராய்சௌத்ரி<br>RI இயக்குனர் மற்றும்<br>RNT தலைவர் | RID 3291 |
| T N சுப்ரமணியன்<br>RI இயக்குனர் | RID 3141 |
| Dr பரத் பாண்ட்யா<br>TRF அறங்காவலர்<br>துணை தலைவர் | RID 3141 |
| ராஜேந்திர K சாபூ | RID 3080 |
| கல்யாண் பானர்ஜி | RID 3060 |
| சேகர் மேத்தா | RID 3291 |
| அசோக் மஹாஜன் | RID 3141 |
| P T பிரபாகர் | RID 3232 |
| Dr மனோஜ் D தேசாய் | RID 3060 |
| C பாஸ்கர் | RID 3000 |
| கமல் சங்வி | RID 3250 |
| Dr மகேஷ் கோட்பாகி | RID 3131 |
| A S வெங்கடேஷ் | RID 3232 |
| குலாம் A வஹன்வதி | RID 3141 |

**செயற்குழு**
**உறுப்பினர்கள்** (2023–24)

| | |
|---|---|
| ஸ்வாதி ஹெர்கல்<br>தலைவர், ஆளுநர் குழு | RID 3132 |
| ஹீராலால் யாதவ்<br>செயலாளர், ஆளுநர் குழு | RID 3291 |
| முத்தையா பிள்ளை R<br>பொருளாளர், ஆளுநர் குழு | RID 3212 |
| மிலின்த் குல்கர்னி<br>ஆலோசகர், ஆளுநர் குழு | RID 3142 |



**ஆசிரியர்**
ரஷீதா பகத்

**துணை ஆசிரியர்**
ஜெய்ஸ்ரீ பத்மநாபன்

**நிர்வாகம் மற்றும்**
**விளம்பர மேலாளர்**
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*



Contributions are welcome but will be edited. Content can be reproduced with permission and attributed to RNT.






# ஆரோக்கியமான உலகத்திற்கான உலகளாவிய முயற்சி!

மார்ச் மாதம் நெருங்கிவரும் வேளையில், தண்ணீர், சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம் (WASH) ஆகிய முக்கியமான பிரச்னைகளைத் தீர்ப்பதில் உறுதியான அர்ப்பணிப்பை கொண்டாடுவதில் ரோட்டரி முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. உலகெங்கிலும் உள்ள ரோட்டரி சங்கங்கள், இந்த அத்தியாவசிய துறையில் முன்னேற்றங்களை ஏற்படுத்தி பெரும் தாக்கத்தை உருவாக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

வேர்ல்டு விஷன், யுனிசெப், செஞ்சிலுவை சங்கம் உள்ளிட்ட கூட்டாளர்களுடன் சேர்ந்து ரோட்டரி சங்கம் பள்ளிகளுக்கு சுத்தமான நீர் வழங்கும் WASH திட்டத்தை சமூகத்தில் செயல்படுத்துவதில் முக்கிய பங்காற்றி வருகிறது. பாலினம் சார்ந்த கழிவறைகளை உருவாக்குவது முதல் சானிடரி பேட் விற்பனை இயந்திரங்கள் நிறுவுதல் மற்றும் மாதவிடாய் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது வரை மற்றும் உள்ளூரில் சுற்றுச்சூழலை பாது காப்பது மற்றும் கல்விகற்பதில் உள்ள தடை களை அகற்றுவது ஆகியவற்றில் பங்களிப்பு செய்து வருகின்றன.

பள்ளிகளில் WASH திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு அப்பால், ரோட்டரி சங்கங்கள் உள்ளூர் அமைப்புகளுடன் சேர்ந்து மழைநீர் சேகரிப்பு, நதிகள் புனரமைப்பு மற்றும் குளங்கள் அமைத்தல் ஆகியவை உள்ளூரில் பொருளாதாரத்தை மேம்படுத்துவதுடன் மட்டுமல்லாமல் நிலையான வளர்ச்சியையும் ஊக்குவிப்பதற்கு உதாரணங்களாகும். அதே நேரத்தில், கிராமங்களில் சுகாதாரம் மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்த WASH திட்டங்கள் ஒவ்வொரு மூலையிலும் சென்றடைவதை உறுதிசெய்கிறது. இதனால் நீடித்த மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

2013-ஆம் ஆண்டு முதல் ரோட்டரி சங்கங்கள் TRF உடன் இணைந்து. உலக அளவில் 2,000-த்துக்கும் மேலான WASH திட்டங்களுக்காக 130 மில்லியன் டாலரை முதலீடு செய்துள்ளன.

யுனைடெட் ஸ்டேட்ஸ் ஏஜென்சி ஃபார் இன்டர்நேஷனல் டெவலப்மென்ட் (USAID), உடன் இணைந்து ரோட்டரி, சமூகங்கள் மற்றும் அரசாங்களுக்கு திட்டமிடுதல், நிதியளித்தல், பாதுகாப்பான குடிநீர் வழங்குதல் மற்றும் மருத்துவ சுகாராத சேவைகளை வழங்குவதில் உதவி வருகிறது.

உலக அளவில் ரோட்டரி சங்கங்களால் மேற்கொள்ளப்படும் தாக்கத்தை ஏற்படுத்தும் பணிகளை பற்றி நாம் சிந்திக்கும் போது, அனைவருக்கும் சுத்தமான குடிநீர், சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம் கிடைப்பதற்கான உலகை உருவாக்கும் நமது அர்ப்பணிப்பு மற்றும் அங்கீகாரம் மற்றும் கொண்டாட்டத்தின் மாதமாக மார்ச் மாதம் இருக்க ட்டும். உள்ளூரில் ஒவ்வொரு இடத்திலும் நாம் மேற்கொள்ளும் முயற்சியும் ரோட்டரியின் பெரிய சேவைப் பயணத்திற்கும், உலக அளவில் பெருமாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் பங்களிக்கட்டும். இது ஆரோக்கியமான மற்றும் நிலையான உலகத்திற்கான எங்கள் கூட்டுமுயற்சியில் மற்றொரு மைல்கல்லாக இருக்கும்.

**அனிருதா ராய்சௌத்ரி**
RI இயக்குனர் 2023–25

# ஓர் அடிப்படைத் தேவையைத் தாண்டி...



இந்த மாதத்தில் ரோட்டரி இரண்டு கருப்பொருட்களில் கவனம் செலுத்துகிறது. மார்ச் மாதம் நீர், தூய்மை மற்றும் சுகாதார மாதம். மேலும், மார்ச் 11 முதல் 17 வரை நாம் உலக ரோட்டராக்ட் நாளைக் கொண்டாடுகிறோம். WASH, ரோட்டராக்ட் ஆகிய இரண்டும் என் இதயத்துக்கு நெருக்கமானவை.

தூய நீர், அடிப்படைத் தூய்மை மற்றும் முறையான சுகாதாரம் ஆகியவை அடிப்படை மனித உரிமைகள். எனினும், 2.2 பில்லியன் பேருக்கு இன்னும் பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதில்லை என்பது அதிர்ச்சியளிக்கிறது. கடந்த பத்தாண்டில், உங்கள் ரோட்டரி அறக்கட்டளை உலகெங்கும் 2,500க்கும் மேற்பட்ட நீர் மற்றும் தூய்மைத் திட்டங்களில் 180 மில்லியனுக்குமேல் முதலீடு செய்துள்ளது. பெரிய அளவிலான தீர்வுகளை வழங்குவதற்கு நாம் USAID போன்ற அமைப்புகளுடன் இணைந்துள்ளோம்.

நம்முடைய அறக்கட்டளை மற்ற நீர்க் கூட்டணிகளுக்கும் இணைப்பானாக உள்ளது. ஹெய்தி தேசிய நீர், தூய்மை மற்றும் சுகாதார முன்னெடுப்பான HANWASHI அமைப்பதற்கு நான் ரோட்டரி மாவட்டம் 7020ன் தலைவர்களுடன் இணைந்து பணியாற்றியபோது இதுதான் நடந்தது. ஹெய்தி முழுவதும் உள்ள சமூகங்களில் இருக்கும் அரசு சாராத அமைப்புகள், நகராட்சிகள் மற்றும் அரசு அமைப்புகளுடன் பணியாற்றும் நம் வியூகத்தில் அறக்கட்டளை நல்கைகள் தொடர்ந்து முக்கியப் பங்காற்றுகின்றன. நீரைப் பெறும் சமூகங்களில் கல்வி நிலைகள் மேம்படுகின்றன, நலம் முன்னேறுகிறது, வளர்ச்சி பெருகுகிறது.

நாம் கூட்டணிகளைப்பற்றிப் பேசும்போது, நம்முடைய மிக நெருங்கிய தோழரும், ரோட்டரி குடும்பத்திலேயே இருப்பவருமான ரோட்டராக்டை நாம் மறக்கமுடியாது. ரோட்டராக்ட் சங்கங்களின் ஊடாடல், ஆற்றல் மற்றும் யோசனைகள் ரோட்டரி சங்கங்களின் அனுபவத்துடன் இணைந்து நம் ஒட்டுமொத்தத் தாக்கத்தைப் பெருக்குகின்றன.

எனினும், 2022முதல் ரோட்டராக்ட் சங்கச் செயல்பாடுகளை மாவட்ட நல்கைகளில் இணைக்கலாம், அவை பன்னாட்டு நல்கைகளுக்குத் தகுதி பெறும், இதன்மூலம் சேர்ந்து பணி புரியும் வாய்ப்புகளை விரிவாக்கலாம் என்பதெல்லாம் பல ரோட்டரி உறுப்பினர்களுக்கு இன்னும் தெரியவில்லை.

களத்தில் இறங்கித் திட்டங்களை நிறைவேற்றுவது, கொடையளிப்பது என அனைத்திலும் இணைந்து பணிபுரியவேண்டும் என்று நான் எல்லா ரோட்டரி, ரோட்டராக்ட் சங்கங்களையும் ஊக்குவிக்கிறேன்.

நீர் மற்றும் தூய்மைத் திட்டங்கள், ரோட்டராக்ட் மற்றும் அறக்கட்டளை ஆகியவற்றை ஒன்றாகச் சேர்க்கும்போது, இவை அனைத்தும் உங்கள் வாழ்க்கையின் ஒரு பெரிய பகுதியாகிவிடும்.

**பாரி ரசின்**

TRF அறங்காவலர் தலைவர்



# எதிர்காலத்திற்கான முதலீடு



பிலிப்பின்ஸின் மணிலாவில் உள்ள டீ லாஸ் சான்டோஸ் மருத்துவ மையத்திற்கு சமீபத்தில் சென்றிருந்தபோது, மகடி மேற்கு ரோட்டரி சங்கம், மேற்கொண்ட திட்டத்தின் கீழ், பிறவியிலேயே குறைபாடுள்ள ஒரு குழந்தைக்கு நடைபெற்ற இதய அறுவைச்சிகிச்சையை நான் காண நேர்ந்தது. கடந்த 19 ஆண்டுகளாக இந்த சங்கம், குழந்தைகளுக்கான இதய அறுவைச் சிகிச்சையை TRF மானிய உதவியுடன் செய்து வருகிறது.

அறுவைச்சிகிச்சைக்கு முந்தைய வார்டில் 10 குழந்தைகள், தங்கள் தாய்மார்களுடன் அறுவைச் சிகிச்சைக்காக காத்திருந்ததை நான் பார்த்தேன். அதாவது, அறுவைச்சிகிச்சை நல்லபடியாக நடக்கவேண்டுமே என்ற கவலை ஒரு பக்கமும், ரோட்டரியின் முயற்சியால் தங்கள் குழந்தை நல்வாழ்க்கையைத் தொடங்க வாய்ப்பு கிடைத்திருப்பதற்கான நம்பிக்கை ஒரு பக்கமும் அவர்களுக்கு இருந்தது. உண்மையில் நோய்வாய்ப்பட்ட, ஏழை, படிக்காத மற்றும் வீடற்றவர்களுக்கு TRF-தான் நம்பிக்கையை அளிக்கிறது.

ஒன்று மட்டும் நிச்சயம். TRF மானியங்கள் ரோட்டரியை குறிப்பிடத்தக்க வகையில் மாற்றியமைக்கின்றன. அவற்றின் தாக்கம் பயனாளிகளுக்கு உதவுவதைத்தாண்டி நீண்டுள்ளது. அவை உறுப்பினர்களை ஈடுபடுத்துகின்றன. பொதுமக்களுக்கு ரோட்டரியை நேர்மறையாக சித்தரிக்கின்றன. மேலும் உறுப்பினர்களைத் தக்கவைப்பதற்கான மதிப்புமிக்க கருவியாகவும் செயல்படுகின்றன.

ரோட்டரியின் 119 வது ஆண்டு நிறைவை நாம் கொண்டாடும் இந்த வேளையில், கடந்த காலத்தை கட்டிக்காத்து எதிர்காலத்தை நோக்கி முன்னேற வேண்டிய நேரம் இது. எதிர்காலத்தில் ரோட்டரி மிகவும் மதிப்புக்குரியதாகவும் முன்பைவிட பொருத்தமானதாகவும் இருக்க வேண்டும். TRF-க்கு நன்றி.

ஒவ்வொரு ஆண்டும் நம்மால் முடிந்ததைக் கொடுத்து TRF-ஐ வலுப்படுத்துவது நமது கடமையாகும். பங்கேற்பாளர்கள் மகிழ்ச்சியுடன் மற்றும் நிபந்தனை யின்றி ஒரு நன்கொடையை வழங்கும் போது அவர்களின் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை என்பதை ஆய்வுகள் காட்டுகின்றன.

**பரத் பாண்ட்யா**

TRF அறங்காவலர் துணை தலைவர்

# Rotarians!

Visiting Chennai
for business?

Looking for a
compact meeting hall?



Use our air-conditioned Board Room with a seating capacity of 16 persons at the office of the Rotary News Trust.

**Tariff:**

**₹2,500 for 2 hours**
**₹5,000 for 4 hours**
**₹1,000 for every additional hour**

Phone: 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org


## உலக ரோட்டரி எண்ணிக்கை

| | | |
|---|---|---|
| ரோட்டரி சங்கங்கள் | : | 36,851 |
| ரோட்டராக்ட் சங்கங்கள் | : | 10,732 |
| இன்டராக்ட் சங்கங்கள் | : | 15,291 |
| ரோட்டரி கம்யூனிட்டி கார்ப்ஸ் (RCC) | : | 13,319 |
| ரோட்டரியினர் | : | 1,172,671 |
| ரோட்டராக்டர்கள் | : | 161,606 |
| இன்டராக்டர்கள் | : | 351,785 |

*As on February 20, 2024*

## ரோட்டரி உறுப்பினர் எண்ணிக்கை

As on February 1, 2024

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians (%) | Rotaract Clubs | Rotaract Members | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|---|
| 2981 | 140 | 6,011 | 6.08 | 73 | 503 | 34 | 254 |
| 2982 | 84 | 3,777 | 6.15 | 42 | 885 | 95 | 181 |
| 3000 | 140 | 5,970 | 11.92 | 120 | 1,782 | 250 | 216 |
| 3011 | 135 | 5,066 | 29.50 | 88 | 2,387 | 153 | 37 |
| 3012 | 167 | 4,168 | 24.52 | 77 | 1,147 | 100 | 61 |
| 3020 | 80 | 4,705 | 7.53 | 46 | 845 | 121 | 351 |
| 3030 | 100 | 5,699 | 16.58 | 50 | 814 | 521 | 384 |
| 3040 | 111 | 2,405 | 14.28 | 41 | 800 | 79 | 213 |
| 3053 | 72 | 2,893 | 16.60 | 27 | 408 | 42 | 131 |
| 3055 | 76 | 3,013 | 12.39 | 69 | 1,076 | 74 | 377 |
| 3056 | 87 | 3,751 | 24.37 | 34 | 461 | 105 | 201 |
| 3060 | 103 | 5,149 | 15.86 | 68 | 2,241 | 63 | 144 |
| 3070 | 119 | 3,260 | 15.86 | 49 | 594 | 52 | 63 |
| 3080 | 108 | 4,266 | 12.58 | 63 | 1,854 | 172 | 124 |
| 3090 | 125 | 2,675 | 6.13 | 20 | 367 | 194 | 166 |
| 3100 | 110 | 2,206 | 10.83 | 13 | 58 | 36 | 151 |
| 3110 | 138 | 3,782 | 11.30 | 18 | 127 | 48 | 108 |
| 3120 | 89 | 3,645 | 15.64 | 45 | 573 | 28 | 55 |
| 3131 | 141 | 5,650 | 30.94 | 122 | 2,886 | 264 | 149 |
| 3132 | 91 | 3,687 | 13.77 | 44 | 638 | 125 | 207 |
| 3141 | 115 | 6,299 | 27.58 | 140 | 5,865 | 172 | 226 |
| 3142 | 105 | 3,792 | 21.44 | 64 | 2,283 | 116 | 96 |
| 3150 | 109 | 4,312 | 13.49 | 156 | 2,018 | 113 | 130 |
| 3160 | 79 | 2,583 | 8.79 | 32 | 257 | 95 | 82 |
| 3170 | 151 | 6,662 | 15.16 | 123 | 1,914 | 199 | 180 |
| 3181 | 87 | 3,660 | 10.57 | 44 | 479 | 94 | 121 |
| 3182 | 86 | 3,687 | 10.45 | 47 | 235 | 106 | 103 |
| 3191 | 93 | 3,500 | 18.22 | 90 | 3,113 | 148 | 35 |
| 3192 | 83 | 3,442 | 21.38 | 85 | 2,376 | 136 | 40 |
| 3201 | 175 | 6,770 | 9.93 | 139 | 2,612 | 102 | 93 |
| 3203 | 95 | 4,866 | 7.22 | 83 | 1,191 | 189 | 39 |
| 3204 | 76 | 2,452 | 6.97 | 24 | 237 | 17 | 13 |
| 3211 | 160 | 5,122 | 8.42 | 9 | 97 | 20 | 135 |
| 3212 | 124 | 4,642 | 11.36 | 96 | 3,715 | 167 | 153 |
| 3231 | 95 | 3,394 | 6.95 | 39 | 515 | 46 | 417 |
| 3232 | 188 | 6,215 | 19.89 | 130 | 5,134 | 158 | 100 |
| 3240 | 103 | 3,524 | 16.84 | 47 | 785 | 69 | 230 |
| 3250 | 106 | 4,076 | 22.20 | 71 | 983 | 65 | 191 |
| 3261 | 98 | 3,313 | 22.09 | 25 | 252 | 32 | 45 |
| 3262 | 115 | 3,773 | 15.62 | 78 | 759 | 645 | 286 |
| 3291 | 144 | 3,817 | 25.89 | | | 73 | 742 |
| **India Total** | **4,603** | **171,679** | | **2,631** | **55,266** | **5,318** | **7,030** |
| 3220 | 69 | 1,961 | 16.52 | 97 | 4,093 | 80 | 77 |
| 3271 | 108 | 1,512 | 21.05 | 194 | 2,075 | 333 | 28 |
| 0063 (3272) | 126 | 1,300 | 18.57 | 97 | 1,281 | 26 | 47 |
| 0064 (3281) | 332 | 7,437 | 17.54 | 249 | 1,764 | 143 | 213 |
| 0065 (3282) | 179 | 3,530 | 9.58 | 179 | 1,352 | 27 | 45 |
| 3292 | 154 | 5,450 | 18.67 | 185 | 5,373 | 124 | 135 |
| **S Asia Total** | **5,571** | **192,869** | **15.69** | **3,632** | **71,204** | **6,051** | **7,575** |

Source: RI South Asia Office

# புற்று நோயை எதிர்த்துப் போராடும் இலங்கை ரோட்டேரியர்கள்

ரஷீதா பகத்

முனகல்கள் அலறல்களாக மாறாத ஒரு உலகத்தை கற்பனை செய்து பாருங்கள். அங்கே சிறிய அசாதாரணங்கள் அசுரர்களாக உருவெடுக்கும் முன் பிடிபடுகின்றன. இது தான் முன்கூட்டியே கண்டறிதலின் மாற்றும் சக்தியாகும், குறிப்பாக மார்பக மற்றும் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்களுக்கு. ஒரு மேமோகிராமால் உங்கள் விதியை மாற்றி எழுத முடியும். ஒரு சோதனைக் கருவியானது கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயை ஆரம்ப கட்டத்திலே கண்டறிந்து ஆரோக்கியமான எதிர்காலத்தைத் திறக்கும் திறவு கோலை வைத்திருக்கும் என்கிறார் PRIP ரவீந்திரன்.

RC கொழும்பு, இலங்கை, RID 3220, மற்றும் RC பர்மிங்காம், RC அலபாமா ஆகியவை ரோட்டரி அறக்கட்டளையுடன் இணைந்து செயல்பட முன்வந்தன. நம்பிக்கை பிரகாசமாக இருக்கும் போதே, புற்றுநோயை முன்கூட்டியே கண்டறியும் பணியை நாங்கள் மேற்கொண்டோம்'' என திட்டத்தின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரான கொழும்பை சேர்ந்த நிர்மலி சமரதுங்கா கூறினார்.

சங்கத்தின் முன்னாள் தலைவர் டெரெக் விஜயரத்னே மேலும் தெரிவிக்கையில்: "முன்கூட்டிய கண்டறிதல் மையத்தை மட்டுமல்ல, எதிர்காலத்திற்கான பாலத்தை உருவாக்குவதற்கும் நாங்கள் புறப்பட்டுள்ளோம்,'' என்றார்.

### ஒரு ரோட்டரி, அரசு, TRF கூட்டாண்மை

அவர்கள் தனியாக கட்டிடம் மற்றும் உபகரணங்களுடன் ஒரு தனி வசதியை அமைத்து, முன்கூட்டியே கண்டறிதல் மற்றும் புற்றுநோய்த் தடுப்பு ஸ்கிரீனிங்கிற்காக முற்றிலும் அர்ப்பணித்துள்ளனர், மேலும் அத்தகைய சேவைகளை எந்த கட்டணமும் இல்லாமல் வழங்குகிறார்கள். மார்பகம், கர்ப்பப்பை வாய் மற்றும் வாய்வழி புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிவதற்கான பரிசோதனையை மையம் வழங்குகிறது.

இலங்கையில், அனைத்து புற்றுநோய்களிலும் மார்பகப் புற்றுநோய்தான் அதிக அளவில் உள்ளது; இந்த ரோட்டரி மையம் ஒரு முழு அளவிலான மார்பக புற்றுநோய் பரிசோதனை சேவையை வழங்குகிறது. முதலில் மேம்பட்ட டிஜிட்டல் மேமோகிராபி இயந்திரம் மற்றும் பின்னர் அல்ட்ரா சவுண்ட் இயந்திரம் ஆகியவற்றைக் கொண்டு கண்டறிந்து உறுதிப் படுத்தப்படுகிறது. இந்த மையம் இதுவரை 95,000-க்கும் மேற்பட்ட பெண்களை பரிசோதித்துள்ளது, மேலும் 25,000-க்கும் மேற்பட்ட அசாதாரணங்களைக் கண்டறிந்து மேலும் விசாரணை செய்துள்ளது. இவை அனைத்தும் இலவசமாக.

இந்த மையம் மிகவும் சிறப்பாக செயல்பட, இது நாட்டின் தேசிய மார்பக புற்றுநோய் பரிசோதனை திட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்டது - இது ரோட்டரி முயற்சிகளுக்கு அரசாங்கத்தின் குறிப்பிடத்தக்க அங்கீகாரம்.

ரோட்டரி கொழும்பு திட்டம் பற்றி நாங்கள் பேசும் போதெல்லாம், நாங்கள் இரண்டு எண்களை மட்டுமே பயன்படுத்தினோம்; எத்தனை பெண்கள் பரிசோதிக்கப்பட்டுள்ளனர், மேலும் எத்தனை பேர் கூடுதல் விசாரணை தேவைப்படும்



**புரிந்துணர்வு ஒப்பந்தம்: (இடமிருந்து அமர்ந்து)** *தில்மா தலைவர் தில்ஹான் பெர்னாண்டோ, இலங்கை சுகாதார செயலாளர்* Dr P B *மஹிபால,* RC *கொழும்பு தலைவர் மிகார அல்விஸ் மற்றும்* RI *தலைவர் கோர்டன் மெக்கினலி.* **(இடமிருந்து நின்று)** PDG *புபுது டி சொய்சா,* DGN *குமார் சுந்தரராஜ்,* PRIP K R *ரவீந்திரன்,* RI *இயக்குநர் ராஜு சுப்ரமணியன் மற்றும்* RID 3220 DG *ஜெரோம் ராஜேந்திரம்.*

அசாதாரணங்களைக் கொண்டு உள்ளனர். அந்த எண்ணிக்கை தான் எங்கள் சங்கத்தின் வெற்றியின் அளவுகோலாக இருந்தது என சமரதுங்கா கூறுகிறார்.

முன்னாள் தலைவர் டோனி அலெஸ் மேலும் கூறுகையில், ஸ்கிரீனிங் செயல்முறை புற்றுநோய் பயணத்தின் முதல் படி மட்டுமே. எல்லாவற்றிற்கும் மேலாக, ஒவ்வொரு பாசிடிவ் முடிவு உண்மையில் வெற்றியல்ல, முதல் படி மட்டுமே.

**கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயை முழுமையாக நீக்கலாம்**

மார்பகப் புற்றுநோயைத் தவிர, இலங்கையில் ஒவ்வொரு வருடமும் கிட்டத்தட்ட 1500 பெண்கள் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர்; ஒவ்வொரு ஆண்டும் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயால் இறப்பவர்களின் எண்ணிக்கை 700-க்கும் அதிகமாக உள்ளது.

பர்மிங்காம் சங்கத்தின் புற்றுநோய் நிபுணரான டாக்டர் எட்வர்ட் பார்ட்ரிட்ஜ், கிட்டத்தட்ட எல்லா துன்பங்களையும் தடுத்திருக்கலாம் என்று சுட்டிக் காட்டினார், ஏனெனில் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் எப்போதும் HPV எனப்படும் மனித பாப்பிலோமா வைரஸின் விளைவாகும். மேலும் தடுப்பூசி கொண்ட ஒரே புற்றுநோய் இது வாகும். முற்றிலும் தடுக்கக்கூடிய ஒரே புற்றுநோய் என்பதால் முழுமையான நீக்குதலுக்கான சாத்தியம் இதற்கு உள்ளது.

இளம்பெண்களுக்கு HPV தடுப்பூசி போடுவது அவர்களை நோயிலிருந்து பாதுகாக்கிறது என்றும், HPVயை ஸ்கிரீனிங்கில் கண்டறிதல், புற்றுநோய்க்கு முந்திய நிலையில் இருக்கும் பெண்களை அடையாளம் காணும் என்றும், இது ஆரம்பத்திலேயே சிகிச்சை அளிக்கப்பட்டு முழுமையான புற்றுநோயாக மாறாமல் தடுக்கலாம் என்றும் அவர் விளக்கினார்.

இதனை அறிந்ததும் கொழும்பு ரோட்டரி உறுப்பினர்கள் மத்தியில் பெரும் மகிழ்ச்சி ஏற்பட்டது. “எங்கள் நாட்டிலிருந்து கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயை முழுமையாக அகற்ற முடியும் என்பதை நாங்கள் உணர்ந்தோம்” என்று அலெஸ் கூறினார்.

எனவே, கோட்பாட்டளவில், 10–14 வயதுக்குட்பட்ட அனைத்து சிறுமிகளுக்கும் தடுப்பூசி போடுவதும், 35 முதல் 45 வயதுக்குட்பட்ட பெண்களுக்கு HPV வைரஸுக்குப் பரிசோதனை செய்வதும் செய்யவேண்டிய பணிகள். தடுப்பூசி வாழ்நாள் முழுவதும் நோய் எதிர்ப்பு சக்தியை அளிக்கிறது மற்றும் அதனுடன் சோதனையானது பெண்களுக்கு ஏற்கனவே தொற்றியிருக்கும் வைரஸைக் கண்டறிய உதவுகிறது. பரிசோதிக்கப்பட்ட பெண்களில் சுமார் 7 சதவீதம் பேர் HPV வைரஸால் பாதிக்கப்பட்டிருந்தனர்.

**தடுப்பூசிகளின் முழு செலவும் நிதியளிக்கப்படுகிறது**

தடுப்பூசிகளின் முழுச் செலவுக்கும் நிதியுதவி செய்யவேண்டும் என்ற ரோட்டரியின் கோரிக்கையை ஏற்று அரசாங்கம் அதன் அர்ப்பணிப்பைக் காட்டியது; இது ரோட்டரிக்கு ஒரு மாபெரும் வெற்றி! இதன் மூலம், நாடு 90 சதவீதத்திற்கும் அதிகமான தடுப்பூசி அளவை எட்டியுள்ளது. எட் பார்ட்ரிட்ஜ் இந்த வகையான எண்கள் உலகில் எங்கும் கேள்விப்படாதவை






*மேமோகிராபி கருவிகள் கையளிக்கும் நிகழ்வில்: PRIP K R ரவீந்திரன், PDG புபுது டி சொய்சா மற்றும் புற்றுநோய் எதிர்ப்பு திட்டத்தின் முக்கிய உறுப்பினர்கள்.*

என்று உறுதிப்படுத்தினார்.

ரோட்டரி, மேம்பட்ட தொழில் நுட்பமான கோபாஸ் 4800 HPV டிஎன்ஏ இயந்திரத்தை பரிசளித்தது, இது அதிக எண்ணிக்கையில் சோதனை செய்து கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயை உண்டாக்கும் அதிக ஆபத்துள்ள வைரஸ் விகாரங்களைக் கண்டறியும் திறன் கொண்டது. கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயை உண்டாக்கும் வைரஸைக் கண்டறியும் இந்த சோதனையானது, பெரும்பாலும் எதிர்ப்பை கொண்டிருக்கும் மற்றும் முடிவுகளைப் பெற அதிக நேரம் எடுக்கும் பாப் ஸ்மியர் திட்டங்களின் சிக்கலான தன்மையுடன் ஒப்பிடு கையில், மிகவும் சாத்தியமானது மற்றும் சுலபமானது.

ஸ்கிரீனிங்கின் அவசியத்தையும், கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிவதன் அவசியத்தையும் பற்றி பொது மக்களிடம் அதிக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, நாடு தழுவிய விரிவான விளம்பரத் திட்டத்தையும் சங்கம் நடத்தியது.

RC பர்மிங்காம், அலபாமா பல்கலைக்கழகத்தின் புகழ்பெற்ற O'Neal புற்றுநோய் மையத்திலிருந்து தங்கள் நிபுணர்களை வரவழைத்து, மருத்துவச்சிகளுக்கு முக்கியத்துவம் அளித்து பொது சுகாதாரப் பணியாளர்களுக்கான பயிற்சியாளர் திட்டத்தை உருவாக்க உதவியது. இலங்கையில் மருத்துவச்சி முறை மிகவும் பயனுள்ளதாக உள்ளது. இதற்கிடையில், தடுப்பூசிகளை வழங்குவதற்கான தனது கடமையை அரசாங்கம் நிறைவேற்றியது.



### கார்ப்பரேட் கூட்டாண்மை

எவ்வாறாயினும், அரசாங்கத்தின் பொருளாதார வீழ்ச்சியின் வடிவத்தில் பேரழிவு ஏற்பட்டது மற்றும் ரோட்டரி வழங்கிய கையிருப்பு முடிந்ததும் உறுதியளித்தபடி சோதனை கருவி களை வழங்குவதற்கான ஆதாரங்கள் அவரிடம் இல்லை.

தடுப்பூசி மட்டும் போதாது. இது தீவிரமான தாக்கத்தை ஏற்படுத்த ஸ்கிரீனிங் மற்றும் சோதனை செயல்முறையுடன் கைகோர்க்க வேண்டும்'' என சமரதுங்கா குறிப்பிடுகிறார்.

இது ஒரு கடுமையான பின்னடைவாக இருந்தது, ஆனால் கொழும்பு ரோட்டேரியர்கள் இதனால் துவண்டு போகவில்லை. அரசாங்கம் விட்டுச் சென்ற வெற்றிடத்தை நிரப்ப அவர்கள் ஒரு பெருநிறுவன நன்கொடையாளரைத் தேடி ஊக்கப்படுத்தினர். தில்மா அறக்கட்டளை இத்திடத்திற்குள் அடியெடுத்து வைத்தது. ரோட்டரி மற்றும் அரசாங்கத்துடன் இணைந்து

# தில்மா எப்படி திட்டத்திற்குள் கொண்டு வரப்பட்டனர்

*இலங்கையில் இருந்து கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயை ஒழிப்பதற்கான காரணத்திற்காக முதல் வருடத்தில் SLR 75 மில்லியன் என்ற இவ்வளவு பெரிய அர்ப்பணிப்பைச் செய்துள்ள தனது குடும்ப அறக்கட்டளை பற்றி ரோட்டரி நியூஸிடம் பேசிய தில்மா டீயின் தலைவரும், பிரதான அதிகாரியுமான தில்ஹான் பெர்னாண்டோ, "வரிக்கு முந்தைய லாபத்தில் குறைந்தபட்சம் 15 சதவிகிதம் மனிதநேயத்திற்குச் செல்ல வேண்டும் என்பதே எனது மறைந்த தந்தையின் வணிகத் தத்துவம்" என கூறினார்.*

*சமீபத்தில் PRIP K R ரவீந்திரனுடன் அவர் நடந்து கொண்டிருந்தபோது, இந்த திட்டம் மற்றும் இலங்கையில் தடுக்கக்கூடிய மற்றும் குணப்படுத்தக்கூடிய கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயை இது எவ்வாறு விரிவாகக் கையாள்கிறது என்பதைப் பற்றி அவர் என்னிடம் கூறினார். இந்த சிறந்த திட்டத்திற்கு அரசாங்கம் பெரும் ஆதரவை வழங்கியிருந்தாலும், நாட்டின் கடினமான பொருளாதார சூழ்நிலையில் போட்டியிடும் முன்னுரிமைகளால் இத்திட்டத்திற்கு பிற ஆதாரங்களின் உதவி தேவை என்று அவர் என்னிடம் கூறினார். இதை ரவி என்னிடம் கூறியபோது, இதை சரி செய்ய வேண்டும் என்று நான் உணர்ந்தேன், இன்று நாங்கள் அரசு மற்றும் ரோட்டரியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.*

*இந்த ஆண்டு அவரது அறக்கட்டளை இந்த திட்டத்திற்காக SLR 75 மில்லியனை வழங்கி இருக்க," நாங்கள் மேற்கொள்ளும் எந்தவொரு தொழிலிலும் செய்வது போலவே, ஒவ்வொரு வருடமும் மேற்கொள்ளும் பணியை நாங்கள் மதிப்பீடு செய்வோம்... அந்த மதிப்பீட்டிற்குப் பிறகு, அடுத்த சில ஆண்டுகளுக்கு நாங்கள் அதற்கேற்ப உதவுவோம்."*

*தில்மா தொண்டு நிறுவனமானது அதன் தொண்டு திட்டங்களை நேரடியாக செயல்படுத்துகிறது என்றும் அவர் கூறினார்; "இது தவிர, நாங்கள் குழந்தைகள், பெண்கள், வீட்டுவசதி, சத்துணவு போன்றவற்றுக்காக 150 திட்டங்களைச் செய்கிறோம். இந்தத் திட்டங்களைச் செயல்படுத்த 300 பேர் களத்தில் உள்ளனர்" என்று அவர் கூறினார்.*

*அப்படியென்றால் அவர் ரோட்டேரியரா? தில்ஹான் புன்னகைத்து, நான் ஒரு ரோட்டேரியர் மற்றும் RC கொழும்பு மெட்ரோபொலிட்டன் உறுப்பினராக இருந்தேன், ஆனால் நான் பணிக்காக நிறைய பயணம் செய்ய வேண்டியிருந்தது அதனால் சங்கத்திற்கு சரியாக வராததால் வெளியேற்றப்பட்டேன்! ஆனால் இப்போது அவர்கள் வருகைக்கு எந்த வற்புறுத்தலும் இல்லை என்று சொல்லி அழைத்திருக்கிறார்கள், எனவே நான் மீண்டும் சேர திட்டமிட்டுள்ளேன்.*

*2030-ம் ஆண்டளவில் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயை இலங்கையில் இருந்து அகற்றும் என நம்புகின்ற இத்திட்டத்தின் நிலைத்தன்மை மற்றும் தொடர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கு கார்ப்பரேட், அரசாங்கம் மற்றும் ரோட்டேரியர்கள் உறுதிபூண்டுள்ள நிலையில், தில்மா நிறுவனர் மறைந்த மெர்ரில் ஒ பெர்னாண்டோவின் நெருங்கிய நண்பரான ரவீந்திரன், மெர்ரிலின் தத்துவம் 'வணிகம் என்பது மனித சேவையின் விஷயம்!' அவர்களின் அறக்கட்டளையின் அறங்காவலர் என்ற முறையில், அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் தங்களின் பரோபகார முயற்சிகளுக்காக ஆண்டுக்கு $3 மில்லியனுக்கு மேல் செலவிடுகிறார்கள் என்பதை நான் உங்களுக்கு நேரடியாகச் சொல்ல முடியும். அவர்களுக்கு நன்றி, 2030 ஆம் ஆண்டளவில் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயை இல்லாதொழிக்கும் எங்களின் இலக்கு மீண்டும் பாதையில் திரும்பியதில் RC கொழும்புவில் உள்ள நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்!*



**இடமிருந்து:** *RI தலைவர் கோர்டன் மெக்கினலி, தில்மா டீ தலைவர் தில்ஹான் பெர்னாண்டோ மற்றும் PRIP K R ரவீந்திரன்.*

தில்மா அறக்கட்டளை, 2030-ம் ஆண்டளவில் இலங்கை கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயிலிருந்து விடுபடுவதற்கான கூட்டுக் கண்ணோட்டத்துடன் ஸ்கிரீனிங் நடவடிக்கையின் நிலைத்தன்மை யையும் தொடர்ச்சியையும் உறுதிசெய்யும்.

### புரிந்துணர்வு ஒப்பந்தம்

இந்த கூட்டாண்மையை முறைப் படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் MJF (தில்மா) அறக்கட்டளை மற்றும் திட்ட பங்காளர்களுக்கு இடையே இந்த ஆண்டு ஜனவரி 23 அன்று கையெழுத்தானது. MJF (தில்மா) அறக்கட்டளை SLR 75 மில்லியன் வழங்குவதாக உறுதியளித்தது, அரசாங்கம்

கூடுதலாக SLR 35 மில்லியனை வழங்குவதாக உறுதியளிக்க RC கொழும்பு உறுப்பினர்கள் இந்த கூட்டாண்மையை உறுதிப்படுத்த மற்றொரு SLR 26 மில்லியனை நன்கொடையாக வழங்கினர்.

2030-க்குள் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயை ஒழிக்கும் இலக்கு மீண்டும் புத்துயிர் பெற்றது!

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தில்மா டீயின் தலைவர் தில்ஹான் பெர்னாண்டோ, RC கொழும்பு தலைவர் மிகாரா அல்விஸ் மற்றும் இலங்கையின் சுகாதார செயலாளர் டாக்டர் P எமஹிபாலா ஆகியோர் RI தலைவர் கோர்டன் மெக்கினலி மற்றும் RI இயக்குனர் ராஜு சுப்ரமணியன் ஆகியோர் முன்னிலையில் கையெழுத்திட்டனர்.

ரோட்டரி மற்றும் அதன் பங்காளர்களான தில்மா அறக்கட்டளை மற்றும் இலங்கை அரசு ஆகியவை மார்பக மற்றும் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்க்கு எதிரான போராட்டத்தில் புதிய அத்தியாயத்தை எழுதி வருகின்றன. ஒவ்வொரு மேமோகிராம், ஒவ்வொரு குழந்தைக்கும் போடப்படும் தடுப்பூசி, ஒவ்வொரு பெண்ணும் பரிசோதிக்கப்படுவது ஒரு உயிரைக் காப்பாற்றும். ரோட்டரி முக்கிய பங்காளராக செயல்படும் கூட்டு நடவடிக்கையின் சக்திக்கு இது ஒரு சான்றாக இருந்தது.

தில்மா இதனுள் வந்தது எங்களுக்கு ஒரு வரப்ரசாதம்; இது கார்ப்பரேட் தலைமையின் சிறந்த உதாரணத்தை பிரதிபலிக்கிறது'' என திட்டத்தை பற்றி ரவீந்திரன் கூறுகிறார்.



*RC பர்மிங்காம் நிர்வாக இயக்குனர் சூசன் ஜாக்சன் அவரது சங்கத்தின் மற்ற உறுப்பினர்களுடன்.*

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

# திருமணங்களுக்கு நிதியுதவும் ரோட்டேரியன்கள்!

ரோட்டரி செய்திக்குழு

கடந்த 27 ஆண்டுகளாக RID 3090-க்கு உட்பட்ட உக்லான மண்டி ரோட்டரி சங்கம், மாவட்டத்தில் ஏழை குடும்பங்களைச் சேர்ந்த இளம் பெண்களின் திருமணத்திற்கு நிதியுதவி செய்து வருகிறது. ரோட்டேரியன்கள் புதுமணத் தம்பதிகளுக்கு பாத்திரங்கள், மெத்தை, தலையணைகள், உடைகள், மரச்சாமான்கள் உள்ளிட்ட ஒரு குடும்பத்துக்கு தேவையான பொருள்களையும் வழங்கி வருகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 14-ஆம் தேதி மகரசங்கராந்தி தினத்தன்று திருமணம் நடத்தி வைக்கப்படும் என்று சங்கத்தின் செயலாளர் சுகன் சந்த் கோயல் தெரிவித்தார்.

இந்த ஆண்டு உக்லானா மண்டி ரோட்ராக்ட் சங்கத்துடன் இணைந்து குடும்பத்தினர் தேர்வு செய்த மணமகனுடன் ஐந்து பெண்களுக்கு திருமணம் நடத்தி வைக்கப்பட்டது. திருமணத்துக்கும், புதுமணத் தம்பதிகளுக்கு சீர்வரிசை கொடுக்கவும் ரூ.4.5 லட்சம் நிதி திரட்டப்பட்டது. DG கன்ஷியாம் கன்சால், DRR விபுல் மிட்டல், மாவட்ட செயலர் நாராயண் கர்க் மற்றும் உக்லானா மண்டி ரோட்டரி சங்கத் தலைவர் விஜய் கர்க், ரோட்ராக்ட் சங்கத் தலைவர் ரஜத் ஆகியோர் திருமண நிகழ்வில் கலந்து கொண்டனர். இதுவரை 400 ஏழைப் பெண்களுக்கு திருமணம் செய்துவைக்கப்பட்டுள்ளது. ■



*DG கன்ஷ்யாம் கன்சல், சங்கத் தலைவர் விஜய் கார்க், மண்டல செயலாளர் நரேன் கார்க், AG விஜேந்தர் கர் மற்றும் DRR விபுல் மிட்டல் திருமண விழாவில்.*

# சூரத்தில் ஒரு மிகப் பெரிய CPR பயிற்சி முன்னெடுப்பு

ரோட்டரி செய்திக்குழு

திடீர் இதய அதிர்ச்சி வந்து துன்பப்படும் ஒருவருக்கு நாம் செய்யக்கூடிய மிகச் சிறந்த உதவி, CPR தான். மீளுயிர்ப்புச் சுவாசம் அல்லது இதய நுரையீரல் செயல் தூண்டல் எனப்படும் CPR இதயத் துடிப்பை மீட்கக்கூடியது, மதிப்பு மிக்க உயிர்களைக் காக்க உதவக்கூடியது. நாம் ஒவ்வொருவரும் CPR-ல் பயிற்சி பெறவேண்டும் என்கிறார் RC சூரத் ரிவர்சைட், RID 3060, நடத்தும் சஞ்சீவனித் திட்டம் என்ற பரவலான CPR பயிற்சித் திட்டத்தை வழிநடத்தும் டாக்டர் பிரசாந்த் கரியா.

SCA (Sudden Cardiac Arrest) எனப்படும் திடீர் இதய நிறுத்தம் யாருக்கு வேண்டுமானாலும் நடக்கலாம். நல்ல உடற்தகுதியுடன் இருக்கிற, ஆடுகளத்தில் போட்டியில் விளையாடிக்கொண்டிருக்கிற ஒரு வீரர் திடீரென்று சுருண்டு விழலாம், அல்லது, சிறப்பாக நடனமாடிக் கொண்டிருக்கிற ஒரு கலைஞருக்கு SCA வந்து அவர் தரையில் விழலாம். “SCA வருகிற 95% பேர் இறந்துபோகிறார்கள். ஏனெனில், ‘தங்க’ நேரத்தின்போது, அதாவது, அதிர்ச்சி வந்த முதல் 4 முதல் 6 நிமிடங்களுக்குள் அவர்களுக்கு உயிர் காக்கும் ஆதரவு கிடைப்பதில்லை” என்கிறார் Dr கரியா. SCA உடலின் பல உறுப்புகளுக்கு இரத்த ஓட்டத்தை நிறுத்திவிடுகிறது. இரத்த ஓட்டம் நிற்பதால், ஆக்சிஜன் மற்றும் மற்ற ஊட்டச்சத்துப் பொருட்கள் மூளைக்குக் கிடைப்பதில்லை, அதனால், அவர்கள் மயங்கி விடுகிறார்கள்.

மேம்பட்ட உதவி கிடைக்கும் வரை மூளைக்கும் இதயத்துக்கும் இரத்த ஓட்டத்தைப் பராமரிப்பதற்குக் கிடைக்கிற உயிர் காக்கும் ஒரே உத்தி, CPR தான். ஒருவருக்கு எவ்வளவு விரைவாக CPR கொடுக்கப் படுகிறதோ, அந்த அளவுக்கு அவர் உயிர் பிழைக்கும் வாய்ப்பும் மிகுதியாகிறது என்று எச்சரிக்கிறார் Dr கரியா.




*திட்டத் தலைவர் Dr பிரசாந்த் கரியா (இடது) CPR நுட்பத்தை குஜராத் உள்துறை அமைச்சர் ஹர்ஷ் சங்கவி (வலது) அவர்களுக்கு கற்றுக் கொடுக்கிறார்.*

2017ல், மக்களுக்கு CPR பயிற்சி அளித்து, அவர்களை நெருக்கடி நேரத்தில் உயிர் காப்போராக மாற்றுவதற்கெனச் சஞ்சீவனித் திட்டத்தைத் தொடங்கியது RC சூரத் ரிவர்சைட். “கடந்த 6 ஆண்டுகளில், நாங்கள் 500 வகுப்புகளை நடத்தியுள்ளோம், கிட்டத்தட்ட இரண்டு லட்சம் பேருக்குப் பயிற்சி அளித்துள்ளோம். மாணவர்கள், ஆசிரியர்கள், தொழில் வல்லுநர்கள், காவல்துறை அலுவலர்கள், செவி லியர்கள், அவ்வளவு ஏன், கண் தெரியாத, காது கேட்காத, பேச இயலாத பள்ளி மாணவர்கள்கூட எங்களிடம் பயிற்சி பெற்றுள்ளார்கள்’’ என்கிறார் இவர்.■

*Drகரியா மற்றும் அவரது குழுவினர் பிசியோதெரபிஸ்டுகளுக்கான CPR பட்டறையில்.*



# ரோட்டரி–ரோட்ராக்ட் உறவு இன்றும் தொடர்கிறது: RI தலைவர்

ரஷீதா பகத்

கொழும்பில், RI மாவட்டம் 3220-ல் உள்ள ஆர்வமுள்ள ரோட்ராக்டர்கள் மற்றும் இன்டராக்டர்கள் நிரம்பிய அரங்கில், RI தலைவர் கோர்டன் மெக்கினலி மற்றும் RI இயக்குநர் ராஜு சுப்பிரமணியன் இளைஞர்களுடன் கலந்துரையாடி, அவர்களின் கேள்விகளுக்கு பதிலளித்து, அவர்களின் சந்தேகங்களைத் தீர்த்துவைத்து, அவர்கள் செய்யும் திட்டங்களை அங்கீகரித்து நிறுவனத்தை வளர்க்கும் அவர்களின் ஆர்வத்தை ஊக்குவித்தனர்.

RI தலைவர் கோர்டன் மெக்கினலி பேசுகையில், 1984-ல் சௌத் குயின்ஸ்ஃபெர்ரி மூலம் நான் ரோட்டரியில் சேர்ந்தேன் என்பது பரவலாக அறியப்பட்ட விஷயம். ஆனால், நானும் ஒரு ரோட்ராக்டராகத் தான் இருந்தேன். ரோட்ராக்டராக இருந்ததால் ரோட்டரியில் சேரும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. இன்று நான் RI தலைவராக உங்கள் முன் நிற்கிறேன். என்னிடம் ஒருவர், நீங்கள் உறுப்பினராக சேர்ந்தபோது RI தலைவராவதே உங்கள் லட்சியமாக இருந்ததா? என்று கேட்டார். அந்த நேரத்தில் RI-க்கு தலைவர் இருப்பதுகூட எனக்குத் தெரியாது என்பதை நான் ஒப்புக்கொள்ள வேண்டியிருந்தது என்றார்.

ஆனால், அவர் மேலும் கூறுகையில், இந்த அரங்கில் ஒரு RI தலைவர் இருக்கலாம். ஒருநாள் உங்களில் ஒருவர் எங்கள் அமைப்பின் தலைவராக வருவார் என்று நான் நினைக்கிறேன். 200-க்கும் மேற்பட்ட நாடுகளில் 1.4 மில்லியன் மக்களைக் கொண்ட இந்த அற்புதமான ரோட்டரி குடும்பத்தில், உண்மையில் இது ஒரு வாய்ப்பாகும். அனைவரும் ஒரே மாதிரியான மனநிலையில் உலகில்

*RI தலைவர் கோர்டன் மெக்கினலி DIR அமீர் அக்ரமுடன் உரையாடுகிறார். மேலும் (இடமிருந்து) Rtr அம்ஜத் யூசுப், RI இயக்குநர் ராஜு சுப்ரமணியன் மற்றும் RID 3220 DG ஜெரோம் K ராஜேந்திரம் ஆகியோரும் உள்ளனர்.*



## *விருதுகளை துரத்த வேண்டாம்!*

*கொழும்பு சந்திப்பில் மாவட்ட இன்டராக்ட் பிரதிநிதி ஆமிர் அக்ரம், நாங்கள் செய்யும் நல்ல திட்டப் பணிகளை உலக அரங்கில் எவ்வாறு அங்கீகரிக்கிறீர்கள் என்று உதாரணத்தை சுட்டிக்காட்டி ரோட்டரி தலைவர் கோர்டன் மெக்கினலியிடம் கேட்டார். சமீபத்தில் இலங்கையில் கண்டி தேசிய மருத்துவமனைக்கு இரத்தம் தேவைப்பட்டது. அவர்கள் என்னிடம் தொடர்புகொண்டு உதவி கோரினார்கள். நாங்கள் ஒரு பள்ளியில் உள்ள இன்டராக்ட் சங்கம் மூலம் 185 பைகள் இரத்தத்தை சேமித்து அவர்களுக்கு வழங்கினோம். பின்னர் தேசிய மருத்துவமனையிலிருந்து இன்டராக்டர்களுக்கு நன்றி தெரிவித்து ஒரு கடிதம் வந்தது. நீங்கள் தகுந்த சமயத்தில் இரத்தம் கொடுத்து உதவாமல் இருந்தால் பலர் உயிரிழந்திருப்பார்கள் என்று தெரிவித்திருந்தனர்.*

*ரோட்டரி உங்கள் பணியை அங்கீகரித்து ஊக்குவிக்கிறது. மாவட்ட மாநாடு, மண்டல கழக மாநாடு மற்றும் இதர மாநாடுகளில் ரோட்ராக்டர்கள் ஆர்வமுடன் ஈடுபட்டு வருவதை நாங்கள் தொடர்ந்து பார்த்து வருகிறோம் என்று தலைவர் கோர்டன் மெக்கினலி தெரிவித்தார்.*

*RID ராஜு சுப்பிரமணியன் மேலும் கூறுகையில், ரோட்ராக்டர்களுக்கும் இன்டராக்டர்களுக்கும் நான் சொல்ல விரும்பும் அறிவுரை என்னவென்றார், விருதுகளுக்குப் பின்னால் ஓடாதீர்கள். விருதுகள் உங்களைத் தேடிவரட்டும். நீங்கள் நல்ல பணிகளைச் செய்திருந்தால் விருதுகள் உங்களைத் தேடி வரும். RI தலைவரின் பாராட்டு எனக்கு ஒருபோதும் கிடைக்கவில்லை. முன்னாள் தலைவர் ஜான் கென்னி, புதிய சங்கத்தை தொடங்குமாறு என்னிடம் கேட்டுக் கொண்டார். ஆனால், நான் மூன்று சங்கங்களை மூடிவிட்டேன். ஏனென்றால் அவை தொடர்ந்து இருப்பதால் ரோட்டரிக்கு எந்த பயனும் இல்லை என்பதுதான். ஆனால், அது எனக்கு தடையாக இல்லை. நான் இப்போது உங்கள் முன் RI இயக்குநராக அமர்ந்திருக்கிறேன். அப்படியானால் அந்த காகிதத்தின் அர்த்தம் என்ன? அதனால் ஒன்றும் இல்லை. எனவே விருதுகளுக்கு பின்னால் ஓடவேண்டாம் என்றார்.*

*இளைஞர்கள் நிறைந்த கூட்டத்திற்கு அவர் கூறிய அறிவுரை: தயவு செய்து ஒன்றிணைந்து பணியாற்ற கற்றுக்கொள்ளுங்கள், அது ஒன்றுதான் நமது அமைப்பின் வளர்ச்சிக்கு தடையாக இருக்கிறது. நாம் ஒற்றுமையுடன் செயலாற்ற வேண்டும். உலகத்திற்கு ஒற்றுமை முகத்தை நாம் காட்ட வேண்டும். கருத்துவேறுபாடுகள் இருக்கலாம். ஆனால், நாம் ஈகோ பார்க்காமல் அவற்றுக்கு தீர்வுகாண வேண்டும். நாம் ஒற்றுமையை வெளிப்படுத்தி நமது வேலைகளில் கவனம் செலுத்தினால், நமது கதைகளை பகிர்ந்து கொண்டால், நமது இயக்கம் வளரும் என்பது மட்டுமல்ல, நீங்கள் தானாகவே அங்கீகரிக்கப்படுவீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.*

*இலங்கையில் யாழ்ப்பாணம் உள்ளிட்ட பகுதிகளில் பள்ளிகளில் கர்ப்பப்பை வாய் புற்றுநோய் கண்டறியும் முகாம்களை நடத்திய உங்களது பணி சிறப்பானது. அதற்காக உங்களை பாராட்டுகிறேன். உங்கள் கதைகளை பிறரிடம் சொல்லுங்கள். உங்களின் வெற்றிக் கதைகள் மற்றவர்களின் நெஞ்சங்களைத் தொடுமானால் அவர் அல்லது அவள் நிச்சயம் நமது இயக்கத்தில் இணைவார்கள் என்றார்.*

நல்லது செய்வதற்கும் அதை சிறந்த இடமாக மாற்றுவதற்கும் கிடைத்துள்ள நல் வாய்ப்பாகும் ரோட்டரி.

ரோட்டரி தனக்கு வழங்கிய அற்புதமான வாய்ப்பின் மூலம், தனது சொந்த பேரக் குழந்தைகள் மற்றும் உலகில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கு சிறந்த இடமாக உலகத்தை மாற்றுவதே தமது குறிக்கோள் என்று RI தலைவர் மேலும் கூறினார்.

ஆனால், ரோட்ராக்டர்களாக இருப்பது, அவர்கள் தலைவர்களாக வளரவும், திறன்களை வளர்த்துக் கொள்ளவும் உதவும், நாங்கள் மிகவும் வித்தியாசமான மனிதர்கள் என்பதை உணர்ந்து அதை கொண்டாடவும் முடியும். ரக்பி விளையாட்டின் தீவிர ரசிகனான அவர், இளம் வயதில் ரக்பியை ரோட்டரியுடன் ஒப்பிட்டு பார்ப்பார். ரக்பி அணியில் உள்ள பல்வேறு திறமையான வீரர்கள் தங்கள் திறமைகளை ஒரே இடத்துக்கு கொண்டு வருவார்கள். சிலர் வேகமாக ஓடக்கூடியவர்கள், சிலர் வலுவானவர்கள் மற்றும் பந்தை தங்களிடம் வைத்திருப்பவர்கள். வேறு சிலர் பந்தை துல்லியமாக நீண்டதூரம் கடத்திச் செல்பவர். ஆனால், இந்த திறமைகள் ஒன்று சேரும் போதுதான் அணி சாதனை புரிய முடியும்.

அதே நிலைதான் ரோட்டரியிலும். பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ரோட்டேரியன்கள் தங்களின் தனித்துவமான மற்றும் தனிப்பட்ட திறன்களை எந்த ஒரு வேலை மற்றும் இலக்கை அடைய ஒன்று சேரும் போது சாதனை புரிய முடியும். அதனால்தான், எங்களுக்கு மூத்த ரோட்டேரியன்கள் மட்டுமல்ல, இளம் ரோட்ராக்டர்கள் மற்றும் இன்டராக்டர்கள் தேவை. ஏனென்றால் நீங்கள் தான் நிறுவனத்துக்கு தேவையான அதிக ஆற்றலையும், திறனையும் கொண்டு வருகிறீர்கள்.

அதிகாரபூர்வ வலைத்தளத்தின்படி RID 3220 மாவட்டத்தில் 90 ரோட்ராக்ட் சங்கங்கள் 5,000 ரோட்ராக்டர்களுடன் செயல்பட்டு வருகிறது.

கடந்த 18 மாதங்களில் உலகில் 30-க்கும் மேலான நாடுகளுக்கு தாம் பயணித்திருப்பதாக மெக்கினலி தெரிவித்தார். நீங்கள் நாடு விட்டு நாடு, கண்டம் விட்டு கண்டம் பறக்கிறீர்களே. நீங்கள் சோர்வடையாமல் இருப்பது எப்படி? என்று கேட்கிறார்கள். நான் எங்கு சென்றாலும் உங்களைப் போன்ற ரோட்டரி குடும்பத்தைச் சேர்ந்தவர்களை சந்திக்கும்போது பார்வையாளர்களின் ஆற்றலை பார்க்கிறேன். அவர்களைப் பார்க்கும்போது எனக்கு சக்தி கிடைக்கிறது என்று அவர்களிடம் தெரிவித்தேன் என்றார்.

உலகில் நம்பிக்கையை ஏற்படுத்துதல் என்னும் தனது கருபொருள் குறித்து மெக்கினலி பேசுகையில், முன்பைவிட அதிக

நம்பிக்கை தேவைப்படும் ஆண்டாக இதை கருதுகிறேன். உலகில் நாம் தற்போது பிரிந்து நிற்கிறோம். ஆனால், உங்கள் அனைவரையும் உள்ளடக்கிய ரோட்டரி போன்ற ஒற்றுமையான அமைப்பு உலகில் பல வழிகளில் நம்பிக்கையை ஏற்படுத்த முடியும் என்றார். அவர், தமது சமீபத்திய பயணத்தின்போது பல்வேறு வழிகளில் ரோட்டரி மூலம் நம்பிக்கை ஏற்படுத்திய பலரை சந்தித்துள்ளார்.

சமீபத்தில் ஆமதாபாதில் மெக்கினலி, சதீஷ் என்பவரை சந்தித்தார். தனது வாழ்க்கையின் பெரும்பகுதியை சக்கர நாற்காலியில் செலவிட்டவர் அவர், ரோட்டரி சங்கம் ஏற்பாடு செய்திருந்த செயற்கை கால் பொருத்தும் முகாமில் அவரை நான் சந்தித்தேன். சக்கர நாற்காலியில் வந்த அவர், செயற்கை கால்களுடன், மனைவி, குடும்பத்தினருடன் திரும்பிச் சென்றார். ரோட்டரி ஏற்படுத்திய நம்பிக்கைதான் இதற்கு காரணம்.

பாகிஸ்தானில், உலக போலியோ தினத்தில் அகமது என்ற குழந்தையை மெக்கினலி சந்தித்தார். அவருக்கு போலியோ சொட்டு மருந்து கொடுத்தார். குழந்தையின் தாயின் முகத்தில் நன்றி கலந்த மகிழ்ச்சி யைக் கண்டேன். அகமதுவுக்கு இனி போலியோ பயம் இல்லை என்ற மகிழ்ச்சியில் அவர், ரோட்டரி, ரோட்ராக்ட் மற்றும் இன்டராக்ட்டுக்கு நன்றி தெரிவித்தார். நீங்கள் உங்கள் நாட்டு மக்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்தி வருகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். அதற்காக உங்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

RID ராஜு சுப்பிரமணியம் கூறுகையில், ரோட்டேரியன்கள் மற்றும் ரோட்ராக்டர்கள் இருவரும் ஒருவரிடமிருந்து மற்றவர் கற்றுக் கொள்ள முடியும். இது பரஸ்பரம் கற்றல் முறையாகும். நம் இருவருக்கும் எல்லாம் தெரியும் என்று நாம் கருதவேண்டாம். நாம் ஒருவரை ஒருவர் மதிப்பீடு செய்து நாம் வாழும் உலகில் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்த இணைந்து செயல்பட வேண்டும். இந்த கூட்டு சக்தி ஒரு மாயாஜாலத்தை உருவாக்கும். ஆனால், நம்முடையது வாழ்நாள் கூட்டு என்று இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளும் தன்மை வேண்டும்.

புதிய தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்வது மற்றும் புதிய சவால்கள் மற்றும் தொழில்நுட்ப கருவிகளை ஏற்றுக்கொள்வது தொடர்பாக DRR சத்மாவின் ஒரு கேள்விக்கு தலைவர் மெக்கினலி பதிலளிக்கையில், ஸ்காட்லாந்தில் ஜூம் (Zoom) எனப்படும் ஐஸ் லாலியை உதாரணமாக குறிப்பிட்டார். கோவிட் வந்த பின் ஜூம் என்னும் ஆன்லைன் தளம் பற்றி எங்களுக்கு

**இடமிருந்து:** *மாவட்ட இன்டராக்ட் குழுத்தலைவர் மஞ்சுளா S ரத்னசேகர, RID சுப்பிரமணியன், DIR அக்ரம் மற்றும் DG ராஜேந்திரம்.*



கூறும்வரை எங்களுக்குத் தெரிந்த ஜூம் அதுதான். ரோட்டேரியன்கள் வெவ்வேறு டிஜிட்டல் தளங்கள் பற்றி விரைவாக கற்றுக்கொண்டு ஆன்லைனில் சந்திப்புகள் நடத்தி திட்டங்களை செயல்படுத்துகிறார்கள் என்பது எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

சமீபத்தில் ஸ்காட்லாந்தில் பாஸ்போர்ட் கிளப் எனப்படும் ரோட்டரி சங்கம் அமைக்கப்பட்டதை அவர் உதாரணமாக குறிப்பிட்டார். அதன் உறுப்பினர்களில் பலர் கோவிட்டில் தப்பிப்பிழைக்காத சங்கங்களைச் சேர்ந்தவர்கள். ஆனால், மற்றவர்கள் புதிய உறுப்பினர்கள். இந்த அரங்கில் உள்ள ரோட்ராக்டர்கள் மற்றும் இன்டராக்டர்களின் சராசரி வயதைவிட அவர்களுக்கு சற்று அதிகமாக இருக்கலாம். எனது மனைவி ஹீதர் அந்த சங்கத்தின் உறுப்பினர். அவர் விரைவில் சங்கத்தின் தலைவராகப் போகிறார். (அவர் இதுவரை மூன்று முறை தலைவராக இருந்துள்ளார். நான் ஒருமுறை மட்டுமே சங்கத்தின் தலைவராக இருந்துள்ளேன்.) மற்றும் சில உறுப்பினர்கள் முதலில் வாட்ஸ்ஆப் மூலம் இணைவோம் என்று சொன்னபோது அதற்கு பலரும் எதிர்ப்பு தெரிவித்தனர். எங்களுக்கு வாட்ஸ்ஆப் பண்ணத் தெரியாது என்றும் கூறினர். ஆனாலும் குழு தொடங்கப்பட்டது. ஆனால் குறுகிய காலத்திலேயே உறுப்பினர்கள் தங்களுக்குள் வாட்ஸ் ஆப் மூலம் பேசத் தொடங்கினர். தொடர்புகொள்ள இது ஒரு அற்புதமான வழி என்பதை புரிந்துகொண்டனர்.

இடைமறித்த RID சுப்பிரமணியன், DRR சத்மாவிடம் கூறினார்: அந்த கேள்வியை தலைவர் கோர்டன் மெக்கினலி உங்களிடம் எழுப்பியிருக்க வேண்டும் என்றார். இளைஞர்களாகிய நீங்கள் தொழில் நுட்பத்தில் கைதேர்ந்தவர்கள் மட்டுமல்ல, எதிர்கால வாய்ப்புகளைப் பற்றி முழுமையாக அறிந்தவர்கள். எனவே தாக்கத்தை உருவாக்குங்கள். மக்கள் மத்தியில் மட்டுமல்ல, உலகம் முழுவதும். குறிப்பாக ரோட்ராக்டர்களிடம். இந்தியாவில் ரோட்ராக்ட் பாதிக்கப்பட்டுள்ளது.



DIR *அக்ரம்* RI *தலைவர் மெக்கினலிக்கு* Rotary Pin *வைக்கிறார்.*

கடந்த ஆண்டில் 40,000 உறுப்பினர் களை நாங்கள் இழந்துவிட்டோம். அது சிறிய எண்ணிக்கை அல்ல. ஆனால், நாங்கள் மீண்டும் எண்ணிக்கையை உயர்த்த முயற்சித்து வருகிறோம்.

ஒரு அமைப்பு என்ற முறையில் ரோட்டரி, உலகத்துக்கு பல நன்மைகளைச் செய்கிறது என்று அவர் மேலும் கூறினார். ஆனால், உலகம் முழுவதும் போலியோவை முற்றிலுமாக ஒழிக்க நாம் ஆற்றிய பங்கு பலருக்கும் தெரியாது. நீங்கள் தொழில்நுட்பத்தில் கைதேர்ந்தவர்கள் என்பதால் மேலும் தொழில்நுட்ப கருவிகளைப் பயன்படுத்தி நமது செயல்பாடுகள் குறித்து மக்களிடம் விழிப்புணர்வே ஏற்படுத்த வேண்டும்.

மற்றொரு கேள்விக்கு பதிலளித்த மெக்கினலி, உறுப்பினர்களை பணிகளில் ஈடுபடுத்துவதும், தக்கவைத்துக் கொள்வதும் முக்கியமானது. ரோட்ராக்டில் சேரும் அவர்களை நாம்தான் கவனித்துக் கொள்ளவேண்டும். ஏனெனில் பலர் ரோட்டரியில் சேர்ந்தாலும் குறுகிய காலத்திலேயே வெளியேறி விடுகிறார்கள். இப்போதெல்லாம் ரோட்டரியில் சேரும் பத்து பேரில ஒருவர் 12 மாதங்களுக்கு மேல் நீடிப்பதில்லை. நாம் அவர்களை சரிவர பயன்படுத்திக் கொள்ளாததால் தான் அவர்கள் வந்த வேகத்திலேயே வெளியேறுகிறார்கள் என்று புள்ளி விவரங்கள் சொல்கின்றன என்றார்.

ஒரு ஆர்வமுள்ள தோட்டக் காரர் என்ற முறையில் அவர், தனது வீட்டில் உள்ள தோட்டத்தில் உள்ள தாவரங்களை உதாரணமாகக் கூறினார். நான் எதாவது ஒரு தாவரத்தை நடவு செய்யும்போது அது வேரூன்றி வளர்வதை உறுதிசெய்வேன். நமது புதிய உறுப்பினர்களுக்கு செய்யவேண்டியதும் அதுதான். அவர்கள் ரோட்டரியில் வேரூன்றி வளர்ந்து நிலைப்பெறுவதை நாம் உறுதிசெய்ய வேண்டும். நாற்பது ஆண்டுகளுக்கு முன் நான் சங்கத்தில் உறுப்பினராக சேர்ந்த போது சிலர் அதைத்தான் செய்தார்கள். இங்குள்ளவர்கள் என்னை கவனித்துக் கொண்டு எனக்கு உதவி செய்து என்னை ஊக்கப்படுத்தினார்கள் என்றார் மெக்கினலி.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

# விவசாயிகளின் வாழ்க்கையை மாற்றும் ரோட்டரி தடுப்பணைகள்

ஜெய்ஸ்ரீ

மகாராஷ்டிர மாநிலம் தானே மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தில் ஜாதவ் என்ற விவசாயி சமீபத்தில் தனது வயலில் பாதாம் மரக்கன்றுகளை நட்டுள்ளார்.

“இங்குள்ள வயல்களில் விளையும் தர்பூசணிகள், தக்காளி மற்றும் வெள்ளரிகள் இப்போது ஏற்றுமதி செய்யப்படுகின்றன’’ என்கிறார் RC தானே பிரீமியம், RID 3142 இன் உறுப்பினர் ஹேமந்த் ஜக்தாப், இவர் ரோட்டரியின் Service Above Self விருது பெற்றவர். இந்த மாவட்டத்தில் உள்ள புகலே கிராமத்தில் கட்டப்பட்ட தடுப்பணை, இரண்டு குழந்தைகளை கொண்ட விதவை மதுரா ஒரு சிறிய நிலத்தில் சுரைக்காய் பயிரிட உதவியது,’’ இது இப்போது 10,000 சதுர அடியாக விரிவடைந்துள்ளது’’ என்று அவர் மேலும் கூறினார்.

சில ஆண்டுகளுக்கு முன்பு, இந்த விவசாயிகள் தங்கள் பிழைப்புக்காக போராடிக்கொண்டிருந்தனர், அப்போது தானேயில் உள்ள ரோட்டரி சங்கம் அவர்களை மீட்க வந்தனர், மேலும் இந்த பகுதியில் உள்ள பல கிராமங்களில் நிலத்தடி நீர் மட்டம் கணிசமாக மேம்பட்டுள்ளது மற்றும் விவசாயிகள் இப்போது மாற்று பணப் பயிர்களை பயிரிட முடிகிறது.

மகாராஷ்டிராவில் உள்ள



முர்பாத் அசோஸ் கிராமத்தில் ரோட்டரி மூலம் மறுகட்டமைக்கப்பட்ட ஒரு தடுப்பணை.



PRIP *கல்யாண் பானர்ஜி (நடுவில்), (இடமிருந்து) திட்டத் தலைவர் ஹேமந்த் ஜக்தாப், PDG விஜய் ஜலன், புருஷோத்தம் அகவான் மற்றும் பிரதீப் கோயல் ஜவ்ஹர் தாலுக்காவின் அட்காடக் கிராமத்தில் ஒரு தடுப்பணை அருகில்.*



முர்பாத், ஷஹாபூர், பிவாண்டி, தலாசரி, ஜவ்ஹர், பால்கர், விக்ரம்காட், வசாய், தஹானு மற்றும் வாடா தாலுகாக்களில் உள்ள கிராமங்களில் வாழும் 2 லட்சம் பழங்குடி மக்களுக்கும், 4,000 கால்நடைகளுக்கும் இத்திட்டம் உதவியுள்ளது. இதுவரை செயல்படுத்தப் பட்ட திட்டத்தின் மொத்த மதிப்பு ரூ.17 கோடி என்கிறார் ஜக்தாப்.

2005-ஆம் ஆண்டு முதல் தானே மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் 496 தடுப் பணைகள் கட்டுவதில் அவர் முக்கியப் பங்காற்றியுள்ளார். “முன்பு, கிராம மக்கள் தண்ணீர் பற்றாக்குறையை அனுபவித்து, பருவமழையை நம்பியிருந்த போது, அவர்கள் ஒரு பயிரை மட்டுமே பயிரிட முடிந்தது. பெண்கள் வீட்டிற்கு தண்ணீர் கொண்டு வர நீண்ட தூரம் செல்ல வேண்டியிருந்தது. பெரும்பாலான குடும்பங்கள் வாழ்வாதாரத்திற்காக கீழ்த்தரமான வேலைகளை மேற்கொள்வதற்காக அருகிலுள்ள நகரங்களுக்கு இடம் பெயர்ந்தனர். குழந்தைகளின் கல்வி பாதிக்கப் பட்டது. ஆனால் இப்போது இந்த கிராமங்கள் அனைத்தும் செழிப்புடன் இருக்கின்றன, வயல்கள் பசுமையாகவும் செழிப்பாகவும் உள்ளன என்று அவர் கூறுகிறார்.

ஓய்வு பெற்ற PWD செயல் பொறியாளரான ஜக்தாப், முன்பு RC தானே நார்த்எண்ட் உறுப்பினராக இருந்தார். வாடா தாலுக்காவில் உள்ள நெஹ்ரோலி கிராமத்தின் தண்ணீர் பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்காக சங்கம் நடத்திய விவாதத்தில் அவர் ஈர்க்கப்பட்டார், மேலும் 2005-ல் ரூ.1.85 லட்சம் செலவில் அடிப்படை தடுப்பணை கட்டும் பணியில் தீவிரமாக பங்கேற்றார். இந்த வசதியை அப்போதைய DGE பாரத் பாண்டியா திறந்து வைத்தார். “அவர் திட்டத்தைப் பாராட்டினார் மற்றும் 2006–07-ம் ஆண்டில் அவர் DG ஆக இருந்த போது ‘கிராமப்புற நீர் மேலாண்மை திட்டம்’ ஒன்றை வடிவமைக்க எங்களை ஊக்குவித்தார்’’. சங்கம், மாவட்டத்தில் உள்ள மற்ற ரோட்டரி சங்கங்களுடன் இணைந்து கிராமங்களில் தடுப் பணைகள் கட்டுதல், பள்ளிகளில் நீர் வடிகட்டிகள் மற்றும் வீடுகளுக்கு குழாய் நீர் வழங்குதல் போன்ற நீர் தீர்வுகளை வழங்குவதில் கவனம் செலுத்தியது.

பம்பாய் சேம்பர் ஆஃப் காமர்ஸ் அண்ட் இண்டஸ்ட்ரியின் வருடாந்திர கூட்டத்தில் காட்சிப்படுத்தப்பட்ட நெஹ்ரோலி திட்டம் எல்டி, பால்மர் லாரி, கண்சாய் நேரோலாக் மற்றும் டூய்ச் வங்கி போன்ற நிறுவனங்களின்

ஆதரவைப் பெற்றது. “எல்டி, அதன் CSR பிரிவின் மூலம், 200 தடுப்பணைகளை கட்டுவதற்கான எங்கள் திட்டத்திற்கு 2007 முதல் ஐந்தாண்டுகள் ஆதரவளித்தது, பின்னர், எங்கள் சங்கம் ரூ.40 லட்சத்துடன், மேலும் 50 வசதிகளைச் சேர்த்தோம். லயன்ஸ் இன்டர்நேஷனல் கடந்த மூன்று ஆண்டுகளாக ஒவ்வொரு ஆண்டும் 12 தடுப்பணைகளை கட்டு வதற்காக எங்களுடன் கூட்டு சேர்ந்துள்ளது. ரோட்டரி மற்றும் லயன்ஸ் இடையே ஒவ்வொரு ஆண்டும் 20 தடுப்பணைகள் கட்டுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் அடுத்த ஆண்டு கையெழுத்திடப்பட உள்ளது என்கிறார் ஜக்தாப்.

பல ஆண்டுகளாக, TRF ஒன்பது உலகளாவிய மானியங்களுக்கு (GG) 30,000 ஒப்புதல் அளித்துள்ளது. “ஒவ்வொரு தடுப்பணைக்கும் 4–7 லட்சம் ரூபாய் வரை கட்டுமானச் செலவாகும், மேலும் ஒவ்வொரு (GG) உடன் 5–6 தடுப்பணைகளை நாங்கள் நிறுவலாம்.” ஜப்பானில் உள்ள ரோட்டரி சங்கங்களை சர்வதேச பங்காளர்களாக கொண்ட ஒரு GG ஜவ்ஹர் தாலுக்காவில் ரூ.45 லட்சம் மதிப்பிலான ஐந்து தடுப்பணைகளை கட்ட உதவியது. மேலும் 211,000 டாலர் மதிப்பிலான மற்றொரு GGக்கு, WASRAG (தண்ணீர் மற்றும் சுத்திகரிப்பு ரோட்டரி ஆக்ஷன் குரூப்) ஒரு பங்களிப்பாளராக இணைந்து இந்த பிராந்தியத்தில் உள்ள ஒன்பது கிராமங்களுக்கு வசதியை வழங்கியது. 2011–12ல் இத்திட்டத்தின் கீழ் வீடுகளுக்கு நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

இந்த திட்டத்தில் பல்வேறு அரசு நிறுவனங்களால் கட்டப் பட்ட அடிப்படை UCR (அன்கோர்சட் ரப்ல்) தடுப்பணைகளை மறுசீரமைப்பதும் அடங்கும். “அத்தகைய 16 தடுப் பணைகளை நாங்கள் புதுப்பித் துள்ளோம்,’’ என்று அவர் கூறுகிறார்.

தற்போது நெல் மட்டுமின்றி கூடுதல் பயிராக காய்கறிகளை பயிரிட முடிகிறது என தலசாரி கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ஜாதவ் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். அதிகளவு தண்ணீர் கிடைப்பதால் விளைச்சலும் நன்றாக உள்ளது. “இது ஒரு சுழற்சி. என்னால் நன்றாகப் பணம் சம்பாதிக்க முடிகிறது, அதைக்கொண்டு என் வயல்களைக் கவனித்துக்கொள்ள முடிகிறது, இதனால் எனக்கு மேலும் அதிக லாபம் கிடைக்கிறது. எனது இரண்டு மகள்களுக்கு கல்வி வழங்குவதுடன் அவர்களின் எதிர்காலத்திற்காகவும் என்னால் சேமிக்க முடிகிறது. ரோட்டரி இல்லாவிட்டால், நாங்கள் பிழைப்புக்காக போராடியிருப்போம். வேறு ஊர்களுக்குப் புலம் பெயர்ந்து

*முர்பாத்தில் உள்ள சோனாவலே கிராமத்தில்.*





ஜக்தாப் மற்றும் அவரது மனைவி Rtn யோஜனா ஜவ்ஹர் கிராமத்தில் கிராமவாசிகள் உடன்.

நாடோடி வாழ்க்கை வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருப்போம் என்கிறார்.

ஜக்தாப் சில மாதங்களுக்கு முன்பு தானேவில் உள்ள சிங்கானியா பள்ளியின் 30 மாணவர்களுடன் சோனாவலே கிராமத்திற்கு கல்விச் சுற்றுப்பயணமாகச் சென்று நீர் பாதுகாப்புக் கருத்தை விளக்கிய சம்பவத்தை விவரிக்கிறார். கிராமத்தில் நாங்கள் கட்டியிருந்த தடுப்பணைகளைச் சுற்றிப் பார்த்து விட்டு களைப்பாகவும், தாகத்துடனும், ஒரு கிராமவாசியின் வீட்டு வாசலில் ஓய்வெடுத்து, அவரிடம் கொஞ்சம் தண்ணீர் கேட்டோம். தண்ணீருக்காக கிராமவாசிக்கு நன்றி தெரிவித்தபோது, அவர் கூறிய பதிலைக் கேட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன்: “நான் தான் உங்களுக்கு நன்றி கூறவேண்டும்; உங்கள் முயற்சியால் தான் நாங்கள் இந்த தண்ணீரைப் பெறுகிறோம்.

“தண்ணீர் பற்றாக்குறையின் தீவிரத்தை நான் அறிவேன், ஏனென்றால் நான் வறட்சியால் பாதிக்கப்பட்ட துலேவிலிருந்து வந்தவன்’’ என்கிறார் ஜக்தாப். அவர் 1988–89-ல் ரோட்ராக்ட் கிளப் ஆஃப் துலேயின் தலைவராகப் பணியாற்றினார், 1999-ல் RC தானே நார்த்எண்டில் சேர்ந்தார் மற்றும் 2015 முதல் RC தானே பிரீமியத்தில் உறுப்பினராக உள்ளார். பயிற்சி பெற்ற தன்னார்வத் தொண்டர்கள் குழுவுடன் இணைந்து தொழில்நுட்ப சேவை வழங்குநர்களாக RID 3141 மற்றும் 3142-க்கான நீர் பாதுகாப்புத் திட்டத்தை வழிநடத்துகிறார். தடுப்பணை அமைப்பதற்கான இடத்தை நாங்கள் கண்டறிந்து, நிதியை ஏற்பாடு செய்து, உள்ளூர் சமூகங்களுக்குத் திட்டம் மற்றும் அது தரும் பலன்களைப் பற்றிக் கற்பிக் கிறோம். பெரும்பாலான இடங்களில், தடுப்பணைகளில் தேக்கி வைக்கப் பட்டுள்ள தண்ணீர் வயல்களுக்குள் பாய்ந்து செல்லாது என்பதை கிராம மக்களுக்கு புரியவைக்க வேண்டும். அவர்கள் யோசனையைப் புரிந்துகொண்டவுடன், அவர்கள் எல்லா உதவிகளையும் செய்கிறார்கள் என்று அவர் கூறுகிறார்.



ஒரு விவசாயி அவரது காய்கறி பண்ணையில்.

இந்த ஆண்டு இறுதிக்குள் மொத்த தடுப்பணைகளின் எண்ணிக் கையை 500-ஆக உயர்த்துவோம் என்று ரோட்டேரியர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். ■

Rotary PEOPLE OF ACTION

# கொல்கத்தாவில் RID 3291 அமைத்துள்ள இரத்த வங்கி

ரோட்டரி செய்திக்குழு



*மேற்கு வங்க மாநிலத்தின் நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர் அருப் ராய்* (நடுவில்), PRIP *சேகர் மேத்தா* (இடமிருந்து நான்காவது) *மற்றும்* RC *கல்கத்தா தலைவர் கனக் தத்* (இடமிருந்து மூன்றாவது) *இரத்த வங்கியின் திறப்பு விழாவில்.*

RC கல்கத்தா, RID 3291, ஹௌரா நகராட்சிக் கழகத்துடன் இணைந்து, கொல்கத்தாவில் உள்ள ஹௌரா-வில் 'HMC ரோட்டரி இரத்த மையம்' என்கிற பெயரில் இந்த மாவட்டத்தின் முதல் இரத்த மையத்தை அமைத்துள்ளது. பிப்ரவரியில் இந்த வளாகத்தை நகர்ப்புற வளர்ச்சிக்கான மாநிலப் பொறுப்பு அமைச்சர் அருப் ராய் திறந்துவைத்தார்.

HMC தலைவர் சுஜோய் சக்ரவர்த்தி, RI இயக்குநர் அனிருதா ராய்சௌத்ரி, DG ஹீராலால் யாதவ், PRIP சேகர் மேத்தா, சங்கத் தலைவர் கனக் தத், சங்கத்தின் முன்னாள் தலைவர் விக்ரம் சொமெனி ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார்கள். இந்த வளாகத்துக்கான நிலத்தை HMC வழங்கியது. ரூ.1.1 கோடி செலவிலான இந்தத் திட்டத்துக்கான கருவியைச் சொமெனி தன்னுடைய செரா சானிட்டரிவேர் நிறுவனத்தின் வழியாக ஆதரித்தார்.

இந்த இரத்த வங்கி தலசீமியா-வால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான இரத்த மாற்ற மையத்துக்கு அருகில் அமைந்துள்ளதால், இது குழந்தை களுக்கும் அவர்களுடைய பெற்றோருக்கும் மிகவும் பயன்படும். அருகிலுள்ள ஹூக்ளி மாவட்ட மக்களுக்கும் இந்த இரத்த வங்கி பயன்படும். முழுமையாக டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ள இந்த வளாகத்தின் சேமிப்புக் கொள்ளளவு, ஒவ்வொரு மாதமும் 800 பைகள். இந்த நவீன கருவி ஒரு கணினிச் சேவையகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இந்த இரத்த வங்கியில், RC சால்ட் லேக் சிட்டி கல்கத்தா அளித்துள்ள இரத்தப் போக்குவரத்து, திரட்டல் வேனும் இருக்கும். இந்த மாவட்டத்தில் உள்ள ரோட்டரியன்களும் இதனால் பலன் பெறுவார்கள். அவர்கள் சங்கத் தலைவரிடமிருந்து கோரிக்கைக் கடிதம் ஒன்றைப் பெற்று இந்த மையத்தில் இரத்தம் பெறலாம். ரோட்டரி சங்கங்கள் HMC ரோட்டரி இரத்த மையத்தை இரத்த தான முகாம்கள், அதைத் தொடர்ந்த ரத்தப் பை திரட்டல்களுக்கு அழைக்கலாம்.■




RI *இயக்குனர் அனிருதா ராய்சௌத்ரி* (வலமிருந்து நான்காவது), *மாவட்ட சிறப்புத் திட்டத் தலைவர் அரிந்தம் ராய்சௌத்ரி* (இடமிருந்து மூன்றாவது) *இரத்த வங்கியில் சங்க உறுப்பினர்களுடன்.*

ADVT.

# BECOME A DOCTOR IN USA

## XAVIER UNIVERSITY ARUBA'S 6 YEAR PROGRAMME TO TRANSFORM YOUR AMERICAN DREAM INTO A REALITY



### DOCTOR OF MEDICINE

**First 2 years**
Start @ KLE, Campus Karnataka, India

**Next 2 years**
Continue @ Xavier's Campus Aruba, Caribbean island - Netherland

**Next 2 years**
Complete @ Xavier's affiliated Teaching Hospitals USA / Canada

### DOCTOR OF VETERINARY MEDICINE

**First 2 years**
Start @ KLE, Campus Karnataka, India

**Next 3 years**
Continue @ Xavier's Campus Aruba, Caribbean island- Netherland

**Final year**
Complete @ Xavier's affiliated Teaching Hospitals USA / Canada

**Limited Seats**

**The session starts in May/September 2024**

To apply, Visit: **application.xusom.com**

Contact: Uday @+91 91 0083 0083 +91 98 8528 2712

email: infoindia@xusom.com

**XAVIER STUDENTS ARE ELIGIBLE FOR H1/J1 Visa PROGRAMME**

# ஜெர்மன் பரிமாற்ற மாணவரை கவர்ந்திழுத்த கேரளா மற்றும் புனே

ரஷீதா பகத்



*ரோட்டரி இளைஞர் பரிவர்த்தனை மாணவர் ஜெர்மனியைச் சேர்ந்த ஹென்றி க்ளெமென்ஸ் ஆக்ராவில் உள்ள தாஜ்மஹாலில்.*

நான் கேரளாவை மிகவும் நேசிக்கிறேன், கிடைக்கக்கூடிய எந்த சுற்றுலா இலக்கியத்தாலும் கேரளாவின் முழு அழகையும் படம்பிடிக்க முடியாது என்று 18 வயதான ஹென்றி கிளெமென்ஸ் கூறுகிறார். ஜெர்மனியின் நார்த் ரைன்-வெஸ்ட்பாலியாவைச் சேர்ந்த ரோட்டரி யூத் எக்ஸ்சேஞ்ச் (RYE) மாணவரான அவர் இப்போது இந்தியாவில் RYE திட்டத்தில் RI மாவட்டம் 3132 இருக்கிறார். அவர் RC அகமதுநகர் டிக்னிட்டியைச் சேர்ந்த அபய் ராஜேவின் குடும்பத்துடன் வசித்து வருகிறார், “ஆனால் எனது ஹோஸ்ட் கிளப் RC அகமதுநகர் மிட் டவுன்” என அவர் கூறுகிறார்.

லத்தீன் அமெரிக்காவிலிருந்து ஏழு மற்றும் பிரான்சிலிருந்து ஒருவர் கொண்ட எட்டு இளைஞர் பரிமாற்ற மாணவர்களின் குழுவில் அவர் ஒருவர். மும்பை, கோவா போன்ற சில நகரங்களுக்கும், கேரளாவில் உள்ள இடங்களுக்கும் நாங்கள் பயணம் செய்தோம். நான் கண்ட கேரளா மிகவும் அழகாக இருந்தது, எதிர்காலத்தில் இந்தியாவைப் பற்றி நினைக்கும் போது, கேரளாவின் தனித்துவமான அழகு என் மனதில் தோன்றும். கேரளாவில் இருக்கும் போது, நாம் இந்தியாவில் இருக்கிறோமா அல்லது கரீபியன் தீவில் இருக்கிறோமா என்று எனக்கு தோன்றியது. மற்ற இடங்களைப் போலல்லாமல், கேரளாவில் மாசுபாடு ஒரு பிரச்சனையாக இல்லை. எனக்கு கோவா மற்றும் மும்பையும் பிடிக்கும், ஆனால் மும்பையை விட புனேவையே நான் விரும்புகிறேன்.

அவரது வயதுடைய மற்ற இளைஞர்களைப் போல மும்பை அவரை திகைக்க வைக்கவில்லை. எனக்கு மும்பை பிடித்திருந்தது, குறிப்பாக மரைன் டிரைவ், அது மிகவும் அழகான இடம். ஆனால் அது என் ரசனைக்கு ஏற்றார் போலல்லாமல் கூட்டமாக இருந்தது; எனக்கு புனே மிகவும் பிடிக்கும், மும்பையில் கிடைக்கும் அனைத்தும் புனேவில் கிடைக்கிறது என்று நான் கூறுவேன். நிச்சயமாக இது மும்பையைப் போல பெரிய நகரம் இல்லை, அங்கு நான் நெரிசலான ரயில்களில் பயணம் செய்தேன், ஆனால் அது உண்மையிலேயே ஒரு அனுபவமாக இருந்தது! புனே அமைதியாகவும் நிதானமாகவும் இருந்தது, நான் அதை மிகவும் விரும்பினேன்.

ஹென்றியின் தந்தை அவர் வசிக்கும் நகரத்தின் மேயராக இருக்கிறார். ஹென்றி, கடந்த ஆண்டு தனது பள்ளிக் கல்வியை முடித்தபோது ரோட்டரி பரிமாற்றத் திட்டத்தைப் பற்றி அறிந்தார், ஜெர்மனியில் உள்ள உள்ளூர் ரோட்டரி சங்கத்தில் உறுப்பினராக இருக்கும் எங்கள் பள்ளி முதல்வர் இந்த வாய்ப்பைப் பற்றி பள்ளியில் பட்டம் பெறும் மாணவர்களுக்கு ஒரு மின்னஞ்சல் எழுதினார். அவர் எனது கணித ஆசிரியராகவும் இருந்ததால், நான் அவருடன் நெருக்கமாக இருந்தேன், மேலும் அதற்கு எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டும் என்று எனக்கு அவர் வழிகாட்டினார், மேலும் எனது கல்லூரி 2024 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் தொடங்குவதால் நான் விண்ணப்பித்தேன்.

அவர் தேர்ந்தெடுக்கப்பட்டு அக்டோபர் 2023-ல் இந்தியா வந்தடைந்தார் மற்றும் பிற பரிமாற்ற மாணவர்களுடன் இந்தியாவில் வெகுவாக பயணம் செய்துள்ளார். நான் இந்தியாவில் தங்குவதை அனுபவித்து வருகிறேன், இந்திய உணவுகளை மிகவும் விரும்பி அருந்துகிறேன்; எனக்கு பிடித்த உணவு சிக்கன் மலாய் டிக்கா. நான் ஒரு அசைவ உணவு உண்பவன் ஆனால் மிசல் பாவ், பாவ் பாஜி போன்றவற்றையும் விரும்புகிறேன் மற்றும் நிச்சயமாக தந்தூரி சிக்கன் மற்றும் தந்தூரி பனீரும் எனக்கு பிடிக்கும். ஜெர்மனியில் தான் அசைவ உணவுகளை அதிகம் உட்கொள்ளப் பழகிவிட்டதாகவும், மகாராஷ்டிராவின் அகமத்நகரில் உள்ள அவரது புரவலர் குடும்பத்தார் கடைப்பிடிக்கும் ஒரு வாரத்தில் மூன்று முறை சைவ உணவு நாட்களை பழக்கப்படுத்திக் கொண்டதாகவும் அவர் கூறுகிறார்.

தனது தினசரி வழக்கத்தை விவரிக்கும் அவர், தான் பள்ளியில் 12-ம் வகுப்பு படிப்பதாக கூறுகிறார். வீட்டிற்குத் திரும்பி சிறிது நேரம் ஓய்வெடுப்பேன், அதற்கு பின்



RID 3132 DG *ஸ்வாதி ஹெர்கல் உடன்.*



*மும்பை மரைன் டிரைவில் கிளெமென்ஸ்.*

“என் நண்பர்களுடன் வெளியே செல்வேன், பொதுவாக கால்பந்து விளையாட மைதானத்திற்குச் செல்வோம். அபய் ஜெயின் மகனான எனது புரவல சகோதரர் க்ஷிதிஜ் இங்கே இருந்தபோது, நாங்கள் நகரத்தை சுற்றிக் வந்தோம், கால்பந்து மைதானத்திற்குச் சென்றோம், அங்குள்ள சிறுவர்கள் நான் நன்றாக விளையாடுவதாக கூறினார்கள், அதனால் இப்போது நான் அடிக்கடி அவர்களுடன் சேர்ந்து விளையாடுகிறேன் என்று அவர் கூறுகிறார்.

வரும் ஏப்ரலில் அவர் வீடு திரும்பும் வரை இதுவே அவரது வாடிக்கையாக இருக்கும். அப்படியானால் இந்தியா வாழ்க்கை முறை பற்றி அவர் என்ன கற்றுக்கொண்டார்; அதன் நேர்மறை மற்றும் எதிர்மறை பற்றி நான் அவரிடம் கேட்கிறேன்.

குடும்ப வாழ்க்கையைப் பற்றி நான் கற்றுக் கொண்டிருக்கிறேன், அது ஜெர்மனியில் இருந்து மிகவும் வித்தியாசமாக உள்ளது; ஜெர்மனியுடன் ஒப்பிடும்போது, இங்குள்ள பல விஷயங்களில் மிகவும் மாறுபட்ட அணுகுமுறைகளைப் பற்றி அறிந்துகொள்வது எனக்கு மிகவும் சுவாரஸ்யமாக இருக்கிறது. அவர் பெரியவர்கள் மீதான அணுகுமுறைக்கு உதாரணம் தருகிறார்; “இங்கே மக்கள் பெரியவர்களின் பாதங்களைத் தொட்டு வணங்குகிறார்கள். ஜெர்மனியில், நாங்கள் அனைவரையும் மதிக்கிறோம், ஆனால் ஒருவர் 10 வயது அல்லது 70 வயதாக இருந்தாலும், அது முக்கியமில்லை மற்றும் பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தாது.



*கேரளாவில் RID 3131 சேர்ந்த மாணவர்களுடன் கிளெமென்ஸ்.*

தூசி மற்றும் மாசு அளவுகளுக்கு அவர் பழகிக்கொண்டிருக்கிறார் மற்றும் அவரது ''சகிப்புத்தன்மை அளவுகள்'' அதிகரித்து வருகின்றன. ''சாலைகளில் குப்பைகளை எரிப்பது போன்ற விஷயங்கள் இங்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று, ஆனால் ஜெர்மனியில் உள்ள மக்களால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. இது இந்திய சிந்தனை முறை என்று நான் நினைக்கிறேன்; அனைவரும் பல விஷயங்களுக்கு குறைவான முக்கியத்துவமே தருகிறார்கள் மற்றும் நிதானமாகவும் எடுத்துக் கொள்கிறார்கள் என்பதே எனது கருத்து. இது ஒருவர் போக்குவரத்து விதிகளை மீறும் விஷயத்தில் கூட பொருந்தும்'' என அந்த பரிமாற்ற மாணவர் கூறுகிறார்.



*கேரளாவில் யானை சவாரி.*

கல்வியை பொறுத்தவரை அகமத்நகரில் உள்ள ஒரு பள்ளியில் 12-ம் வகுப்பில் வணிகவியல் வகுப்பில் படித்து வருகிறார். மதிப்பீடுகள் மற்றும் தேர்வுகள் இந்தியாவில் மிகவும் தீவிரமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது, ஆனால் ஜெர்மனியில், அனைத்து நடவடிக்கைகளிலும் தீவிரமாகப் பங்கேற்பதுதான் அதிகம், படிப்பு சாராத நடவடிக்கைகள் உட்பட. இங்கே புத்தக அறிவுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது, ஆனால் அங்கு வகுப்பறை பாடங்கள் இறுதி மதிப்பீட்டில் பாதி மதிப்பெண்களை மட்டுமே பெறுகின்றன. இருப்பினும், இங்கும் ஜெர்மனியிலும் கற்பிக்கப்படும் மற்றும் விவாதிக்கப்படும் தலைப்புகளான கணிதம், வணிக ஆய்வுகள் மற்றும் பல மிகவும்






*அகமதுநகரில் பிள்ளையார் சதுர்த்தி கொண்டாடும் கிளெமென்ஸ்.*

ஒத்ததாக இருக்கிறது'' என்கிறார் அந்த ஜெர்மன் இளைஞர்.

RYE திட்டத்தை பற்றி, RID 3132 DG ஸ்வாதி ஹெர்கல் கூறுகையில், உலகெங்கிலும் உள்ள இளைஞர்களுக்கு இது ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் பரிசு, இது கலாச்சார மூழ்குதல், மொழி கற்றல் மற்றும் தனிப்பட்ட வளர்ச்சிக்கான வாய்ப்புகளை வழங்குகிறது. வெளிநாட்டில் வாழ்வதன் மூலம், பங்கேற் பாளர்கள் புரிந்துணர்வின் பாலங்களை உருவாக்குகிறார்கள், வாழ்நாள் முழுவதும் நட்பை உருவாக்குகிறார்கள், மேலும் உலகளாவிய குடிமக்களாக மாறுகிறார்கள், மேலும் அமைதியான மற்றும் ஒன்றோடொன்று இணைந்த உலகத்திற்கு பங்களிக்கிறார்கள்.

ஹென்றியிடம் கடைசியாக, இந்த ஆண்டு இறுதியில் நாடு திரும்பியதும் சேரும் பட்டப்படிப்பான வணிக நிர்வாகத்தில் பட்டம் பெற்ற பிறகு, அவர் ரோட்டேரியன் ஆவாரா என்று அவரிடம் கேட்கிறேன்.

“நான் செட்டிலாகி, எனக்கு நிலையான வருமானம் கிடைக்கும்போது ரோட்டரியில் சேர்ந்து ரோட்டேரியன் ஆக விரும்புகிறேன்'' என அவர் பதிலளித்தார்.■

# சீர்திருத்தப் பள்ளிகளில் கல்வி கற்பித்தல்

கமல் சங்வி

சீர்திருத்தம் மற்றும் அதிகாரமளித்தல் நோக்கத் துடனான ஒரு அற்புதமான நடவடிக்கையில், ரோட்டரி இந்தியா எழுத்தறிவு இயக்கம் (RILM) மேற்கு வங்க அரசின் சீர்திருத்தத் துறை நிர்வாகத்துறையும் இணைந்து இந்தியா முழுவதும் உள்ள சீர்திருத்தப் பள்ளிகளில் உள்ள கைதிகளுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய கல்வியை கற்பித்து வருகிறது.

கொல்கத்தாவைச் சேர்ந்த சமூக ஆர்வலர் இம்ரான் ஜகி, சீர்திருத்தத் துறையின் முன்னாள் கூடுதல் டைரக்டர் ஜெனரல் (ADG) சஞ்சய் சிங், PRIP சேகர் மேத்தா ஆகியோர் கலந்து விவாதித்து, கல்வி அறிவு இல்லாத கைதிகளை அடையாளம் கண்டு அவர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய கல்வியை கற்பித்து அவர்கள் கண்ணியமுடன் வாழ்வதற்கான ஒரு கூட்டுத்திட்டம் முன்மொழிந்தனர்.

சீர்திருத்த பள்ளிகளுடனான கூட்டமைப்பு, RILM-ன் வயது வந்தோர் கல்வித் திட்டத்தின் விரிவாக்கமாகும். இது கைதிகளாக இருப்பவர்களின் வாழ்வில் புதிய அத்தியாயத்தை அறிமுகப்படுத்துகிறது. இந்த முயற்சியின் தனித்துவம் என்னவேன்றால் எழுத்தறிவு பெற்ற கைதிகளை ஈடுபடுத்துவதாகும். அவர்கள் அக்ஷர் சாத்தி என்னும் பாத்திரத்தை ஏற்றுக் கொண்டு சீர்திருத்தப் பள்ளிகளில் இருக்கும் கைதிகளில் கல்வி அறிவில்லாதவர்களுக்கு கல்வி கற்பிப்பதாகும். இந்த கற்றல் அணுகுமுறை, கல்வி அறிவு இல்லாத நபர்களை கல்வியறிவு பெற்ற குடிமக்களாக மாற்றுவதற்கான ஆதரவான சூழலை ஏற்படுவத்துவதை நோக்கமாக கொண்டுள்ளது.



ஒரு சீர்திருத்த பள்ளியில் கைதிகள் எழுத, படிக்க கற்கிறார்கள்.

இந்த திட்டத்தை விரிபுவபடுத்துவதில், சீர்த்திருத்த நிர்வாகத் துறையின் சிறப்பு இன்ஸ்பெக்டர் ஜெனரல் அஜய் குமார் தாகுர் முக்கிய பங்காற்றி வருகிறார்.

வயதுவந்தோருக்கான எழுத்தறிவுத் திட்டத்தின் முதன்மை முயற்சியான வித்யா திட்டத்தின் கீழ் மேற்குவங்கத்தில் உள்ள பிரசிடென்சி மற்றும் மிதுனாபூர் சீர்திருத்தப் பள்ளிகளில் ஏற்கெனவே 160-க்கும் மேலான எழுத்தறிவு இல்லாத கைதிகள் கல்வி கற்று வருகின்றனர். எழுத்துறிவு பெற்ற 7 கைதிகள், அக்ஷர் சாத்திகளாக பணியாற்றி அவர்களுக்கு கற்பித்து வருகின்றனர்.

இந்த முன்முயற்சி வேகம் பெற்று வரும் நிலையில், சீர்திருத்தப் பள்ளிகளுக்கான வித்யா திட்டத்தை ஜல்பைகுரி, பாலூர்காட், பர்த்வான், பரூய்பூர், பஹ்ராம்பூர் மற்றும் டம்டம் ஆகிய இடங்களில் உள்ள சீர்திருத்தப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த பயணம் விரிவடையும் நிலையில் நாடு முழுவதும் உள்ள ரோட்டரி சங்கங்கள், இந்த மாற்றத்தை உருவாக்கும் முயற்சியில் பங்கேற்க அழைக்கப்படும். தடைகளை கடந்து, சவாலான நிலையிலும், சமூகத்தில் நேர் மறையான மாற்றத்தை உருவாக்கும் சக்தி கல்விக்கு உண்டு என்ற நம்பிக்கையை இது வலியுறுத்துகிறது.

எழுத்தாளர் ஒரு முன்னாள் RI இயக்குனர்

# வந்தே பாரத்தின் வரலாற்றை சொல்லும் அதன் கர்த்தா

ரஷீதா பகத்

இவ்வளவு தசாப்தங்களுக்குப் பிறகும், நாம் இறக்குமதி செய்யும் தரத்திற்கு ஏற்ப உற்பத்தி செய்ய முடிகிறதா? இல்லை என்பதே பதில். ஏனென்றால் நீங்கள் தொழில்நுட்ப பரிமாற்றம் என்று கூறும்போது... நான் அதை ஒரு முரண்பாடு என்று கூறுவேன். தொழில்நுட்பம் என்பது படைப்பாளியின் மனதிலும் இதயத்திலும் வாழும் ஒரு படைப்பு. அதை பரிமாற்ற வழியில்லை. கண்முடித்தனமாக உலகளாவிய மற்றும் நம்பிக்கையுடன் உள்ளூர் தொழில்நுட்பம் இந்த இரண்டிற்கும் இடையே நாம் சிக்கிக்கொண்டிருக்கிறோம். உண்மை இது இரண்டிற்கும் இடையில் எங்கோ சிக்கியுள்ளது.

இந்த வசீகர வார்த்தைகளால், வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயிலின் மூளையாக இருந்த சுதன்ஷு மணி, பெங்களூரு ஜோன் இன்ஸ்டிட்யூட்டில் பிரதிநிதிகளின் கவனத்தை ஈர்த்தார். இன்டக்ரல் கோச் பேக்டரியின் (ICF) பொது மேலாளராக இருந்த அவரது ஆர்வமும் நம்பிக்கையும் 18 மாதங்களுக்குள் முற்றிலும் உள்நாட்டில் தயாரிக்கப்படும் அதிவேக ரயிலை சாத்தியமாக்கியது.

“சொந்தமாக உருவாக்குவதில் ஒருவர் நம்பிக்கையுடன் இருந்தால், நீங்கள் 100 மட்டுமல்ல, 110 அல்லது 115 சதவிகிதம்... உங்களால் முடிந்ததை விட அதிகமாக வழங்க முடியும். ஆனால் குறிப்பிடத்தக்க எதையும் சாதிக்க, முதலில் நீங்கள் செய்வதை நேசிக்க வேண்டும். மக்களை, உங்கள் சக ஊழியர்களை, நீங்கள் பணிபுரியும் நிறுவனத்தை நேசிக்க வேண்டும். அப்படி நீங்கள் செய்ய விரும்பவில்லை என்றால் வெளியேறவும்” என்று அவர் கூட்டத்தில் கூறினார்.

மனித வளம் தான் மிக முக்கியமான வளம் என்று கூறிய அவர், இந்திய ரயில்வேயை நான்





ரஷீதா பகத்

RI *இயக்குனர் ராஜு சுப்பிரமணியன்; வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயில் உருவாக்கிய சுதன்சு மணி மற்றும்* PRID C *பாஸ்கர்.*

முழு மனதுடன் விரும்புகிறேன், ஆனால் இந்திய ரயில்வே ரயிலின் தோற்றம் பல தசாப்தங்களாக மாறவில்லை. நிறம் மாறி விட்டது, நிறைய ஏசி கோச்சுகள் சேர்க்கப்பட்டுள்ளன, புதிய தொழில்நுட்பங்கள் வந்துள்ளன. அவ்வளவுதான். இவ்வளவு பெரிய நெட்வொர்க்குடன், இவ்வளவு நிறைய பொறியாளர்களைக் கொண்டு ரயில்களை உருவாக்குகிறோம், ஆனால் இந்தியா எப்போது உயர் தொழில்நுட்ப, தொழில்நுட்பத்தில் மேம்பட்ட இந்திய ரயிலைப் பெறப்போகிறது என்ற கேள்வி எனக்குள் ஒரு கோபத்தை எப்பொழுதும் இருக்க செய்தது. அது தான் வந்தே பாரத்தின் விதை.

மாற்றம் இன்றியமையாதது ஆனால் பல தசாப்தங்களாக ICF இல் அது பெரிதாக நடக்கவில்லை என்று மணி கூறினார். என்னைப் போன்ற இரயில்வே ஆட்களால் அன்றைய சமகால தொழில்நுட்பத்தில் ரயில் பெட்டிகளை உருவாக்க 1955-ஆம் ஆண்டு ஜவஹர்லால் நேருவின் கனவாக அமைக்கப்பட்டது இந்த தொழிற்சாலை. அடிப்படையில் அதிகப் பன்முகத்தன்மை இல்லாமல் அதையே தொடர்ந்து செய்து வந்தது. இதன் விளைவாக ஒரு தொழிற் சாலையில் இருந்து அதிகபட்ச எண்ணிக்கையிலான பெட்டிகளை தயாரித்த உலக சாதனையை இது கொண்டுள்ளது.

வந்தே பாரத் திட்டத்தை பொறுத்தவரை, அவர் ஓய்வு பெறுவதற்கு சுமார் 30 மாதங்களுக்கு முன்பு ICF-சென்னையின் GM பதவியைக் கேட்டதாகக் கூறினார், அது மிகவும் பிரபலமான பதவி அல்லாததால் அதைப் பெறுவது எளிதாக இருந்தது! ஒரு GM இன் அதிகாரம் ஒரு பெரிய தனியார் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியின் அதிகாரத்தை விட அதிகமானது என்று கூறும் மணி, உங்களுக்குக் கொடுக்கப்பட்ட பெரிய வரைதிரையும், மிகப்பெரிய வண்ணத் தட்டுகளையும் பாருங்கள்; உங்களுக்கு விருப்பமான வண்ணங்களை தேர்வு செய்யுங்கள். அந்த தொழிற்சாலைக்கு நான் சென்றேன், அது இன்னும் நிலப்பிரபுத்துவ அமைப்பு போலவே இருந்தது.''

ஒரு அரசாங்க நிறுவனத்தின் செயல்பாடுகள் மற்றும் இது போன்ற சவாலான திட்டத்தை எப்படித் தன்னால் எடுக்க முடிந்தது என்பதை பற்றிய நுண்ணறிவை வழங்கிய ரயில்வே மேன், பொது விதியாக, அரசாங்கத்தில் (PSU) சுமார் 20 முதல் 25 சதவீதம் பேருக்கு தங்கள் தோள்களில் அமைப்பை சுமக்கின்றோம் என்ற சுய உந்துதல் இருக்கும். நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம் அவர்களின் முதுகில் தட்டி கொடுப்பது மட்டும்தான். மீதமுள்ள 75 சதவீதத்தில், இரண்டு முதல் மூன்று சதவீதம் பேர் வேலை செய்யவே மாட்டார்கள். அவர்களிடம் சீர்திருத்தம் அல்லது பதவி நீக்கம் என எந்த தண்டனையும் பலிக்காது.

சீர்திருத்த மனப்பான்மை அவர்களிடம் இல்லாவிட்டால், அரசு வழங்கிய அதிகாரத்தைப் பயன் படுத்தி அந்த மக்களை பதவி நீக்கம் செய்யுங்கள் என்றார். பிரபலமான கருத்தைப் போலல்லாமல், "அரசாங்கத்தில், ஒரு தனியார் நிறுவனத்தை விட மக்களை பணி நீக்கம் செய்வது எளிது, ஆனால் நாம் அதைச் செய்வதில்லை. நாங்கள் 165 பேரை பணிநீக்கம் செய்து, மற்ற 70 சதவீதத்தினருக்கு, செயல்படாதவர்களுக்கு தண்டனை இருக்கிறது என்ற செய்தியை அனுப்பினோம். எல்லோரும் விஷப் பாம்பை கண்டுதான் நடுங்குகிறார்கள்!

நல்ல யோசனைகள் மற்றும் நல்லவர்கள் அரசாங்கத்தில் எப்போதும் இருக்கிறார்கள் ஆனால் அவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படுவதில்லை என்று அவர் கூறினார்: "நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம் சிறந்த சிலரை தேர்ந்தெடுப்பது தான், உங்கள் வேலைகள் அனைத்தும் சுலபமாக முடிந்துவிடும். பிரச்சனை என்னவென்றால், நீங்கள் யாரையாவது தலைவராக்குகிறீர்கள், ஆனால் விதிகள், கட்டுப்பாடுகள், தணிக்கை, என்ன செய்யக்கூடாது போன்றவற்றை அவர்கள் மீது திணிக்கீறீர்கள். நம்பிக்கைக்கு ஒரு வாய்ப்பை வழங்குவதற்கான நேரம் வந்துவிட்டது, சிலர் அதை தவறாகப் பயன்படுத்தலாம், ஆனால் காரியங்கள் நடக்கும் மற்றும் ஊழல் குறையும், என்னை நம்புங்கள், கண்டிப்பாக குறையும். நாங்கள் இரண்டு பேரை மட்டுமே நம்பினோம்; வடிவமைப்பு தலைமை பொறியாளர் (மெக்கானிக்கல்) மற்றும் வடிவமைப்பு தலைமை பொறியாளர் (மின்சாரம்). நாங்கள் பெற்ற குறுகிய காலத்தில், எங்கள் கட்டளையின்படி ஒன்றோ, இரண்டோ எத்தனை மூலத்திலிருந்தும் நீங்கள் விரும்பும் அனைத்தையும் வாங்குங்கள் என்று நான் சொன்னேன், அம்முயற்சி வெற்றியும் அடைந்தது.

மக்கள் தங்கள் வேலைகளைச் செய்ய அதிகாரமளிப்பதன் மூலம், உற்பத்தியில் முன்னேற்றங்கள் ஏற்பட்டன, மேலும் "சூரிய மற்றும் காற்றாலை சக்தியைப் பயன்படுத்து வதன் மூலம் இந்திய ரயில்வேயின் ஒரே கார்பன் எதிர்மறை தொழிற் சாலையாகவும் நாங்கள் மாறினோம்'' என்று அவர் கூறினார்.

பாலியல் துன்புறுத்தல் பிரச்சினையிலும் அவர் உறுதியான நிலைப்பாட்டை எடுத்திருந்தார்; "பொதுவாக பெண்களுக்கு அதிகாரமளித்தல் உதட்டளவில் பேசப்படுகிறது, ஆனால் நான் இந்த சிக்கலை மிகவும் தீவிரமாக எடுத்துக் கொண்டேன், நான் இந்தியாவின் தலைமை நீதிபதி அல்ல, நான் ஒரு எளிய நிர்வாகி என்று கூறினேன். ஆனால் அத்தகைய நடத்தை பொறுத்துக்கொள்ளப்படாது என்று தெளிவுபடுத்தினேன். புகார்கள் மீது, ஒரு முறைசாரா விசாரணை நடத்தி, நான்கு மணி நேரத்தில் அந்த விசாரணை மூலம் என்ன நடந்தது என்பதை என்னால் கண்டுபிடிக்க முடிந்தது, மேலும் "இந்திய அரசாங்கம் எனக்கு வழங்கிய அதிகாரத்தின்படி, நான் அதே நாளில் அந்த மனிதரை பணிநீக்கம் செய்தேன். ஏன் எந்த விசாரணையும் நடத்தப்படவில்லை என்று என்னிடம் கேட்கப்பட்ட போது, அந்தப் பெண் அதிகாரி அந்த பயங்கரத்தை மீண்டும் மீண்டும் வாழ்வதை நான் விரும்பவில்லை, எனவே இந்த மனிதரை பணிநீக்கம் செய்தேன் என்று கூறினேன்.

இதன் விளைவாக, தங்கள் திறமையை நிரூபிக்க விரும்பிய உறுதியான பெண்கள், தங்களின் சிறந்த பணியை வழங்குவதற்கான நம்பிக்கையைப் பெற்றனர். 23 முதல் 57 வயதுக்குட்பட்ட 39 சென்னைப் பெண்கள், கனரக வெல்டிங், பளு தூக்குதல், கனரகப் பொருத்துதல் போன்றவற்றை முழுவதுமாக அவர்களே செய்தனர். ஆண்களைப் போலவே அல்லது அவர்களை விட சிறப்பாகச் செயல்பட முடியும் என்று தங்கள் பணியை பெருமிதத்துடன் செய்தனர்.

நிச்சயமாக, திட்டத்தை முடிப்பதில் சிக்கல்கள் மற்றும் சவால்கள் இருந்தன; இந்திய இரயில்வேயில் உள்ள உள்நாட்டுப் போர் போன்றவற்றைக் கடக்க வேண்டியிருந்தது மற்றும் உங்களால் இதைச் செய்ய முடியாது, நீங்கள் இறக்குமதி தான் செய்யவேண்டும் என்று சொல்லும் டாலர்களைக் கொண்ட துரைகளும் எப்போதும் இருப்பார்கள்.”

ஆனால் இந்த எதிர்மறைகளுக்கு எதிராக, அவரது அணியில் பல யோசனைகள் இருந்தன, நிறைய ஆற்றலும் இருந்தது, அவர்களுக்கு சரியாக வழிகாட்டுவது மட்டுமே தேவைப்பட்டது. வாரியத்தின் தலைவரிடமிருந்து தனக்குத் தேவையான அனுமதிகளை அவர் எப்படிப் பெற்றார் என்பதையும் விவரித்தார் நாம் நம்மால் முடிந்ததைச் செய்தால், வெற்றி நிச்சயம் வரும். நாங்கள் வடிவமைப்பு உள்ளீட்டிற்காக ஆலோசகர்களை ஈடுபடுத்தினோம். இந்த அளவிலான திட்டத்தில், கான்செப்ட் முதல் டிசைன் வரை, இன்ஜினியரிங் முதல் உற்பத்தி வரை முறையாகச் செயல்பட்டால் 36 முதல் 42 மாதங்கள் வரை ஆகும், ஆனால் நீங்கள் டிசம்பர் 2018-ல் ஓய்வு பெறுகிறீர்களே என்று சொன்னார்கள். அதற்கு பதிலாக இதுவரை செய்யாத ஒன்று... முறையற்ற வேலையைச் செய்வோம். 2018 காலண்டர் ஆண்டிலேயே நான் ஓய்வு பெறுவதற்கு முன்பு இந்த ரயிலை இயக்குவோம் என்று நான் சொன்னேன். எனவே இதற்கு Train 18 என்று பெயர் சூட்டப்பட்டது என கூறி முடித்தார்.

அதிர்ஷ்டம் துணிச்சலானவர்கள் பக்கம் என்பார்கள்; திட்டம் சொன்ன படி முடிக்கப்பட, 180 கி.மீ.க்கு வேகத்தில் ரயில் சோதனை செய்யப்பட்டு, வாரணாசி மற்றும் டெல்லி இடையே முதல் ஓட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி கொடியசைத்து தொடங்கி வைத்தார். “இப்போது 45க்கும் மேற்பட்ட ரயில்கள் உள்ளன. நாங்கள் வெறும் ரயிலை மட்டும் தான் உருவாக்குகிறோம், அது சந்திரயான், மங்கள்யான் போன்ற விண்வெளி ராக்கெட் அல்ல. ஆனால் பயணிகள், ஊடகங்கள், பொதுமக்கள் ஆகியோரிடமிருந்து எங்களுக்கு கிடைத்த பாராட்டும் அன்பும் அலாதியானது. முதன் முறையாக இந்தியாவினால் இந்தியாவிற்காக ஒன்றை நாங்கள் கட்டியெழுப்பினோம் என்று அவர்கள் நினைத்ததால் தான் எங்களை பாராட்டினார்கள். இந்த ரயில், மறுமலர்ச்சி மற்றும் லட்சியம் கொண்ட இந்தியாவின் சின்னம் என்று பிரதமர் அடிக்கோடிட்டு காட்டியுள்ளார் என்று மணி மேலும் கூறினார்.■

# மாற்றுத் திறனாளிகளுக்குக் கை கொடுத்தல்

ரோட்டரி செய்திக்குழு



ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள மங்களகிரியில், RC மங்களகிரி, RID 3150, நடத்திய சிறப்பு முகாமில், கை பாதிப்பு கொண்ட 500க்கும் மேற்பட்ட மக்களுக்கு LN-4 செயற்கைக் கை பொருத்தப்பட்டது. ஆந்திரப்பிரதேசம், தெலங்கானா மக்கள் மற்றும் தமிழ் நாட்டு, கர்நாடக எல்லை மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் இந்த முன்னெடுப்பினால் பலன் பெற்றார்கள்.

பெங்களூரு, ஹைதராபாத், தார்வாட் மற்றும் ஜெய்ப்பூரைச் சேர்ந்த தொழில்நுட்ப வல்லுநர் களும், மங்களகிரி, குண்டூரைச் சேர்ந்த ஃபிசியோதெரபிஸ்ட்களும் மக்களுக்குச் செயற்கைக் கைகளைப் பொருத்த உதவினார்கள், அவற்றைப் பயன்படுத்துவது எப்படி என்று அவர்களுக்குப் பயிற்சி அளித்தார்கள். ரூ.2 கோடி செலவில் நடைபெற்ற இந்த முகாமை, DG புசிரெட்டி சங்கர் ரெட்டி தொடங்கிவைத்தார்.■

# குஜராத்தில் கர்ப்பப்பை வாய்புற்றுநோய் பரிசோதனை மையங்கள்

V முத்துகுமரன்



**இடமிருந்து:** DG *நிஹிர் டாவே தனது மனைவி வைஷாலி, திட்டத்தலைவர் கல்பனா கந்தேரியா,* RC *பருச் நர்மதா நகரி தலைவர் யுவராஜ் சிங் மற்றும் செயலாளர் அமித் தபியாவாலா ஆகியோருடன் கோல்போஸ்கோபி மையத்தில்.*

கர்ப்பப்பை வாய் புற்றுநோய் பரிசோதனையை ஊக்குவிக்கும் விதமாக ரோட்டரி மாவட்டம் RID 3060, குஜராத்தில் 12–14 ரோட்டரி சங்கங்களைக் கொண்ட ஏழு தொகுதிகளில் இந்த மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள ரோட்டரி பவனில் கர்ப்பப்பை வாய் புற்றுநோய் கண்டறியும் கோல்போஸ்கோப் என்னும் கையடக்க கருவியும் வைக்கப்பட்டுள்ளன.

கோல்போஸ்கோப் என்னும் கருவி பெண்களின் கர்ப்பப்பை வாய் புற்றுநோயைக் கண்டறிந்து எச்சரிக்கை கொடுக்கும். பெண்கள் செய்ய வேண்டியது எல்லாம் இதுதான். இந்த கருவியை லேப்டாப் அல்லது மொபைல் போனில் இணைத்துக் கொள்ள வேண்டும். பிறகு தங்கள் உடலில் இந்த கருவியைப் பொருத்தி அவர்களே தங்கள் உடலை சுயபரிசோதனை செய்து கொள்ளலாம். சோதனை முடிவுகளையும் வெகு எளிதாக அதற்கான திரையில் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

மாவட்ட ஆளுநர் நிஹிர் தவே, கடந்த ஆண்டு நவம்பர் மாதம், பாரூச் நர்மதா நகரி ரோட்டரி சங்கத்தில் இந்த கோல்போஸ்கோபி கருவியின் முதல் பிரிவை தொடங்கி வைத்தார். அது முதல் நாங்கள் ஊரகப் பகுதிகளில் பரிசோதனை முகாம்களை நடத்தி 240 பயனாளிகளைச் சென்றடைந்துள்ளோம். 40 முதல் 60 வயது வரையிலான 160 பெண்கள், 16 முதல் 20 வயது வரையிலான 80 பள்ளி மாணவிகள் இதன் மூலம் பயனடைந்துள்ளனர் என்கிறார் சங்கத்தின் தலைவர் யுவராஜ் சிங். கோல்போஸ்கோப் கருவியை நிறுவுவதற்காக அவர் ரூ.3.5 லட்சம் நன்கொடை வழங்கியுள்ளார். பரிசோதனை முகாம் தொடங்குவதற்கு முன்னதாக மருத்துவர்கள் விழிப்புணர்வு அமர்வை நடத்துகின்றனர். 9 முதல் 15 வயதானவர்கள் கர்ப்பப்பை வாய்புற்று நோயிலிருந்து காக்கும் ஹெச்பிவி (HPV) தடுப்பூசி போட்டுக்கொள்ளவும் வலியுறுத்தி வருகிறோம்.

இந்த கருவியை கையாள்வது குறித்து ரோட்டேரியன் மகப்பேறு மருத்துவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். ஏழு தொகுதிகள் கொண்ட 12–14 சங்கங்களில் ஒவ்வொன்றும் வரும் மாதங்களில் கர்ப்பப்பை வாய் புற்றுநோய் மற்றும் வாய் புற்றுநோயை கண்டறிய ஒரு நாள் பரிசோதனை முகாம்களை நடத்த உள்ளன. ஜூன் மாதம் 30-ம் தேதி வரை ஒவ்வொரு தொகுதியிலும் 8 முதல் 10 பரிசோதனை முகாம்கள் நடத்தப்படும் என்று நம்புகிறோம். அடுத்த ரோட்டரி ஆண்டில் (2024–2025) ஒவ்வொரு தொகுதியிலும் 24 முகாம்கள் நடைபெறும் என்றார் மருத்துவரும் புற்றுநோய் குழுவின் மாவட்ட தலைவருமான கல்பனா கந்தேரியா. ஜாம்நகரில் உள்ள தங்களது டாக்டர் கல்பனா கந்தேரியா மருத்துவ மனையில் இத்திட்டத்தின் கீழ் கோல்போஸ்கோபி சேவை மையம் நிறுவப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.■


**STATEMENT ABOUT OWNERSHIP**

Statement about ownership and other particulars about *Rotary News* (Tamil) to be published in the first issue of every year after the last day of February

| | |
|---|---|
| 1. Place of Publication | : Chennai - 600 008 |
| 2. Periodicity of its publication | : Monthly |
| 3. Printer's Name | : P T Prabhakar |
| Nationality | : Indian |
| Address | : 15, Sivasami Street<br>Mylapore<br>Chennai 600 004 |
| 4. Publisher's Name | : P T Prabhakar |
| Nationality | : Indian |
| Address | : 15, Sivasami Street<br>Mylapore<br>Chennai 600 004 |
| 5. Editor's Name | : Rasheeda Bhagat |
| Nationality | : Indian |
| Address | : No. 25<br>Jayalakshmipuram<br>1st Street<br>Nungambakkam<br>Chennai - 600 034 |
| 6. Name and address of individual who owns the newspaper and partner or shareholders holding more than one percent of the total capital | : Rotary News Trust<br>Dugar Towers,<br>3rd Floor<br>34, Marshalls Road<br>Egmore<br>Chennai - 600 008 |

I, P T Prabhakar, declare that the particulars given are true to the best of my knowledge and belief.

Chennai - 600 008 sd/-

1st March, 2024 P T Prabhakar

Rotary PEOPLE OF ACTION

# 835 பயனாளிகளின் மனதைத் தொடும் ப்ராஜெக்ட் கிரியேட் ஹோப்

**V முத்துகுமரன்**

ஜனவரியில், சிநேகம் என்ற தலைப்பில் RID 3020-ன் இரண்டு நாள் மாவட்ட மாநாட்டையொட்டி, விஜயவாடாவில் உள்ள அயனா கன்வென்ஷன் ஹாலில், கிரியேட் ஹோப் என்ற தலைப்பில் ஒரு பல்நோக்கு மெகா சேவைத் திட்டம் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 800க்கும் மேற்பட்ட பயனாளிகளைச் சென்றடைந்தது. RC விஜயவாடா மிட்டவுன் டிஸ்கானை நடத்தியது, இதில் சுமார் 90 சங்கங்களைச் சேர்ந்த 1,200 ரோட்டேரியர்கள் அமர்வுகள் மற்றும் அவர்களை ஒன்றிணைத்த பிற நிகழ்வுகளில் பங்கேற்றனர்.

பல்நோக்கு சேவை திட்டத்தின் தோற்றத்தை நினைவுகூர்ந்து, சங்கத் தலைவர் சாது பிரசாத் கூறுகிறார், 800 உறுப்பினர்களைக் கொண்ட மிகப்பெரிய சங்கமான நாங்கள் இருப்பதால், எங்கள் DG சுப்பாராவ் ரவுரி பெரிய, தாக்கத்தை ஏற்படுத்தும் திட்டங்களை செயல்படுத்த எங்களைத் தூண்டினார். ரோட்டரியின் கவனம் செலுத்தும் பகுதிகளில் ஒவ்வொரு உறுப்பினரும் ஒரு பயனாளிக்கு உதவுவதை அடையாளமாக சித்தரிக்கும் ஒரு திட்டத்தை நாங்கள் உருவாக்கினோம். திட்டத் தலைவர் கங்கிசெட்டி ஜெகதீஷ் தலைமையிலான 10 பேர் கொண்ட பணிக்குழு, பிரசாத்துடன் கலந்தாலோசித்து, 835 பயனாளிகளுக்கு மெத்தைகள், தையல் இயந்திரங்கள், இஸ்திரி பெட்டிகள், உரம் தெளிப்பான்கள், சைக்கிள்கள், மருத்துவ உதவி மற்றும் பல்வேறு பயன்பாட்டுப் பொருட்களை (ரூ.25 லட்சம்) ஒப்படைப்பதற்கான விவரங்களைக் கவனித்து வந்தனர்.

திட்டக் குழு பயனாளிகளைக் கண்டறிந்தது மற்றும் “பொருட்களை நேர்த்தியாக காட்சிப்படுத்துவதில் உள்ள தளவாட சவால்களை கையாள நன்கு தயாராக இருந்தது மற்றும் அனைத்து பயனாளிகளையும் ஒரு இடத்தில் அழைத்தது, டிஸ்கானுக்கான RIPR PDG சுரேஷ் ஹரி மூலம் அவர்களுக்கு அவை வழங்கப்பட்டன என்கிறார் பிரசாத்.

*பள்ளி மாணவிகள் தங்கள் சைக்கிளுடன்.*






*DG சுப்பாராவ் ரவுரி மற்றும் ஜோதிர்மயி (நடுவில்), RC விஜயவாடா மிட்டவுன் தலைவர் சாது பிரசாத் (இடமிருந்து 2வது), PDG சுரேஷ் ஹரி (இடமிருந்து 5வது) மற்றும் அனிதா, DG ரிட்டு குரோவர் ஆகியோர் தையல் இயந்திரங்களை விநியோகிக்கிறார்கள்.*

DGக்கள் சுப்பாராவ், ரித்து குரோவர் (RID 3240) மற்றும் PDG ஹரி ஆகியோர் அரசு விடுதிகளில் தங்கியிருக்கும் 500 மாணவிகளுக்கு மெத்தைகளை வழங்கினர்; 50 பெண்களுக்கு தையல் இயந்திரங்கள்; 60 விவசாயிகளுக்கு உரத் தெளிப்பான்கள்; 100 பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை; 40 மாணவிகளுக்கு சைக்கிள்; மருந்துகள் வாங்குவதற்கும், சிகிச்சை அளிப்பதற்கு 15 நோயாளிகளுக்கு நிதி மானியங்கள்; 20 சிறு வியாபாரிகளுக்கு இஸ்திரி பெட்டிகள்; மற்றும் DTP மற்றும் MS Office-ல் இரண்டு மாத பயிற்சி பெற்ற 50 மாணவர்களுக்கு படிப்பு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. “எட்டு பயனாளிகளுக்கு எங்கள் ரோட்டேரியர்களின் அலுவலகங்களில் வேலை கிடைத்துள்ளது, மீதமுள்ளவர்களுக்கும் விரைவில் வேலை வாய்ப்பு வழங்கப்படும்” என்று பிரசாத் கூறுகிறார்.



*DG ரிட்டு குரோவர் மற்றும் PDG ஹரி ஆகியோர் விவசாயிகளுக்கு உரம் தெளிக்கும் கருவிகளை வழங்குகின்றனர்.*

விஜயவாடா அரசு மருத்துவமனை நோயாளி Y.ரவிக்குமார், சிகிச்சைக்கு மருந்துகள் வாங்க பணம் வழங்கிய ரோட்டரிக்கு நன்றி தெரிவித்தார். “பயனாளிகளை சென்றடைந்ததற்காக எங்கள் உறுப்பினர்கள் அனைவரையும் அவர் ஆசீர்வதித்தார், மேலும் அவருக்காக கடவுள் ரோட்டேரியர்களின் வடிவத்தில் வந்துள்ளனர் என்றும் வாழ்த்தினார்” என்று ஜெகதீஷ் கூறுகிறார்.

### ரோட்டரி நிறுவன தினம்

பிப்ரவரி 23, ரோட்டரி அறக்கட்டளை தினத்தில், சங்கம் 10 மாணவர்களுக்கு ரூ.75,000 மதிப்பிலான கல்வி உதவித்தொகையை வழங்கியது; ஏழு மாணவிகளுக்கு சைக்கிள்; ஏழு பெண்களுக்கு தையல் இயந்திரங்கள்; மேலும் அவர்கள் வாழ்வாதாரத்தை தொடர மூன்று நபர்களுக்கு இஸ்தரி பெட்டிகளையும் வழங்கியது. உலக ரோட்டரி தினத்தை முன்னிட்டு, விஜயவாடா ஐகான் பப்ளிக் பள்ளியில் ரத்த தான முகாம் நடைப்பெற்றது. ■

# ரோட்டரி பீஸ் பெல்லோஷிப்பிற்கு விண்ணப்பிக்கவும்

*ரோட்டரி பீஸ் பெல்லோஷிப் திட்டம் 2025–26-க்கான விண்ணப்பங்களை வரவேற்கின்றன. சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி மே* **15, 2024** *ஆகும்.*

ஒவ்வொரு ஆண்டும் ரோட்டரி முழு நிதியுதவியுடன் கூடிய பெல்லோஷிப்களை உலகெங்கிலும் உள்ள தலைவர்களுக்கு அமைதி மையங்களில் ஒன்றில் படிப்பதற்காக வழங்குகிறது. கல்விப் பயிற்சி, நடைமுறை மற்றும் உலகளாவிய நெட்வொர்க்கிங் வாய்ப்புகள் மூலம், ரோட்டரி பீஸ் சென்டர்ஸ் திட்டம் அமைதி மற்றும் மேம்பாட்டு வல்லுநர்களை அமைதிக்கான அனுபவமிக்க மற்றும் பயனுள்ள வினையூக்கிகளாக மாறும் திறனை மேம்படுத்துகிறது. 2002-ல் இத்திட்டம் தொடங்கப்பட்டதில் இருந்து, 140-க்கும் மேற்பட்ட நாடுகளில் பணிபுரியும் 1,600-க்கும் மேற்பட்ட கூட்டாளர்களுக்கு இந்த மையங்கள் பயிற்சி அளித்துள்ளன. ஒவ்வொரு ஆண்டும் ரோட்டரி அறக்கட்டளை முதன்மைப் பல்கலைக்கழகங்களில் முதுகலை பட்டப்படிப்புகளுக்கு 50 பெல்லோஷிப்களையும் 40 சான்றிதழ் படிப்புகளுக்கு பெல்லோஷிப்களையும் வழங்குகிறது.

“பெல்லோஷிப்கள் கல்வி மற்றும் கட்டணங்கள், தங்கும் அறை,பயணச் செலவு மற்றும் அனைத்து இன்டர்ன்ஷிப் மற்றும் கள-படிப்பு செலவுகளை உள்ளடக்கியது.

### பெல்லோஷிப் விவரங்கள்

**முதுகலை பட்டப்படிப்புகள்**

ஏற்றுக்கொள்ளப்பட்ட மாணவர்கள் ஆராய்ச்சி-தகவலுடனான கற்பித்தல் மற்றும் பலதரப்பட்ட மாணவர் அமைப்புடன் அமைதி மற்றும் மேம்பாட்டு சிக்கல்களைப் படிக்கின்றனர். பட்டப்படிப்புகள் 15 முதல் 24 மாதங்கள் வரை நீடிக்கும் மற்றும் பங்கேற்பாளர்கள் தாங்களாகவே வடிவமைக்கும் இரண்டு முதல் மூன்று மாத கள ஆய்வு அடங்கும்.

**தொழில்முறை மேம்பாட்டு சான்றிதழ் திட்டம்**

ரோட்டரி பீஸ் பெல்லோஷிப்பின் ஒரு பகுதியாக ஓராண்டு கலந்த கற்றல் திட்டத்தின் போது, பல்வேறு பின்னணிகளைக் கொண்ட அனுபவம் வாய்ந்த அமைதி மற்றும் மேம்பாட்டு வல்லுநர்கள் தங்கள் சமூகங்களுக்குள்ளும் உலகெங்கிலும் அமைதியை மேம்படுத்துவதற்கான நடைமுறை திறன்களைப் பெறுகின்றனர். கூட்டாளர்கள் கள ஆய்வுகளை முடித்து சமூக மாற்ற முயற்சியை வடிவமைத்து செயல்படுத்துகின்றனர். இந்த திட்டம் பணிபுரியும் நிபுணர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. திட்டத்தை முடித்தவுடன் கூட்டாளர்கள் முதுகலை டிப்ளமோவைப் பெறுகிறார்கள்.

**தகுதி மாணவர்கள் கண்டிப்பாக**

- ஆங்கிலத்தில் புலமை பெற்றிருக்க வேண்டும்.
- இளங்கலை பட்டம் பெற்றிருக்க வேண்டும்.
- தலைமைத்துவத்திற்கான சாத்தியம் உள்ளவராக இருக்க வேண்டும்
- தொழில்முறை மற்றும் கல்வி சாதனைகள் மற்றும் தனிப் பட்ட அல்லது சமூக சேவை மூலம் காட்டப்படும் கலாச்சார பரிமாற்ற புரிதல் மற்றும் அமைதிக்கான வலுவான அர்ப்பணிப்பு வேண்டும்.
- நீங்கள் ரோட்டரி உறுப்பின



ராகவோ அல்லது ரோட்டரி சங்கம், RI அல்லது வேறொரு ரோட்டரி நிறுவனத்தில் பணிபுரிபவராகவோ இருந்தால் தகுதிபெற முடியாது.

- விண்ணப்பதாரர்கள் அவர்களின் மிகச் சமீபத்திய கல்விப் பட்டப்படிப்பு (இளங்கலை அல்லது முதுகலை பட்டம்) முடிப்பதற்கும் பெல்லோஷிப்பிற்கான அவர்களின் உத்தேசித்துள்ள தொடக்கத் தேதிக்கும் இடையே குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் இடைவெளி இருக்க வேண்டும்.

முதுகலை பட்டப்படிப்பு களுக்கான விண்ணப்பதாரர்கள் அமைதி அல்லது மேம்பாட்டுப் பணிகளில் குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் முழுநேரத் தொடர்புடைய அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**சான்றிதழ் திட்டத்திற்கான விண்ணப்பதாரர்கள் கண்டிப்பாக:**

- அமைதி அல்லது மேம்பாட்டுப் பணிகளில் குறைந்தது ஐந்து வருடங்கள் முழுநேர தொடர்புடைய அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.
- அமைதியை மேம்படுத்து வதற்கான அவர்களின் திட்டம் ரோட்டரியின் பணியுடன் எவ்வாறு இணைகிறது என்பதை விளக்க வேண்டும்.
- மகரேரே பல்கலைக்கழகத் திற்கான விண்ணப்பதாரர்கள்: ஒன்று ஆப்பிரிக்காவை சேர்ந்தவர்களாக இருக்கலாம், ஆப்பிரிக்காவில் பணி புரிந்திருக்கலாம் அல்லது கண்டத்திற்கு வெளியே உள்ள ஆப்பிரிக்க சமூகங்கள் அல்லது முயற்சிகளுடன் இணைந்து பணியாற்றுபவராக இருக்கலாம்.
- இஸ்தான்புல், துருக்கியில் உள்ள பாக்செசிர் பல்கலைக்கழகத்தில் சான்றிதழ் திட்டத்திற்கான விண்ணப்பதாரர்கள், மத்திய கிழக்கு அல்லது வட ஆப்பிரிக்காவைச் சேர்ந்தவர் களாக இருக்க வேண்டும்,
- தற்போது இளங்கலை அல்லது பட்டதாரி திட்டத்தில் சேர்ந்துள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.
- முதுகலை பட்டப்படிப்பு அல்லது குளோபல் கிராண்ட் ஸ்காலர்ஷிப்பை முடித்த ரோட்டரி பீஸ் ஃபெலோக்கள், அந்த திட்டத்தின் இறுதி தேதிக்கும் அவர்கள் பெல்லோஷிப்பிற்கான தொடக்க தேதிக்கும் இடையில் மூன்று ஆண்டுகள் காத்திருக்க வேண்டும்.

ஆர்வமும் தகுதியும் உள்ள விண்ணப்பதாரர்கள் மே 15, 2024 வரை ஆன்லைனில் *(https://my.rotary.org/en/peace-fellowship-application)* விண்ணப்பிக்கலாம்.

மேலும் விவரங்களுக்கு, https://www.rotary.org/en/our-programs/peace-fellowships-ஐ பார்க்கவும்.

---

# ஜில்லா பரிஷத் பள்ளிக்கு புதிய கட்டிடம்

ரோட்டரி செய்திக்குழு



மும்பை போரிவலி ஈஸ்ட் ரோட்டரி சங்கம் பால்கரில் உள்ள சர்சன் கிராமத்தில் ஜில்லா பரிஷத் பள்ளியில் 10,000 சதுரடி நிலத்தில் 10 வகுப்பறைகளை கட்டியுள்ளது. இதற்கு Momentive Materials Performance என்ற நிறுவனம் ரூ.70 லட்சம் அளித்து உதவியுள்ளது. இந்த திட்டத்திற்கு திறப்பு விழாவில் சங்கத்தினர் மற்றும் தாக்கூர் பொறியியல் கல்லூரி ரோட்டராக்ட் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். ■

*சங்கத்தலைவர் பிரகாஷ் நிர்மல் மற்றும் சங்கத்தினர் புதிய கட்டிட திறப்பு விழாவில்.*

# RI தலைவரின் இலங்கை விஜயம்



**(வலமிருந்து)** RID *ராஜு சுப்ரமணியன்,* PRIP K R *ரவீந்திரன்,* RI *தலைவர் கோர்டன் மெக்கினலி, ஹீதர், வானதி ரவீந்திரன் மற்றும் வித்யா சுப்ரமணியன்.*

**இடமிருந்து கீழே:** RID *சுப்பிரமணியன் மற்றும் அவரது மனைவி வித்யா,* RID 3201 PDG *சுனில் ஜக்காரியா மற்றும் அவரது மனைவி ஆஷாவுடன்;* PRIP *ரவீந்திரன், வானதி மற்றும்* DG *ராஜேந்திரம்* (R) *ஆகியோருடன் தலைவர் மெக்கினலி மற்றும் ஹீதர்.*














மேலிருந்து: (இடமிருந்து) *வித்யா,* RID *சுப்பிரமணியன்,* RID 3220 PDG *கௌரி ராஜன்,* PRIP *ரவீந்திரன்,* PRID A S *வெங்கடேஷ் மற்றும்* RID 2982 PDG C *சிவஞானசெல்வம்; ஹீதர் மற்றும்* RI *தலைவர் மெக்கினலி.*







**(இடமிருந்து)** PRIP *ரவீந்திரன், மார்லின் காம்தார், அழகம்மை,* RID 2981 PDG A *அழகப்பன், ரோஷினி* (DGE *சுஷேனா ரணதுங்கவின் மனைவி*), *வானதி மற்றும்* RID 3232 PDG J B *காம்தார்.*





**மேலே: (வலமிருந்து)** *மார்லின்,* PDG*கள் காம்தார், கௌரி மற்றும் ஜகரியா மற்றும் ஆஷா;* **வலது:** *வானதி, ஹீதர் மற்றும் ஏஞ்சலின் ராஜேந்திரம்.*






**இடமிருந்து மேலே: (இடமிருந்து)** DRR *சத்மா ஜெயசிங்கே,* PDG *புபுடு டி சொய்சா,* RC *கொழும்பு நார்த் உறுப்பினர் மர்ஷத் பேரி,* DIR *அமீர் அக்ரம்,* RID *சுப்ரமணியன் மற்றும்* RI *தலைவர் மெக்கினலி;* PRIP *ரவீந்திரன்,* RID *சுப்பிரமணியன், வித்யா,* PRID *வெங்கடேஷ் மற்றும் தலைவர் மெக்கினலி;* RID *சுப்ரமணியன் மற்றும் வித்யாவுடன் தலைவர் மெக்கினலி மற்றும் ஹீதர்.*

**வலது:** RI *தலைவர் மெக்கினலி, வானதி மற்றும் ஹீதர்.*

**கீழே:** *(வலமிருந்து)* DG *ராஜேந்திரம், தலைவர் மெக்கினலி,* DRCC *சோஹன் பெரேரா,* Rtr *அம்ஜத் யூசுப்,* RID *சுப்பிரமணியன்,* DIR *அமீர் அக்ரம்,* PDG *புபுடு டி சொய்சா,* DRR *சத்மா ஜெயசிங்கே மற்றும் மாவட்ட தொடர்புக் குழுத்தலைவர் மஞ்சுளா* S *ரத்னசேகரா.*





புகைப்படங்கள்: ரஷீதா பகத்; வடிவமைப்பு: கிருஷ்ணப்ரதீஷ் S

# சவால்களை எதிர்த்து சாதனைபுரிந்த திருநங்கைகளுக்கு சென்னையில் கௌரவம்!

ரஷீதா பகத்

சென்னையில் உள்ள ஸ்ரீ கிருஷ்ணசுவாமி மகளிர் கல்லூரி ரோட்ராக்ட் சங்கம் நடத்திய மாற்றம் திருநங்கைகள் விருது வழங்கும் விழாவில், தமிழ்நாட்டில் ராமநாதபுரத்தைச் சேர்ந்த மூத்த வீராங்கனை நூரி சலீம் என்னும் திருநங்கை விருது பெற்றார். நீண்ட போராட்டத்திற்கு பிறகு அவர் சாதனை படைத்துள்ளார். தொற்று பாதிப்பால் குடும்பத்தினரால் கைவிடப்பட்ட 300-க்கும் மேலான ஹெச்.ஐ.வி. தொற்று பாதித்த குழந்தைகளுக்காக விடுதியை உருவாக்க சமூகத்தில் பல்வேறு நிர்பந்தங்களையும், அவமானங்களையும் எதிர்ப்புகளையும் அவர் சந்திக்க வேண்டியிருந்தது.

நூரி, தனது நான்கு வயதில் தாயை இழந்தார். மேலும் 13 வயதில் அவரது தந்தை மற்றும் பிற குடும்ப உறுப்பினர்களால் அவள் ஒரு திருநங்கை என்கிற உண்மையை ஏற்றுக்கொள்ள முடியாததாலும் சித்ரவதைக்கு உட்பட்டதாலும் வீட்டை விட்டு வெளியேறினார். ஹிஜ்ராக்கள் குழுவில் சேர்ந்து குழந்தை பிறத்தல் மற்றும் திருமணம் போன்ற நிகழ்வில் நடனமாடுதல் மூலம் வருமானம் பெற்றார்.

வேறு வழியில்லாத நிலையில் அவர் பாலியல் தொழிலாளி ஆனார். 34 வயதில் அவருக்கு ஹெச்.ஐ.வி. நோய் இருப்பது தெரியவந்தது. ஹெச்.ஐ.வி. நோய் கண்டறியப்பட்ட முதல் பெண்களில் ஒருவரானார். பல்வேறு சவால்கள் மற்றும் கஷ்டங்களையும் மீறி அவர், ஹெச்.ஐ.வி. தொற்றுக்கு ஆளான குழந்தைகளுக்கு வழிகாட்டும் பணியை மேற்கொண்டார். மேலும் ஹெச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் பாதுகாப்பாக வாழ எஸ்.ஐ.பி. நினைவகத்தையும் நிறுவினார். 1987-ம் ஆண்டு எனக்கு ஹெச்.ஐ.வி. நோய் இருப்பது தெரியவந்தது. 37 ஆண்டுகளுக்குப் பிறகும் நான் உயிர்வாழ்கிறேன். முறையாக மருந்துகள் சாப்பிட்டு வந்தால் இது வெறும் தொற்றுதான் என்பதற்கு நானே ஒரு சிறந்த உதாரணமாகும் என்கிறார் பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ள நூரி.

K மீனாட்சி (நுண்கலை), சத்யஸ்ரீ ஷர்மிளா (சட்டம்), இன்பா இக்னேஷியஸ் (நற்பண்புகள்), பிரியா (சினிமா), பிரக்யா (ட்ரோன் பைலட்) மற்றும் காவ்யா லம்பா (வர்த்தக நிர்வாகம்) ஆகிய 6 பேரும் விருது பெற்றுள்ளனர்.

இந்த நிகழ்ச்சிக்கு RID 3232 மாவட்டத்தைச் சேர்ந்த மெட்ராஸ் எஸ்பிளனேட் ரோட்டரி சங்கம் நிதியுதவி செய்திருந்தது. திருநங்கைகளின் சாதனைகளை அங்கீகரிக்க வேண்டியது கடமை என்பதால் இதற்கு ஆதரவு அளித்தோம் என்றார் சங்கத்தின் தலைவர் பரேஷ் ஜானி.




RAC *கிருஷ்ணசுவாமி கல்லூரி செயலாளர் முனிபிரியா (வலமிருந்து மூன்றாவது) மற்றும் விருது பெற்றவர்கள் (இடமிருந்து) பிரக்யா, காவ்யா லம்பா, இன்பா இக்னேஷியஸ், நூரி, சத்யஸ்ரீ ஷர்மிளா மற்றும் பிரியா.*




RC மெட்ராஸ் எஸ்பிளனேட் தலைவர் பரேஷ் ஜானி விருது பெறுபவர்கள் மற்றும் பங்கேற்கும் அனைத்து சங்க உறுப்பினர்களுடன்.

கல்லூரியின் ரோட்ராக்ட் சங்கத்தின் தலைவர் துர்காஸ்ரீ கூறுகையில், வளர்ந்து வரும் சமூக நெறிமுறைகளின் பின்னணியில் சமூகத்தின் உள்ளடக்கம் மற்றும் சமத்துவத்தை வளர்ப்பதற்கான குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை மாற்றம் விருதுகள் அடையாளப்படுத்து கின்றன என்றார். ஜானி மேலும் கூறுகையில், பல்வேறு துறைகளில் அவர்களின் அசைக்கமுடியாத மன உறுதி மற்றும் சாதனைகளுக்காக அவர்களை கௌரவித்தோம் என்றார்.

திருநங்கை சமூகத்தில் விருது பெற்றவர்களில் குறிப்பிடத்தக்க ஒருவர் சத்யஸ்ரீ ஷர்மிளா. இவர்தான் திருநங்கை சமூகத்தைச் சேர்ந்த முதல் வழக்கறிஞர். பாகுபாடுகள், அவமானங்கள், துன்புறுத்தல் மற்றும் பல்வேறு இடையூறுகளுக்கு நடுவே தனது பயணத்தை தொடர்ந்து வெற்றி பெற்றவர். தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வழக்கறிஞர்கள் சங்கத்தில் 2018-ல் தனது பெயரை பதிவு செய்த இவர் பல்வேறு பிரச்னைகளை சமாளிக்க வேண்டியிருந்தது.

மற்றொரு விருதாளரான 22 வயது பிரக்யா ட்ரோன் பைலட். ரோட்டரி செய்திக்கு அவர் பேட்டியளிக்கையில், சிறுவனாக இருந்த நான் 7-ம் வகுப்பு படிக்கும்போது எனது நிலையை அறிந்து கொண்டேன். என்னை மாற்றிக்கொள்ள பெற்றோர் நிர்பந்தித்த போதிலும் நான் அதை பொருட்படுத்தவில்லை. இப்போதாவது சில பெற்றொர் திருநங்கை குழந்தைகளை ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால், முன்பு அதுபோல் இல்லை. எதிர்ப்புகள்தான் அதிகம். இதன் விளைவு நான் வீட்டை விட்டு வெளியேற வேண்டி இருந்தது என்றார்.

இப்போது அவள் மற்ற திருநங்கைகளுடன் தங்கியிருக்கிறாள். மொத்தம் உள்ள 6 பேரில் 3 பேர் திருநங்கைகள். மற்ற மூவர் ஆணாக மாறிய திருநம்பிகள். ஒரு வாடகை வீட்டில் நாங்கள் திருநங்கைகள் சமூகமாக ஒன்றாக வாழ்ந்து வருகிறோம். அதற்கு திருநங்கை ஒருவரின் தாயார்தான் உதவினார். சென்னையில் நாங்கள் வசிப்பதற்கு இடங்கள் கிடைப்பதுகூட சிரமமாகத்தான் இருக்கிறது. யாரும் எங்களுக்கு வீடு வாடகைக்குத் தர விரும்புவதில்லை என்றார் பிரக்யா.

பிரக்யா ட்ரோன் பைலட்டாக வர விரும்பினாள். அது ஒரு 10 நாட்கள் கொண்ட பயிற்சி வகுப்பு. அதற்கு ரூ.75,000 மற்றும் ஜி.எஸ்.டி. கட்டணமாக இருந்தது. தனியார் அறக்கட்டளை ஒன்று இந்தியன் ஆயில் கார்ப்பொரேஷன் நிறுவனத்தை தொடர்புகொண்டபோது அவர்கள் 15 பேர் பயிற்சிக்கு நிதியுதவ முன்வந்தனர். இதில் நான்கு திருநங்கைகள் மற்றும் 5 ஆண் திருநம்பிகள் அடங்குவர். இந்த பயிற்சி வகுப்பில் முதல் நான்கு மாணவர்களில் இடம்பிடித்த பிரக்யா, தற்போது தனியார் நிறுவனத்தில் தொழில்நுட்ப உதவியாளராக பணிபுரிகிறார்.

சென்னையில் உள்ள பல ரோட்டரி சங்கங்கள், சமூகத்தில் உள்ளடக்கம் மற்றும் பன்முகத் தன்மையை முன்னிறுத்துவதற்காக ஒன்று சேர்ந்துள்ளதாக ஜானி கூறினார். மெட்ராஸ் எஸ்பிளனேட், மெட்ராஸ் காஸ்மாஸ், மெட்ராஸ் நுங்கம்பாக்கம், கும்மிடிபூண்டி இண்டஸ்டிரியல் சிட்டி, மெட்ராஸ் ஃபோர்ட் ரோட்டரி சங்கங்கள் ஆகியவை இதில் அடங்கும். RID 3232 DEI தலைவர் பார்பரா பேடி மற்றும் பல சங்கங்களைச் சேர்ந்த ரோட்டேரியன்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

துர்காஸ்ரீ மேலும் கூறுகையில், இந்த தலைசிறந்த நபர்கள் சவாலான சூழ்நிலை களைக் கடந்து செல்வது மட்டுமல்லாமல், மற்றவர்களுக்கு நம்பிக்கையளிக்கும் ஒளிவிளக்காக திகழ்கின்றனர். இந்த குறிப்பிடத்தக்க நபர்களின் சாதனைகளை நாம் கொண்டாடும்போது சமநிலையான, நியாயமான உலகத்தை உருவாக்க மீண்டும் உறுதி ஏற்போம் என்றார்.■

# ரோட்டரி நியூஸ் சந்தா விதிமுறைகள்

1. சந்தா ரோட்டரி ஆண்டுக்கானது (ஜூலை முதல் ஜூன் வரை).
2. ஒவ்வொரு ரோட்டரியனும் ஒரு ரோட்டரி இதழுக்குக் கண்டிப்பாகச் சந்தா செலுத்தவேண்டும்.
3. முழு ஆண்டுக்கான சந்தாவைப் பரிந்துரைக்கப் பட்ட படிவத்தில் ஜூலை மாதத்தில் அனுப்ப வேண்டும்
4. ஜூலைக்குப் பிறகு சேர்கிறவர்கள் மீதமுள்ள ரோட்டரி ஆண்டுக்கு அச்சு இதழ் ஓர் இதழுக்கு ரூ.40 மற்றும் மின் இதழ் ஓர் இதழுக்கு ரூ.35 என்ற விலையில் பணம் செலுத்தலாம்.
5. ரோட்டரி நியூஸ்-உடன் சங்கத்துக்கு உள்ள சந்தாக் கணக்கு தொடர்ந்து செயல்படும் கணக்காகும். அது ஒவ்வோர் ஆண்டும் ஜூன் மாத முடிவில் முடிவடைவதில்லை.
6. அனைத்து உறுப்பினர்களுடைய பெயர்கள், அவர்களுடைய முழு அஞ்சல் முகவரி, அஞ்சல் குறியீட்டு எண், மொபைல் எண், மின்னஞ்சல் ID ஆகியவற்றைப் படிவம் மற்றும் DD அல்லது காசோலையுடன் அனுப்பவேண்டும். GPAY அல்லது இணைய வங்கிச் சேவை வழியாகவும் செய்யலாம். நீங்கள் இணையத்தில் பணம் செலுத்தும்போது, UTR எண், உங்கள் சங்கத்தின் பெயர், செலுத்திய தொகையை உடனடியாக வாட்ஸாப் (9840078074) அல்லது மின்னஞ்சல் (*rotarynews@rosaonline.org*) மூலம் எங்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள். இதைச் செய்யாவிட்டால், உங்கள் பணம் செலுத்தல் எங்கள் கணக்குகளில் தோன்றாது; உங்கள் சங்கம் செலுத்தவேண்டிய தொகை நிலுவையில் உள்ளது என்று காண்பிக்கப்படும்.
7. உங்கள் உறுப்பினர்களுடைய அஞ்சல் முகவரி, தொடர்புத் தகவல்களை ஒவ்வோர் ஆண்டும் எங்களுக்கு நேரடியாகத் தெரிவியுங்கள். RI அலுவலகம் தகவல்களை எங்களுடன் பகிர்ந்து கொள்வதில்லை.
8. உறுப்பினர்கள் தங்கள் சங்கம் எங்களுக்கு அனுப்பும் சந்தாதாரர்கள் பட்டியலில் தங்கள் பெயர்கள் சேர்க்கப்பட்டிருப்பதை உறுதி செய்யவேண்டும். நீங்கள் பணம் செலுத்திவிட்டீர்கள், ஆனால், உங்கள் பெயரை உங்கள் சங்கம் எங்களுக்கு அனுப்பவில்லை என்றால், உங்களுக்கு இதழின் பிரதி கிடைக்காது அல்லது உங்கள் சங்கம் சந்தாவை மின் இதழுக்கு சேர்த்துள்ளதா என்று உறுதிபடுத்திக்கொள்ளுங்கள்.
9. உறுப்பினர் நிலையில் ஏற்படும் மாற்றங்களைப் பற்றிச் சங்கங்கள் உடனடியாக எங்களுக்குத் தெரிவிக்கவேண்டும்.
10. எங்களிடம் உள்ள பட்டியலின்படி நாங்கள் அனுப்பும் இதழ்களின் எண்ணிக்கைக்கு சங்கங்கள் பணம் செலுத்த வேண்டும்.
11. சங்கங்கள் செலுத்தாத தொகைகள் அந்த சங்கங் களுக்கு நிலுவைத் தொகையாகக் காண்பிக்கப்படும். அதன் பிறகு பெறப்படும் தொகையாவும் முந்தைய நிலுவைத் தொகைகளுக்கு சரி செய்யப்படும்.
12. சங்கங்கள் எங்களுடன் பகிர்ந்துகொள்ளும் பட்டியலை நாங்கள் அவ்வப்போது RIன் தரவுகளுடன் சரி பார்க்கிறோம். விடுபட்ட சந்தாதாரர்களைக் கண்டறிகிறோம்.
13. உறுப்பினர் ஒருவர் ஒரு மாதத்துக்கு இதழைப் பெறாவிட்டால் எங்களுக்கு அதை உடனடியாகத் தெரிவியுங்கள்.
14. சில பகுதிகளில் தபால் வழங்கல் பிரச்சனைகள் இருக்கலாம். அப்படிப்பட்ட சூழ்நிலையில், சங்கங்கள் பிரதிகளை மொத்தமாகப் பெறத் தேர்ந்தெடுக்கலாம். அதற்குக் கூடுதல் கட்டணங்கள் பொருந்தும்.

## சந்தா செலுத்தாத சங்கங்கள் RIஆல் நீக்கப்படும்

ஜூலை 1, 2022 முதல், ரோட்டரி பத்திரிக்கையை சந்தா செலுத்தி வாங்காத ரோட்டரி சங்கங்களை RI வாரியம் நீக்கம் செய்யும் என அதன் ரோட்டரி கொள்கை கோட்பாட்டில் சேர்த்துள்ளது. இணங்காத சங்கங்கள் குறித்த காலாண்டு அறிக்கை, அந்தந்த மாவட்ட ஆளுனர்களுக்கு தெரிவித்த பிறகு, எங்கள் அலுவலகம் மூலம் RIக்கு அனுப்பப்படுகிறது. இந்த சங்கங்களுக்கு **90 நாள் அவகாசம்** வழங்கப்படும், அதன் பிறகு சந்தா செலுத்தாத சங்கம் RIஆல் இடைநீக்கம் செய்யப்படும்.

180 நாட்களுக்கு இடைநிறுத்தப் பட்ட மற்றும் இணங்காத சங்கங் களை,ரோட்டரி நியூஸ், RIக்கு தெரிவித்த பிறகு, "போர்டு அதன் விருப்பப்படி இந்த சங்கங்களை நீக்கம் செய்யலாம்" என்று ஒரு நினைவூட்டல் கடிதத்தை அனுப்பும்.

சங்கத்தலைவர்களே, தயவு செய்து உங்கள் உறுப்பினர்களை ரோட்டரி நியூஸ்-ன் சந்தா செலுத்தி இந்தியாவில் ரோட்டரி செயல்பாடு களின் முழு விவரத்தையும் பெற செய்யுங்கள். உங்கள் PETS/GETS பாடத்திட்டத்தில் கட்டாய சந்தா பற்றிய தகவலைச் சேர்க்க RI பரிந்துரை செய்துள்ளது.



RID 3055 DG *மெகுல் ரத்தோட், RC அகமதாபாத் சர்வம் மற்றும் விருது வென்றவர்களுடன்.*

# பரபரப்பான குஜராத்தி கண்காட்சி

ரோட்டரி செய்திக்குழு

சமீபத்தில் RC அகமதாபாத் சர்வம், RID 3055, நடத்திய சர்வம் பஜார் என்ற ஒரு நாள் சந்தை, பணத்தைத் திறமையுடன் கையாள்கிற குஜராத்தி மக்களின் உள்ளார்ந்த திறனை வெளிப்படுத்தியது. இந்தச் சங்கத்தின் பதிவுத் தலைவர் கீதிகா சலுஜா அவர்களுக்குச் சொந்தமான போஹோ ஹோம்ஸ் அமர்பொருள் கடையில் நடைபெற்ற இந்தச் சந்தை, உறுப்பினர்களின் வளங்களைப் பயன்படுத்தும் திறமைக்குச் சான்றாக அமைந்தது.



60க்கும் மேற்பட்ட காட்சிப் படுத்துவோரைக் கொண்டிருந்த இந்த நிகழ்வு சுமார் 300 பேரை ஈர்த்தது. “வண்ணமயமான அரங்குகள் பல்வேறு பொருட்கள், சேவைகளைக் காட்சிப்படுத்தின. அரங்குகளுக்கான சிறு கட்டணங்கள் ரூ 2,000ல் தொடங்கின, சிலரிடம் மானியக் கட்டணமாக ரூ.1,000மட்டும் வசூலிக்கப்பட்டது.

நிகழ்ச்சியின் வீச்சை விரிவாக்கு வதற்கென, காட்சிப்படுத்துகிற ஒவ்வொருவரும் குறைந்தது 10 பேரை அழைக்கும்படி இந்தச் சங்கம் வலியுறுத்தியது. DG மெஹுல் ரதோட் இந்தச் சந்தைக்கு வருகை தந்தார், “சமூகம் வளர உதவுகிற, உள்ளூர்த் தொழில்களை ஆதரிக்கிற இந்தப் புதுமையான திட்டத்தை நடத்தும்’’ இந்தச் சங்கத்தைப் பாராட்டினார்.

இந்த நிகழ்வு 9 தொழில் வல்லுநர்களுக்குத் தொழில் சார்ந்த சேவை விருதுகளை வழங்கிப் பெருமைப்படுத்தியது. இங்கு காட்சிப்படுத்திய நான்கு பேர் ஊக்கம் பெற்று இந்தச் சங்கத்தில் இணைந்தார்கள்.■

# பன்வெல்-லில் ரோட்டரி காட்டுத் தோட்டம்

V முத்துக்குமரன்



மகாராஷ்டிரத்தின் ராய்காட் மாவட்டத்தில் உள்ள பன்வெல் நகரத்தின் சந்தைப் பகுதிக்கு அருகில், RC பன்வெல் சென்ட்ரல், RID 3131, முன்னெடுப்பில், ரோட்டரி கன்டட் (மராத்தி மொழியில் இதன் பொருள் 'அடர்த்தி') என்ற இரண்டு ஏக்கர் நகரக் காடு முன்புறப் பூங்காவுடன் உருவாகியுள்ளது. இந்தப் பசுமை மையம் உள்ளூர் மக்களையும் பயணிகளையும் ஈர்த்துள்ளது.

"பன்வெல்-லின் மையத்தில் உள்ள இந்த இடத்தில் நெடு நாட்களாக எந்த மரமோ தாவரங்களோ இல்லை. ஆனால், 4,300 காட்டு மரங்களுடன் இங்கு ஒரு மியாவாகிக் காட்டை உருவாக்கிய பிறகு, அதில் ஒரு சிறு பகுதியை ஓர் அழகிய ரோட்டரிப் பூங்காவாக மாற்றிய பிறகு, நாங்கள் இந்த நகரத்தில் ஒரு புதிய அடையாளத்தை உருவாக்கிவிட்டோம்" என்று மகிழ்ச்சியுடன் சிரிக்கிறார் சங்கத் தலைவர் ரதன் கரோல். "இந்தப் பூங்காவில் சிறுவர்களுக்கான விளையாட்டுப்பொருட்கள், மெது ஓட்டத்துக்கான பாதை, மாலை நேரத்தில் முதியவர்கள் இதமாக அமர்ந்து ஓய்வெடுக்க 10 காங்கிரீட் பெஞ்சுகள் உள்ளன. முந்தைய ஆண்டில் இந்த நகரக் காடு 8 மாதங்களில் வடிவமைத்து உருவாக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் செயல்பாட்டின்போது எங்களுக்கு வழிகாட்டிய PDG கிரீஷ் குணெ அவர்களுக்கு நன்றி."

ரோட்டரி காட்டுக்கான திட்டச் செலவான ரூ.90 லட்சத்தில் உறுப்பினர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் ரூ.60 லட்சம் பங்களித்தார்கள். மீதித் தொகை 3 நிறுவனங்களின் CSR நல்கைகளின் மூலம் பெறப்பட்டது. அதேபோல், பூங்காவுக்கான ரூ.65 லட்சம் செலவில் ரோட்டரியன்களும் அவர்களுடைய உறவினர்களும் ரூ.37 லட்சம் பங்களித்தார்கள். மீதித் தொகையான ரூ.28 லட்சம் CSR நல்கைகளின் மூலம் பெறப்பட்டது.

பன்வெல் நகராட்சிக் கழகம் (PMC) இந்த நிலத்தை ரோட்டரிக்குப் பரிசளித்தபோது, இந்தச் சங்கம் 3 ஆண்டுகளுக்கு இந்தக் காட்டையும் பூங்காவையும் பராமரிக்கும் என்றும், அதன்பிறகு இந்தப் பசுமை மையம் இந்தக் குடிமையியல் அமைப்பிடம் ஒப்படைக்கப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. "இப்போது, உள்ளூர் மக்களுடைய வரவேற்பையும் நாங்கள் பூங்காவைப் பராமரிக்கும் விதத்தையும் பார்த்தபிறகு, நகராட்சி எங்கள் உரிமையை 7 ஆண்டுகளுக்கு நீட்டிக்க விரும்புகிறது" என்கிறார் கரோல். இந்தச் சங்கம் மாதந்தோறும் இந்த பூங்காவிற்கு ரூ.40,000 செலவழிக்கிறது.■



*ரோட்டரி கார்டனில் PDG கிரிஷ் குணே, சங்க தலைவர் ரத்தன் கரோல், செயலாளர் அனில் காண்டேகர்.*

Rotary PEOPLE OF ACTION

# சண்டிகரில் TB நோயாளிகளுக்கு ஊட்டச்சத்துப் பொதிகள்

ரோட்டரி செய்திக்குழு

காசநோய்க்கு எதிரான அரசாங்கத்தின் போரில் RC சண்டிகர் மிட்-டவுன், RID 3080, பங்கேற்கிறது, காசநோயை நீக்கப் போராடுகிறது. இதற்கென இவர்கள் ஹல்லொமஜ்ரா கிராமத்தில் காசநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு மாதந்தோறும் ஊட்டச்சத்துப் பைகளை வழங்குகிறார்கள்.

இந்தச் சங்கத்தின் சமூக சேவை இயக்குநர் மஞ்சுஸ்ரீ சர்மா தலைமையிலான குழுவினர், இந்தக் கிராமத்தில் காசநோய்பற்றியும், நோயாளிகள் மருந்துகளைச் சரியாக எடுத்துக்கொள்ளவேண்டியதன் தேவையைப்பற்றியும் விழிப் புணர்வை உண்டாக்கினார்கள்.



*காசநோயால் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு சத்துணவுப் பை வழங்கப்படுகிறது.*

சண்டிகரின் பல்வேறு பகுதிகளில், குளிர்கால இரவுகளுக்கு எதிரான பாதுகாப்புக்கென, கர்மாஹட் (கதகதப்புத்) திட்டத்தின்கீழ், மூன்று நாட்களுக்கு, ரோட்டராக்டர்களுடைய உதவியுடன், நலிந்த குடும்பங்களுக்குச் சுமார் 100 போர்வைகள், காலுறைகள் வழங்கப்பட்டன. இத்துடன், லோஹ்ரிப் பண்டிகையின் மகிழ்ச்சியைப் பரப்பும் வகையில், வேர்க்கடலை, சோளப்பொரி, ரெவடி என்ற இனிப்பு உருண்டை ஆகியவற்றைக் கொண்ட 100 தின்பண்டப் பொட்டலங்களையும் திட்டக் குழுவினர் வழங்கினார்கள்.

ஹரிப்பூரில் உள்ள ரோட்டரி தொழில் சார்ந்த மையத்தில் ஆறு மாத அழகுக் கலைப் பயிற்சி பெற்ற பெண்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இவர்களில் சிலருக்கு, அழகு நிலையங்களில் உதவிக் கலைஞர்களாக வேலை கிடைத்துள்ளது.■

# இளைஞர்களுக்குப் பயிற்சி, வேலை வாய்ப்பு

RC சந்தன் நகர், RID 3291, மேற்கு வங்காளத்தில் உள்ள ஹூக்ளி மாவட்டத்தைச் சேர்ந்த செராம்போரில் இருக்கும் L&T கட்டுமானத் திறன்கள் பயிற்சி அமைப்புடன் (CSTI) இணைந்து, 30 வயதுக்கு உட்பட்ட, நலிந்த குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்கள், பள்ளிப் படிப்பை




*பயிற்சி பெற்றவர்களுடன் RC சந்தன் நகர் உறுப்பினர்கள்.*

நிறுத்திய 30 பேருக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கவுள்ளது. இங்குள்ள பணியிட மாதிரி வளாகத்தில், கம்பியை வளைத்தல், தச்சு வேலை, சாரம் அமைத்தல், கொத்து வேலை போன்ற கட்டுமானம் தொடர்பான பயிற்சிகள் இவர்களுக்கு வழங்கப்படும். இந்த வகுப்புகள் CST-ஐ வளாகத்தில் 45 நாட்கள் நடைபெறும். அதன் பிறகு, இந்த அமைப்பு இந்த மாணவர்களை இந்தியா முழுவதுமுள்ள L&T கட்டுமானப் பகுதிகளில் ஒன்பது மாதங்களுக்குப் பணி பயில்வோராகச் சேர்த்துக் கொள்ளும், அவர்களுக்குத் தங்கும் வசதியும் மாத உதவித் தொகையாக ரூ.13,146ம் வழங்கும். இவர்கள் பணி பயில் நிலையை வெற்றிகரமாக நிறைவு செய்ததும், இந்தப் பெருநிறுவனத்தின் பணியிடங்களில் வழக்கமான பணியாளர்களாக வேலைக்குச் சேரலாம்.

ஆகஸ்ட் மாதத்தில் இந்தச் சங்கம் நம்கானா போன்ற கிராமப்புறப் பகுதிகளிலிருந்தும், தெற்கு 24 பரகானாஸ் மாவட்டத்தின் சுந்தரவனப் பகுதிகளிலிருந்தும் 7 இளைஞர்களை இப்பயிற்சிக்கெனத் தேர்ந்தெடுத்தது. ■

# ஃபாலி நரிமனின் வீரியத்தையோ தீவிரத்தையோ வயது குறைக்கவில்லை

ஸ்ரீராம் பஞ்சு

நம் நாடும் அதன் சட்டத் தொழிலும் ஈடுசெய்ய முடியாத இழப்பை Feb 21 அதிகாலை சந்தித்தது. ஃபாலி சாம் நரிமன் மக்கள் நீதிமன்றத்திலிருந்து கடவுளின் நீதிமன்றத்திற்குச் சென்றார். அவருக்கு வயது 95, ஆனால் வயது அந்த மனிதரின் வீரியத்தையோ தீவிரத்தையோ குறைக்கவில்லை. அவரது கடைசிப் புத்தகம் சில மாதங்களுக்கு முன்பு வெளியிடப்பட்டது. சமீபத்தில், இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் நீதிபதி மதன் லோகுர் அவர்கள் என்னுடன் இணைந்து நீதிபதி முரளிதர் ஒதுக்கப்பட்டதை பற்றி கட்டுரை எழுதியுள்ளார், மேலும் ஆர்டிகல் 370 வழக்கு தொடர்பாக கரண் தாப்பருடன் அவர் அளித்த பேட்டி இன்னும் நம் நினைவில் புதிதாக உள்ளது. “பழைய வழக்கறிஞர்கள் மறைந்துவிட மாட்டார்கள், அவர்கள் மதிப்பை இழக்கிறார்கள்” என்பது சட்ட வட்டாரங்களில் நகைச்சுவையாக சொல்லப்படுவது, ஆனால் ஃபாலி மறையவுமில்லை அல்லது அவரை நேசித்த பலரிடம் தனது மதிப்பை இழக்கவுமில்லை.

நரிமன் நிறைய விஷயங்களை செய்தார் அதனால் அவரைப் பற்றி எழுதுவது கடினம் அல்ல. அவர் செய்த செயல்களில் பலவற்றில் சிறப்புடையவராக இருந்தார், எனவே அந்த மனிதனைப் பற்றியும் அவரது வேலையைப் பற்றியும் ஒரு முழுமையான படத்தை வரைவது கடினம். ஒரு வழக்கறிஞராக அவர் தனது சகாக்களை விட தனித்துவமாக திகழ்ந்தார். அவரது உரத்த மற்றும் சக்திவாய்ந்த குரல், வலுவான வாதங்கள், விரிவான சட்ட அறிவு, முழுமையான தயார்படுத்தல் மற்றும் நேர்மைக்கான நற்பெயர் ஆகியவை அவரை பயமுறுத்தும் எதிராளராக மாற்றியது. ஆனால் அவர் நீதிமன்றம் மற்றும் தொழிலுக்கான தனது கடமையில் நேர்மையானவராக இருந்தார். அவரால் மூத்த வழக்கறிஞர்களை கூட எளிதாக வீழ்த்த முடியும் ஆனால் அதே வேளையில் அவர் இளையவர்களுக்கு கனிவாக ஊக்கமளிப்பவராகவும் இருந்தார். சில தசாப்தங்களுக்கு முன், ராமர் பாலம் வழக்கில், தலைமை நீதிபதி பெஞ்ச் முன், சேதுசமுத்திரம் கப்பல் சேனலுக்கு எதிரான சுற்றுச்சூழல் வாதங்களை நான் வைத்தபோது, நரிமன் அரசு தரப்பின் தலைமை வழக்கறிஞராக இருந்தார். நான் முடித்ததும், இப்படித்தான் ஒரு வழக்கை வாதாட வேண்டும் என்று சத்தமாகச் சொன்னார். இதை விட பெரிய பாராட்டை நான் பெற்றதில்லை. அப்போதிருந்து, என்னுடைய இந்த ஹீரோவிடமிருந்து பல கருணை களைப் பெற்றுள்ளேன், இதில் எனது புத்தகமான மெடிடேஷேன்: ப்ராக்டிஸ் அண்ட் லா பற்றிய ஒரு பிரகாசமான அறிமுகமும் அடங்கும்.

அவர் சிறந்த வழக்கறிஞர் என்பதை தாண்டி சிறந்து விளங்கியவர். அவர் ஒரு சிறந்த எழுத்தாளராகவும் இருந்தார், சட்டம் மற்றும் நீதி பற்றிய அவரது புத்தகங்கள் படிக்க எளிதானவை மற்றும் ஆழமான அறிவாற்றல்

*ஃபாலி நரிமன்* (1929–2024)



கொண்டவை, அவை அவரது பல வருட அனுபவத்தையும் சிந்தனைமிக்க பரிசீலனையையும் பிரதிபலிக்கின்றன. அவர் ஒரு சிறந்த பொதுப் பேச்சாளரும் கூட, அவரது உரைகள் கதைகள், புத்திசாலித்தனம் மற்றும் ஞானம் ஆகியவற்றைக் கொண்டிருக்கும். பொது நேர்காணல்களுக்காக அதிகம் தேடப்பட்ட அவர், அணுகக்கூடியவராகவும் வெளிப்படையாகவும் இருந்தார். மேலும் அவர் ஒரு பொது அறிவுசார் ஞானி, அவர் நன்னடத்தையின் தரத்தை உயரத்தில் வைத்திருந்தார். எல்லாவற்றிற்கும் மேலாக அதிகாரத்தின் மீதான அவரது அணுகுமுறை பாராட்டுக்குரியது. அதிகாரத்தையும், அதை தவறாகப் பயன்படுத்துபவர்களையும் அவர் பொருட்படுத்தியதே கிடையாது. அவர் அதிகாரத்தின் முகத்தில் குறிப்பிடத்தக்க இரண்டு அறைகளை வழங்கினார் - ஒன்று திருமதி காந்தியின் அரசாங்கத்திற்கு - அவசரநிலை



பிரகடனப்படுத்தப்பட்ட உடனேயே அவர் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் பதவியை ராஜினாமா செய்தார், மற்றொன்று குஜராத் அரசாங்கத்திற்கு - கிறிஸ்தவர்கள் மீதான தாக்குதலுக்குப் பிறகு அவர் வழக்காடல்களை திருப்பி கொடுத்துவிட்டார். அவர் நாட்டின் மிக உயர்ந்த வழக்கறிஞர், ஆனால் அவர் அட்டர்னி ஜெனரலாக ஆகவில்லை, ஏன் என்று யூகிக்க எந்த பரிசும் தேவையில்லை.

வெளிப்படையாகப் பேசுவதில் இருந்து வரும் மன தெளிவு ஒன்று உள்ளது, இது பேச வேண்டிய நேரத்தில் பேசத் தவறியவர்களால் இழக்கப்படுகிறது. நரிமன் சுற்றிவளைத்து பேசியதே இல்லை, கண்டிக்கப்பட வேண்டிய நபர்களை அவர் விட்டதில்லை. அவர் இருப்பதை இருப்பது போலவே சொல்பவர். உயர்ந்த பதவியில் இருப்பவர் தவறு செய்தல் வசை இன்னும் கூர்மையாக இருக்கும். அவர் கோபத்தை விட ஏமாற்றத்தையே அதிகமாக உணர்ந்தார். அவர் நபர்களை குறிவைக்கவில்லை, பிரச்சனை மற்றும் அதன் விளைவுகளில் கவனம் செலுத்தினார். மதச்சார்பற்ற இந்தியாவுக்கு அவரை விட சிறந்த வழக்கறிஞர் இருந்ததில்லை. பார்சியான அவர், ரங்கூனில் பிறந்தவர், ஆரம்ப ஆண்டு களை பம்பாயில் கழித்தவர், அவர் இந்த நாட்டின் உள்ளார்ந்த மதிப்பை அறிந்திருந்தார், மேலும் அவர் ஒருமித்த தன்மையை வெறுத்தார். செயின்ட் ஸ்டீபன்ஸ் கல்லூரி வழக்கில் சிறுபான்மைக் கல்வி நிறுவனங்களைப் பாது காப்பதற்கான சட்டத்தைக் கொண்டுவர அவர் உதவினார், மேலும் வழிபாட்டுத் தலங்கள் தொடர்பான சர்ச்சைகளைத் தீர்க்க நீதிமன்றம் தவறியதற்கு அவர் ஆழ்ந்த வருத்தம் தெரிவித்தார்.

தைரியமாகவும் வலுவாகவும், நம்பிக்கை, அணுகுமுறை, சிந்தனை மற்றும் பேச்சு ஆகியவற்றில் அவர் மிகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவில் ஒருவராக இருந்தார் - லீக் ஆஃப் எக்ஸ்ட்ரார்டினரி லீகல் ஜெண்டில்மேன். நமது பிரியாவிடைகள் துக்கத்தில் மூழ்கியிருந்தாலும், அவர் முன்வைத்த மரபுகளை உறுதியாக கடைப்பிடிப்பதே நாம் அவருக்கு செலுத்தக்கூடிய சிறந்த அஞ்சலி என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால், பழைய போர்வீரன் நிம்மதியாக ஓய்வெடுப்பான்.

(கட்டுரையின் எழுத்தாளர் உச்ச நீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர். இந்தக் கட்டுரை முதலில் தி இந்துவில் பிரசுரிக்கப்பட்டது.)



# அமைதியான நம் இளமைப்பருவத்தின் குரல்

ரஷீதா பகத்

ஒவ்வொரு புதன்கிழமை மாலையும் 'நமஸ்கர் பெஹ்னோ அவுர் பாய்யோன், மெயின் ஆப்கா தோஸ்த் அமீன் சயானி போல் ரஹா ஹூன்' என மிகவும் எதிர்பார்க்கப்பட்ட அந்த மந்திர வார்த்தைகளை நினைவு கூரும் போது, குறிப்பிட்ட தலைமுறை இந்திய இசை ஆர்வலர்கள் கண்களை மூடிக்கொள்ள ஏக்கத்தின் அலைகள் அவர்களை மூழ்கடிக்கும்.

எப்போதும் பெஹ்னோ அவுர் பாய்யோன் என்றே ஆரம்பிக்கப்படும். நமது அரசியல்வாதிகள் அனைவரும் தங்கள் பேச்சைத் தொடங்குவதற்கு முன்பு உண்மை மற்றும் கற்பனை, செய்யமுடியாத வாக்குறுதிகள் மற்றும் தங்கள் அரசியல் எதிரிகளை கடுமையாக விமர்சிப்பது போன்றவற்றுக்கு பயன்படுத்தும் பாய்யோன் அவுர் பெஹ்னோ ஒருபோதும் பயன்படுத்தப்படாது

ஒவ்வொரு புதன்கிழமை மாலையும், நாம் சிறிது சீக்கிரம் இரவு உணவை சாப்பிட்டுவிட்டு, ரேடியோ முன் அமர்ந்து ரேடியோ சிலோனில் பினாகா கீத்மாலாவின் புகழ்பெற்ற வானொலி தொகுப்பாளர் அமீன் சயானியின் மந்திரக் குரலைக் கேட்போம். பாடலைப் ஒலிப்பதற்கு முன், பாடகர், பாடலாசிரியர் மற்றும் இசையமைப்பாளர் பற்றிய முழுமையான தகவல்களுடன், ஒவ்வொரு வாரமும் பிரபலமான ஹிந்தித் திரைப்படப் பாடல்களுடன் ஒரு மணிநேரம் நம்மை மகிழ்விப்பார். இணையம் அல்லாத, கூகுள் அல்லாத காலத்தில் மிகவும் பயனுள்ள தகவல்! மற்றும் ஓ அந்த இனிமையான மெல்லிசைகள்... ரஃபி, லதா, கிஷோர், முகேஷ், ஹேமந்த், ஆஷா, மன்னா டே... அவர்களின் பொன்னான குரல்கள் நம் வீடுகளையும் இதயங்களையும் நிரப்பும்.



*வானொலி தொகுப்பாளர் அமீன் சயானி* (1932–2024)



லதா மங்கேஷ்கருடன்.

அவரது ஆழமான மற்றும் மயக்கும் குரல் மற்றும் சொற்பொழிவுகளில், ஹிந்தி மற்றும் உருது வார்த்தைகளின் கலவையின் மிக நுட்பமான நுணுக்கங்களுடன், அனைவருக்கும் புரியும் வகையில் சயானி 60 நிமிடங்களுக்கு அலாதியான இசையை நமக்கு வழங்குவார்.

பாடலுக்கு கோரிக்கை செய்தவர்களின் பெயர்கள் படிக்கப்படும், பாடல் மிகவும் பிரபலமாக இருந்தால், அதற்கான கோரிக்கை பட்டியல் நீளமாக இருக்கும். பாடலைக் கேட்க ஆவலாக இருக்கும் நம்மை இது எரிச்சலடையச் செய்யும். கிராம போன்களும் ரெக்கார்டு பிளேயர்களும் இப்போதுதான் வந்து கொண்டிருந்தன என்பதை நினைவில் வையுங்கள், தொலைக்காட்சி வருவதற்கு பல காலம் இருந்தது, மொபைல் போன்களை உலகம் கனவில் கூட நினைத்திருக்காது. கீத்மாலா நேரம் உண்மையிலேயே ஆனந்த நேரம்.



அப்போதைய தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர், ஹிந்தித் திரைப்படப் பாடல்கள் மிகவும் கொச்சையானவை என்று முடிவெடுக்க அவை அகில இந்திய வானொலியில் தடை செய்யப்பட்டன.

இந்த புகழ்பெற்ற வானொலி தொகுப்பாளர் பிப்ரவரி 20 அன்று மாரடைப்பால் காலமானார். அவருக்கு வயது 91. பினாகா கீத்மாலா, 1952-ஆம் ஆண்டு சிலோன் ரேடியோவில் 30 நிமிட நிகழ்ச்சியாகத் தொடங்கியது, ஆனால் 1950கள் மற்றும் 60களில் மிக பிரபலமானது. இது அதன் பெயரை பினாக்கா கீத்மாலாவிலிருந்து ஹிட் பரேட் என்றும் பின்னர் சிபாகா கீத்மாலா என்றும் மாற்றியது, ஆனால் அதன் சாராம்சம் 1952 முதல் 1994 வரை மாறவே இல்லை

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு,1952-ல் தொடங்கப்பட்ட பினாகா கீத்மாலா, சிலோன் வானொலியில் ஏன் ஒளிபரப்பப்பட்டது என்று நீங்கள் எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா? அதற்குக் காரணம், அப்போதைய தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர், ஹிந்தித் திரைப்படப் பாடல்கள் மிகவும் கொச்சையானவை என்று முடிவெடுக்க அவை அகில இந்திய வானொலியில் தடை செய்யப்பட்டன. மிகவும் பிரபலமான மாதுரி தீட்சித்தின் சோலி கே பீச்சே க்யா ஹேய்க்கு அந்த மரியாதைக்குரிய மனிதரின் பதில் என்னவாக இருந்திருக்கும் என்று ஆச்சரியப்படுங்கள்!

பிரபலமான மேற்கத்திய பாடல்களை கேட்க, ஆல் இந்தியா ரேடியோவின் மெட்ராஸ் ஸ்டேஷனில் லிஸ்ஸனர் சாய்ஸ் என்ற நிகழ்ச்சியை ஆவலுடன் ட்யூன் செய்வோம்.

சயானியின் மறைவு குறித்து பல்வேறு சமூக ஊடக தளங்களில் மக்கள் வெளிப்படுத்திய துயரம், பணியின் மீதான பக்தி, ஆர்வம் மற்றும் அர்ப்பணிப்பு... மற்றும்



*அமிதாப் பச்சனுடன்.*

ஒரு குறிப்பிட்ட வகையான ஜென்டில்மேன் நடத்தை ஆகியவற்றை என்றும் மக்கள் மறக்கமாட்டார்கள் என்பதை நிரூபிக்கிறது. தொலைக்காட்சி விவாதங்களின் போது ஆவேசமும், கூச்சலும், கொச்சைப் பேச்சும், அவதூறும் நிறைந்த ஊடகங்களின் சகாப்தத்தில் சயானியின் மென்மையான மற்றும் அமைதியான குரலில் வழங்கப்படும் கீத்மாலா போன்ற ஒரு நிகழ்ச்சியை நினைத்துப் பார்ப்பது கடினம். அந்த 60 ஓய்வான நிமிடங்கள் ஒருவரின் அன்றைய சோர்வைப் போக்கியது என்றால் அது மிகையாகாது.

அப்படியென்றால் சயானியை மயக்கும் மற்றும் அன்பான உருவமாக மாற்றியது எது? 1932-இல் பிறந்த அமீன் சயானி இலக்கியமும் மொழியும் தலைசிறந்து விளங்கிய குடும்பத்தில் இருந்து வந்தவர். மகாத்மா காந்தியால் தொடங்கப்பட்ட ரஃஃபர் என்ற இதழைத் திருத்துவதில் அவர் தனது தாயாருக்கு உதவினார். அது ஹிந்தி, உருது மற்றும் குஜராத்தி மொழிகளில் ஒரே நேரத்தில் வெளியிடப்பட்டது. அவரது சகோதரர் ஹமித் சயானி ஒரு சிறந்த ஆங்கில ஒலிபரப்பாளராக இருந்தார் மற்றும் அமீன் 1951-இல் ரேடியோ சிலோனில் தனது பணியை தொடங்கினார்.

அகில இந்திய வானொலி

> *பினாகா கீத்மாலா நிகழ்ச்சி நாடு முழுவதும் உள்ள மக்களை ஒன்றிணைத்த எளிமையான ஹிந்துஸ்தானியை விளம்பரப்படுத்துவதற்கான ஒரு ஊடகமாக மாறியது.*
>
> **— ரேடியோ ஜாக்கி சயிமா**

*கேட்கும் ஒவ்வொருக்கும் நான் அவர்களிடம் நேரடியாக பேசுவதை போல் உணர வேண்டும் என்று நான் விரும்பினேன்.*

— அமீன் சயானி

ஹிந்தித் திரைப்படப் பாடல்களை ஒலிபரப்புவதைத் தடை செய்ய, அடுத்த ஆண்டு அவர் பினாகா கீத்மாலாவைத் தொடங்கினார். அது உடனடியாக ஹிட் ஆனது. இந்த நிகழ்ச்சி, நாடு முழுவதும் உள்ள மக்களை ஒன்றிணைத்த எளிமையான ஹிந்துஸ்தானியை விளம்பரப்படுத்து வதற்கான ஒரு ஊடகமாக மாறியது. மேலும் பல தசாப்தங்களாக இது மிகவும் பிரபலமாக இருந்தது, 1994 வரை இயங்கியது.

சயானி ஒரு பின்னணிக்குரல் கலைஞராகவும் பின்னர் ஒரு பிரபலமான நேர்காணலாளராகவும் இருந்தார், மேலும் அவரது பெரும் ரசிகர்களின் ஆதரவின் காரணமாக, லதா மங்கேஷ்கர் போன்ற ஜாம்பவான்களிடம் கடினமான கேள்விகளைக் அவரால் கேட்க முடிந்தது – அவரின் ராயல்டி விவகாரங்களில் முகமது ரஃபியுடன் இருந்த பிரச்சனையைப் பற்றி வெளிப்படையாக அவரிடம் கேள்வி எழுப்பினார். அந்த நாட்களில் மிகவும் சர்ச்சைக்குரிய விஷயமாக அது இருந்தது. ஒருமுறை, அமிதாப் பச்சன் ஒரு வானொலி தொகுப்பாளராக வேண்டும் என்ற கனவை வளர்த்துக் கொண்டிருந்தார் என்றும், அவரது ஆழ்ந்த மந்திரக் குரல் என்ன வெற்றி பெற்றிருக்கும் என்றும் அவர் ஒரு நிகழ்ச்சியில் வெளிப்படுத்தினார். பாலிவுட்டில் தனது அதிர்ஷ்டத்தை சோதிப்பதற்கு முன்பு ஆல் இந்தியா ரேடியோவின் மும்பை ஸ்டுடியோ ஆடிஷனுக்காக அவர் சென்றிருக்கிறார். ஆனால் அவர் அப்பாயின்ட்மென்ட் எடுக்காததால் சயானியை அவரால் சந்திக்க முடியவில்லை!

அப்படியென்றால் ஏன் அமீன் சயானி கேட்போரின் இதயங்களைக் கவர்ந்தார்? ரேடியோ சிலோனில் தனது வெற்றியைப் பற்றி அவர் ஒரு நேர்காணலில் கூறியது இதுதான்: கேட்கும் ஒவ்வொருக்கும் நான் அவர்களிடம் நேரடியாக பேசுவதை போல் உணர வேண்டும் என்று நான் விரும்பினேன், அது உடனடியாக புரிந்துக்கொள்ளப்பட்டது. இது, ஆச்சரியப்படும் விதமாக, வானொலியில் புரட்சியை ஏற்படுத்தியது. வரும் ஆண்டுகளில் இது ஒரு நிகழ்வாக மாறும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அவை மிகவும் அற்புதமான காலங்கள். இது ரேடியோ சிலோனுடனான எனது காதல்.

ஆனால் நாம் ஏன் அவரை நினைத்து வருந்துகிறோம் என்பதை X-இல் ஒரு சிறிய வீடியோ காட்சியை வெளியிட்ட ஒரு ரசிகர் சுருக்கமாகச் சொல்லியிருக்கிறார். அழகான ஹிந்தி/உருது மொழியில் அப்பெண், அவருடைய மந்திரக் குரல் மற்றும் அவரது அற்புதமான உச்சரிப்புக்காக மட்டும் நாம் வருத்தப்படவில்லை. நாம் வருந்தியதற்கு முக்கிய காரணம் அவர் ஒரு கடினமான நேரத்தில் ஒரு இனிமையான தைலமாக நமக்கு கிடைத்தார் சுதந்திரத்திற்குப் பிறகு, நாம் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தோம், ஆனால் சோகமாகவும் இருந்தோம், ஏனென்றால் நாம் நிறைய இழந்திருந்தோம், சொந்தங்களை இழந்திருந்தோம், உள்ளுக்குள் பல காயங்களை ஆற்றிக் கொண்டிருக்கிறோம். சிறிது நேரம் என்றாலும் நம் வலியிலிருந்து நம்மை விடுவிக்கும் ஒருவருக்காக நாம் ஏங்கிக் கொண்டிருந் தோம். அவரது இனிமையான வர்ணனை மற்றும் வானொலியுடன் நாம் முணு முணுத்த பாடல் களுடன் அமீன் சயானி சாப் அதைச் செய்தார். அன்பு மீண்டும் ஆட்சி செய்யும், நல்ல காலம் வரும் என்று நமக்கு நம்பிக்கை கொடுத்தார்'' என்று கூறினார். ■



நூர் ஜெஹானுடன்

# புவனேஸ்வரில் மனநல மையம்

ரோட்டரி செய்திக்குழு



RI *தலைவர் கோர்டன் மெக்கினலி மற்றும் ஹீதர் மனநல மையத்தில்* PDG *கஜேந்திர சிங் நரங்,* DG *ஜெயஸ்ரீ மொஹந்தி,* PDG DN *பதி மற்றும்* RI *இயக்குனர் அனிருதா ராய்சௌத்ரி ஆகியோருடன்.*

ஒடிசா மாநிலம், புவனேஸ்வரில் RID 3262-க்கு உட்பட்ட புவனேஸ்வர் ரோட்டரி சங்கம் சார்பில் அமைக்கப் பட்ட ஆஷா மனநல மையத்தை ரோட்டரித் தலைவர் கோர்டன் மெக்கினலி திறந்துவைத்தார். மனநலப் பிரச்னைகளைத் தீர்ப்பதில் நிபுணத்துவம் பெற்ற, ஒடிஸாவைச் சேர்ந்த தொண்டு நிறுவனமான மனம் அறக்கட்டளை அறக்கட்டளையுடன் இணைந்து இந்த வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அந்த தொண்டு நிறுவனம் பரிந்துரைத்த ஆலோசகர்களைக் கொண்டு முழுநேர உதவி மையம் செயல்படுகிறது. மன உளைச்சலால் பாதிக்கப்பட்டவர்கள் அழைப்பு விடுத்தால் ஆலோசனை மற்றும் உணர்வுபூர்வமான ஆதரவு வழங்கப் படுகிறது. நெருக்கடியான நேரத்தில் தலையிட்டு தற்கொலை முயற்சி யை தடுப்பார்கள் மற்றும் மனநல மருத்துவ சேவைகளுக்குப் பரிந் துரைப்பார்கள். அடுத்த கட்டமாக, ஆலோசகர்கள், மருத்துவ உளவியலாளர்கள், மனநல மருத்து வர்கள் மற்றும் மாற்று சிகிச்சை யாளர்கள் ஒரே இடத்தில் செயல்படும் மையத்தை உருவாக்கவும் திட்ட மிட்டுள்ளோம் என்று திட்டத்தின் தலைவர் பூமி மொஹந்தி தெரிவித்தார். மாவட்ட நிர்வாகம், ஒடிஸாவில் உள்ள இந்திய மனநல சங்கத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. அதன் உறுப்பினர்கள் ஆஷா மையத்தில் மனநலம் பாதிக்கப்பட்ட நோயாளி களுக்கு இலவசமாக ஆலோசனை வழங்குவார்கள். அதுமட்டுமல்லாமல் அவர்களின் குடும்பங்களுக்கு அவர்களின் அன்புக்குரியவர்களுக்கு தேவையான ஆதரவையும் அளிப்பார்கள்.

ரோட்டரி சங்கம் தற்போதுள்ள கட்டடத்தை ரூ.7 லட்சம் செலவில் புதுப்பித்துள்ளது. 3 ஹெச் மானியத் திட்டத்தின் ஒரு பகுதியாக மையத் தையும் நிறுவியுள்ளது. மேலும் இந்த திட்டத்தைச் செயல்படுத்து ஆண்டுக்கு ரூ.10 லட்சம் வரை செலவாகலாம் என்று மொஹந்தி மதிப்பிட்டுள்ளார். இந்த திட்டத்தை முன்னோக்கி எடுத்துச் செல்லும் விதமாக இரண்டாவது கட்டமாக உலகளாவிய மானியத் திட்டம் TRF அறக்கட்டளையிடம் சமர்ப்பிக் கப்பட்டுள்ளது. மாவட்ட மானியம் மற்றும் உலகளாவிய மானியத்துக்கான DDF மூலம் இத்திட்டத்துக்கு ஆதரவு அளிக்க மாவட்ட ஆளுநர் ஜெய்ஸ்ரீ மொஹந்தி உறுதியளித்துள்ளார். இந்த மையத்தை இயக்குவதற்கு கார்ப்பொரேட் நிறுவனங்களின் சமூக பொறுப்புணர்வு நிதி ஆதரவுக்கான நடவடிக்கைகளையும் எடுத்து வருவதாக திட்டத் தலைவர் கூறினார்.

ஜனவரி மாதம் நடைபெற்ற இந்த மையத்தின் திறப்பு விழாவில், ரோட்டரி இயக்குநர் அனிருத ராய்சௌத்ரி, மாவட்ட ஆளுநர் ஜெய்ஸ்ரீ உள்ளிட்டோர் பங்கேற்றனர்.■

---

## ROTARY NEWS PLUS

படித்தீர்களா?

அல்லது உங்கள் e-mailல் உள்ள Junk folder-க்கு செல்கிறதா?




ஒவ்வொரு மாதமும் நாங்கள் **Rotary News Plus** என்னும் ஆங்கில ஆன்லைன் வெளியீட்டினை ஒவ்வொரு Rotary News சந்தாதாரர்க்கும் e-mail மூலம் அனுப்புகிறோம்.

உங்கள் பெயர், ரோட்டரி சங்கம், மாவட்டம் மற்றும் ஈமெயில் முகவரி ஆகியவற்றை எங்களுக்கு rotarynews@rosaonline.org என்ற முகவரிக்கு பகிரவும்.

**Rotary News Plus** இதழை எங்கள் வளைத்தளமான *www.rotarynewsonline.org*-யிலும் காணலாம்.

# RI தெற்காசியா அலுவலகத்திலிருந்து செய்தி

**உலகளாவிய மானிய உதவிக்குறிப்புகள்**

**உங்கள் விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கு முன்கூட்டியே திட்டமிடுங்கள்:** விண்ணப்பிக்க காலக்கெடு எதுவும் இல்லை, மேலும் நீங்கள் ஆண்டு முழுவதும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம். இருப்பினும், ஜூன் மாதத்தில் நீங்கள் அதைச் சமர்ப்பித்தால், அந்த நேரத்தில் அதிக அளவு சமர்ப்பிப்புகள் இருப்பதால், ரோட்டரி ஆண்டு முடிவதற்குள் உங்கள் விண்ணப்பம் மதிப்பாய்வு செய்யப்படாமலும் அங்கீகரிக்கப்படாமலும் போகலாம்.

**விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்படும் முன் பணப்பங்களிப்புகளை அனுப்ப வேண்டாம்:** பிராந்திய மானிய அதிகாரியிடமிருந்து அதிகாரப்பூர்வ ஒப்புதல் அறிவிப்பைப் பெறும் வரை காத்திருந்து பணப் பங்களிப்புகளை அனுப்பவும். அனைத்து பங்களிப்புகளுடன் மானிய எண்ணையும் சேர்க்கவும். உங்கள் விண்ணப்பம் அங்கீகரிக்கப்படா விட்டால், பங்களிப்புகள் திரும்பப் பெறப்படாது.

**விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் முன் நிதியுதவியை உறுதிப்படுத்தவும்.** மானிய விண்ணப்பம் அங்கீகரிக்கப் பட்ட பிறகு, திட்ட நிதி ஆதாரங்கள் மற்றும் தொகைகளை மாற்றமுடியாது, எனவே எல்லாவற்றையும் முன்கூட்டியே துல்லியமாக உறுதிப் படுத்துவது முக்கியம். ரொக்கம், மாவட்ட நியமிக்கப்பட்ட நிதிகள், நேரடி மற்றும் வழங்கப்பட்ட பரிசுகள், TRF நன்கொடையாளர் ஆலோசனை நிதிகள் மற்றும் உலக நிதியம் உட்பட அனைத்து நிதி ஆதாரங்களையும் தொகைகளையும் சரிபார்க்கவும். உங்கள் நிதியைத் திட்டமிட உதவும் உலகளாவிய மானியக் கால்குலேட்டரைப் பயன்படுத்துங்கள்.

**தற்செயல்களுக்குத் திட்டமிடுங்கள்.** உங்கள் பட்ஜெட்டை நீங்கள் உருவாக்கும்போது, உங்கள் திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்கும் போது விஷயங்கள் மாறலாம் மற்றும் பரிமாற்ற விகிதங்கள் மாறலாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். எதிர்பாராத செலவுகளை ஈடுகட்ட உங்கள் பட்ஜெட்டில் 10 சதவீதம் வரை சேர்க்கவும்.

**கட்டாய CSR சான்றிதழ்**
CSR சட்டத்தில் சமீபத்திய மாற்றங்களைக் கருத்தில் கொண்டு, ரோட்டரி அறக்கட்டளை (இந்தியா) மூலம் CSR திட்டங்களை செயல் படுத்தும் அனைத்து ரோட்டரி சங்கங் களையும் "CSR செயல்பாடுகளை மேற்கொள்வதற்கான நிறுவனங்களின் பதிவு" என்ற படிவம்-CSR1 சான்றி தழுக்கு விண்ணப்பிக்க வலுவாக ஊக்குவிக்கிறது. கார்ப்பரேட் விவகார அமைச்சகத்தின் இணையதளத்தில் விண்ணப்பிப்பதன் மூலமும் இதைச் செய்யலாம்: *https:// www.mca.gov.in/MinistryV2/company-formsdownload.html.*

விண்ணப்பதாரர் நிறுவனங்கள் இந்தச் சான்றிதழுக்காகப் பரிசீலிக்கப் படுவதற்கு முன், அவர்கள் ஒரு பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக (அறக்கட்டளை, சொசைட்டி அல்லது பிரிவு 8 நிறுவனம்) இருக்க வேண்டும்.

**சங்கம் அல்லது சங்க உறுப்பினர்களின் சார்பாக ஆன்லைனில் கொடுங்கள்:** சங்கத்தலைவர், அறக்கட்டளை தலைவர், உறுப்பினர் தலைவர், நிர்வாக செயலாளர்/இயக்குனர், செயலாளர் மற்றும் பொருளாளர் போன்ற அனைத்து சங்க அதிகாரி களும் தங்கள் சங்க உறுப்பினர்களின் சார்பாக தங்கள் கிரெடிட்/டெபிட் கார்டு அல்லது நெட் பேங்கிங் மூலம் தங்கள் சங்க உறுப்பினர்களின் சார்பாக ஆன்லைன் பங்களிப்பை செய்யலாம். தனிப்பட்ட உறுப் பினர்கள் காசோலைகளை அனுப்புவதற்க்கான தேவையை இது நீக்கும்.

பங்களிப்பு வரவு தனிப்பட்ட உறுப்பினர்களுக்கு ஒதுக்கப் பட்டாலும், 80G ரசீது, தனிப்பட்ட உறுப்பினர்களின் பெயரில் அல்லாமல் அனுப்புபவராக சங்கத் தலைவரின் பெயரில் மட்டுமே உருவாக்கப்படுகிறது, மேலும் விவரங் களுக்கு பார்க்கவும்: *http://www.highroadsolution.com/file_uploader2/files/give_online_on_behalf_of_club_or_club_members_sao.pdf*

**பால் ஹாரிஸ் சொசைட்டி**
வருடாந்திர நிதி, போலியோ பிளஸ் நிதி அல்லது அங்கீகரிக்கப்பட்ட உலகளாவிய மானியத்திற்கு ஒவ்வொரு ரோட்டரி ஆண்டும் $1,000 அல்லது அதற்கு மேல் பங்களிக்கும் நோக்கத்தை எங்களுக்குத் தெரிவிக்கும் நபர்களை பால் ஹாரிஸ் சொசைட்டி அங்கீகரிக்கிறது. பால் ஹாரிஸ் சொசைட்டியின் பங்களிப்புகள் ரோட்டரி அறக்கட்டளையின் உறுப்பினர் தத்துவ மேம்பாடு (வருடாந்திர நிதி பங்களிப்புகள் மட்டும்), பால் ஹாரிஸ் ஃபெலோ, மல்டிபிள் பால் ஹாரிஸ் ஃபெலோ மற்றும் பெரிய நன்கொடையாளர் அங்கீகாரம் மற்றும் சங்க அங்கீகார பேனர்கள் ஆகியவற்றிக்காக கணக்கிடப்படுகிறது. புதிய சொசைட்டி உறுப்பினர்களுக்கு மாவட்டம் அல்லது சங்க நிகழ்வு ஒன்றில் சான்றிதழ் மற்றும் செவ்ரான் வழங்கப் படுகிறது. பால் ஹாரிஸ் சொசைட்டி ஒருங்கிணைப் பாளர்கள் புதிய உறுப்பினர்களை கௌரவிக்க சங்கம் அல்லது மாவட்டத்திற்கு வருகை தருகின்றனர்.

பால் ஹாரிஸ் சொசைட்டி உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் தகுதிகள் பால் ஹாரிஸ் சொசைட்டி அறிக்கையில் தோன்றும். பால் ஹாரிஸ் சொசைட்டி பற்றி மேலும் அறிய, *https:// www.rotary.org/en/about-rotary/history/paul-harris-society*-ஐப் பார்க்கவும். ■

# ஓபன்ஹைமருக்கு ஒரு புதிய முடிவு

பேட்ரிக் டைலர்

*அணுகுண்டு விஞ்ஞானிகளை நேர்காணல் செய்த பத்திரிகையாளர், எதிர்காலத்தில் அணுசக்தி பேரழிவைத் தடுக்க வேண்டிய இளைய தலைமுறையினரால் ஆஸ்கார் வெல்லும் என எதிர்பார்க்கப்படும் திரைப்படம் ஏற்றுக்கொள்ளப்படுகிறதா என்று ஆச்சரியப்படுகிறார்.*

இந்த மாதம் ஆஸ்கார் விருதுக்கான முன்னணி விருப்பமான ஓபன்ஹைமரை நான் குறிப்பாக ஆர்வத்துடன் பார்த்தேன். ஏனெனில், இரண்டாம் உலகப் போரின்போது அமெரிக்க அரசு ரகசியமாக அணுக்குண்டை உருவாக்கியது குறித்து திரைப்படத்தில் சித்தரிக் கப்பட்ட இரண்டு புகழ்பெற்ற இயற்பியலாளர்களை நான் நேர்காணல் செய்திருக்கிறேன். 1970-களில் இருந்து பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கைகளை உள்ளடக்கிய ஒரு பத்திரிகை வாழ்க்கைக்குப் பிறகு, பனிப்போருக்குப் பிந்தைய உலகம் பெற்ற அணுசக்தி சங்கடத்தைப் பற்றி இளைய தலைமுறையினர் புரிந்துக்கொள்வார்களா என்று நான் ஆச்சரியப்படுவேன். ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் மற்றும் அவரது வாரிசுகளால் நமக்கு வழங்கப்பட்ட விதியை நிர்ணயிக்கும் சகாப்தத் தின் ஆரம்ப கட்டங்களில் நாம் இன்னும் வாழ்கிறோம் என்பது அவர்களுக்குத் தெரியுமா? ஐன்ஸ்டீன் அணுகுண்டை உருவாக்குவதில் பணியாற்றவில்லை, ஆனால் யுரேனியம் அணுவைப் பிளப்பதில் இருந்து பாரிய ஆற்றல் வெளியீடு பற்றி 1934 முதல் 1938 வரை வியக்கத்தக்க கண்டுபிடிப்புகளுக்குப் பிறகு ஜெர்மனியர்கள் அணுச க்தியை பயன்படுத்தக் கூடும் என்று ஜனாதிபதி பிராங்க்ளின் ரூஸ்வெல்ட்டிடம் கவலை தெரிவித்தபோது அதன் வளர்ச்சியைத் தூண்டினார்.



சியாரா வெர்கெச்சி

இந்தத் திரைப்படம் கோல்டன் குளோப் விருதுகளில் பெரிய வெற்றியைப் பெற்றது மற்றும் எல்லா இடங்களிலும் திரையரங்குகளில் திரையிடப்பட்டது. இது இரண்டாம் உலகப் போரின் போது இரகசிய பணியான மன்ஹாட்டன் திட்டத்திலும் மற்றும் முக்கிய கதாபாத்திரங்களான முன்னணி விஞ்ஞானி ஓ ராபர்ட் ஓபன்ஹைமர் மற்றும் அவரது இயற்பியலாளர்கள் குழு மீது கவனம் செலுத்துகிறது. அவர்கள் நியூ மெக்சிகோவின் லாஸ் அலமோஸில் கூடி, டிரினிட்டி என்ற முதல் அணுகுண்டை உருவாக்கினர். இந்த அணுகுண்டு ஜூலை 16, 1945-ல் சோதிக்கப்பட்டது. அந்த வெற்றியின் மூலம் ஆயுதம் ஏந்திய அவர்கள், A-29 குண்டுவீச்சு விமானங்களில் பொருத்தக்கூடிய இரண்டு குண்டுகளை உருவாக்கி ஆகஸ்ட் 6 மற்றும் 9 தேதிகளில் ஜப்பான் மீது வீசினர். இது 110,000 முதல் 210,000 மக்களைக் கொன்றது, அவர்களில் பெரும்பாலோர் பொதுமக்கள்.

எனது தலைமுறையின் பலருக்கு அணுகுண்டின் தந்தை என்று அழைக்கப்படும் ஓப்பன்ஹைமரின் கதை நன்கு அறியப்பட்ட ஒன்று, அவர் அந்த தலைப்பை விரும்பவும் செய்தார் வெறுத்தும் ஒதுக்கினார். உண்மையில், அணு முன்னேற்றங்களைச் சுரண்டுவதற்காக போர்க்கால அழுத்தத்தின் கீழ் வகுப்பறைகளில் இருந்து கொண்டு வரப்பட்ட பல இயற்பியலாளர்களில் இவரும் ஒருவர். அணுவைப் பிளக்கும் ஆற்றலை வெடிகுண்டு தயாரிப்பாக மாற்றுபவர் எந்த இராணுவத்தையும் தோற்கடிக்க முடியும் என்றும் அதன் பேரழிவு திறன் உலகின் அமைதிக்கு வழிவகுக்கும் என்றும் அவர் நம்பினார்.

ஹிரோஷிமா தரைமட்டமாக்கப் பட்டது என்ற செய்தி வானொலியில் வந்த பிறகு, அவர் ஒரு கொண்டாட் டப் பேரணியில் சக ஊழியர்களை வழிநடத்தினார். ஓப்பன்ஹைமர் கூட்டத்திற்கு முன்பாக ஜெர்மனி சரணடைவதற்கு முன்பு அதே ஆச்சரியத்தை அவர்களுக்கு வழங்கி யிருக்க வேண்டும் என்று தான் ஆசைப்பட்டதாக அவர் கூறுவதை இயக்குனர் கிறிஸ்டோபர் நோலன் காட்சிப்படுத்தியுள்ளார். இது ஒரு பதட்டமான காட்சி.

ஆயினும்கூட, ஓப்பன்ஹைமர் தனது தொழில் வாழ்க்கையின் பெரும்பகுதியில் அமெரிக்க ஜனாதிபதிகள், காங்கிரஸ், பொதுமக்கள் மற்றும் மேற்கத்திய கூட்டாளிகளை சமாதானம் மற்றும் பொருளாதாரத்திற்கான சர்வதேச சக்தியாக அணுசக்தியை மாற்றி அதன் அழிக்கும் திறனை கட்டுப்படுத்தவும் உறுதியுடன் பணியாற்றினார் என்பதும் உண்மைதான். யுரேனியம் சுரங்கம் மற்றும் செறிவூட்டல் மற்றும் புளூட்டோனியம் உற்பத்தி ஆகியவற்றில் கடுமையான சர்வதேச கட்டுப்பாடுகளுக்காக அவர் வாதிட்டார், மேலும் அவர் மிகவும் சக்திவாய்ந்த ஹைட்ரஜன் குண்டை உருவாக்குவதை எதிர்த்தார். அவரது கருத்துக்கள் சந்தேகங்களை எழுப்பியது மற்றும் பலர் அவரது நாட்டிற்கான விசுவாசத்தை கேள்விக்குள்ளாக்கினர்.

ஓப்பன்ஹைமரின் தார்மீக முரண்பாடுகள் எங்கு முடிவடைகின்றன மற்றும் அவரது லட்சியம் எங்கு தொடங்குகிறது என்பதை தீர்மானிப்பது கடினமாக செயல். திரைப்படம் அவரை ஒரு புத்திசாலித் தனமான, மனச்சோர் வுடைய,தொடர்-புகைபிடிக்கும் என முரண்பாடுகளின் தொகுப்பாக சித்தரிக்கிறது, மேலும் ஐரிஷ் நடிகர் கிலியன் மர்பி ஓப்பன்ஹைமரின் குறைபாடுள்ள மேதையைப் தத்ருபமாக சித்தரிக்கிறார். நாம் எப்போதும் அவரது குணாதிசயத்தைப் பற்றி யூகித்துக் கொண்டே இருக்கிறோம். இரண்டாம் உலகப் போருக்கு முந்தைய ஜெர்மனியில் யூதர்களை நாஜி துன்புறுத்துவதை அவர் எதிர்த்தார் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் அடிக்கடி வரும் அறிவுசார் நிலையங்களுக்கு ஈர்க்கப்பட்டார். பின்னர், ஓப்பன்ஹைமர் கௌரவத் திலிருந்து ஒரு அற்புதமான வீழ்ச்சியைக் கண்டார், 1954-ம் ஆண்டு மெக்கார்த்தி காலத்தில் அமெரிக்காவில் கம்யூனிச ஊடுருவல் என்று கூறப்படும் சுத்திகரிப்பு நடவடிக்கையின் போது அவரது பாதுகாப்புப் படை பறிக்கப்பட்டது.

மூன்று பேட்மேன் திரைப் படங்களை இயக்கிய நோலன், நியூக்ளியர் ஃபயர்பால் படங்களின் பின்னணியில் பெரிய திரையில் ஒரு வாக்கியத்துடன் படத்தைத் ஆரம்பிக்கிறார்: ப்ரோமிதியஸ் கடவுள்களிடமிருந்து நெருப்பைத் திருடி மனிதனுக்குக் கொடுத்தார். இதற்காக அவர் ஒரு பாறையில் சங்கிலியால் பிணைக்கப்பட்டு நித்தியமாக சித்திரவதை செய்யப் பட்டார்.

20-ம் நூற்றாண்டின் நடுப்பகுதி யிலிருந்து இன்றுவரை அணு ஆயுதப் போட்டியை வடிவமைத்த சில பின்னணிக் கதைகளை அவர் முன்வைக்கிறார். சீனா, பிரான்ஸ், இந்தியா, இஸ்ரேல், வட கொரியா, பாகிஸ்தான், ரஷ்யா, பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்கா ஆகிய ஒன்பது அணுசக்தி நாடுகளை அன்னை பூமி தற்போது சுமக்கிறது.

ஒரு இளம் பத்திரிகையாளராக, ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் பதவியில் இருந்தபோது, 1970-களின் பிற்பகுதியில் வாஷிங்டன் DC-க்கு வந்தேன். நான் அணு ஆயுதங்களை பற்றி எழுதி வந்தேன் மற்றும் நாட்டின் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல் திட்டத் திற்கான கொள்முதல் சிக்கல்களை ஆவணப்படுத்தினேன். அமெரிக்கா மற்றும் அப்போதைய சோவியத் யூனியனின் ஆயுதக் களஞ்சியங்களில் பல்லாயிரக்கணக்கான அணுகுண்டு களுக்குப் பாதுகாப்பிற்காக இரகசிய இராணுவ தொழில்நுட்ப வல்லுனர்களின் படைகள் காவல் நின்ற உலகம் அது. விரைவில் ஜனாதிபதி ரொனால்ட் ரீகன் எந்தவொரு அணுசக்தி போரிலும் உள்வரும் சோவியத்தின் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை களை சுட்டு வீழ்த்துவதற்கு ''ஸ்டார் வார்ஸ்'' தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதாக உறுதியளித்தார். இந்த நேரத்தில்தான், மன்ஹாட்டன் திட்டத்தின் இரு உறுப்பினர்களான ஹான்ஸ் பெத்தே மற்றும் எட்வர்ட் டெல்லரை நேர்காணல் செய்தேன். ஹான்ஸ் பெத்தே, கோட்பாட்டு இயற்பியல் தலைவர் மற்றும் எட்வர்ட் டெல்லர் பெத்தேவின் கீழ் பணிபுரியும் புத்திசாலித்தனமான ஹங்கேரிய இயற்பியலாளர் மற்றும் ஹைட்ரஜன் குண்டாக மாறிய வடிவமைப்புக் கருத்தை முன்வைத்தவர்.

திரைப்படம் சித்தரிப்பது போல், ஓபன்ஹைமர் ''சூப்பர்'' வெடிகுண்டில் ஆதாரங்களை மையப்படுத்த டெல்லரின் வேண்டுகோளை நிராகரித்தார். போருக்குப் பிறகு, ஓபன்ஹைமர் அணு ஆயுதங்கள் மீதான அமெரிக்க முன்னேற்றத் திற்கு எதிராக வாதிட்டார், டெல்லர் அவருக்கு எதிராக விசாரணையில் சாட்சியளிக்க ஓப்பன்ஹைமரின் தலைவிதியை அது முடிவு செய்தது.

ரீகன் நிர்வாகத்தின் போது நான் டெல்லரைச் சந்தித்த நேரத்தில், அவர் ''ஸ்டார் வார்ஸ்'' அமைப்புகளின் ஆதரவாளராக அடிக்கடி வெள்ளை மாளிகைக்கு வந்துக்கொண்டிருந்தார். 2022-ம் ஆண்டில், பைடன் நிர்வாகம் ஓப்பன்ஹைமரின் பாதுகாப்பு அனுமதியை மரண த்திற்குப் பின் மீட்டெடுத்தது, 1954-ன் முடிவு ஒரு விசுவாசமான

அமெரிக்கருக்கு எதிரான ''குறை பாடுள்ள செயல் முறையை'' அடிப் படையாகக் கொண்டது என்று அறிவிக்கப்பட்டது.

திரைப்படத்தின் முடிவில், அணுசக்தி சங்கடத்தை எதிர்கொள்ளும் இளைஞர்களிடம் இப்படம் பேசுகிறதா என்று யோசித்தேன். என்னைப் பொறுத்த வரை, அணு ஆயுதங்களின் அச்சுறுத்தல் இன்னும் உள்ளது என்பது பலருக்குத் தெரியாது என்று தோன்றுகிறது, ஆனால் ஆயுதங்கள் உள்ளன, குறைவாகவே உள்ளன, ஆனால் ஆயிரக்கணக்கானவை கிரகம் முழுவதும் பரவி உள்ளது. ஒரு நாள், ஒருவேளை, விண்வெளியிலும் பரவலாம்.

டீன் வோக் அதன் வாசகர் களுக்கு டூம்ஸ்டே கடிகாரத்தைப் பற்றிக் கற்பிக்கிறது, இது அணு விஞ்ஞானிகளால் பராமரிக்கப்படும் புல்லட்டின் பலகை, இது மனிதனால் உருவாக்கப்படும் உலகின் அழிவுக்கு நாம் எவ்வளவு நெருக்கமாக இருக்கிறோம் என்பதைக் குறிக்கிறது. தற்போது கடிகாரம் நள்ளிரவுக்கு 90 வினாடிகள் முன்னே இருக்கிறது. ஆயினும்கூட, இன்றைய இளைஞர்கள் புவி வெப்பமடைதல் மற்றும் இடை விடாத மோதல்கள் பற்றிய அச்சத்துடன் இருப்பதைப் போல, சாத்தியமான அணுசக்தி பேரழிவைப் பற்றிய ஆழமான கவலைகளுடன் வளரவில்லை.

கடந்த தசாப்தத்தில், அமெரிக்கா தனது அணு ஆயுதங்களை மேம்படுத்த நூற்றுக்கணக்கான பில்லியன் டாலர்களை ஒதுக்கி யுள்ளது. உலகளாவிய அணுசக்தி சங்கிலி கண்ணுக்கு தெரியாத மின்னணு வலை மூலம் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், அணு சக்திகள் கிரகத்தை எரிக்கும் தீயை கட்டவிழ்த்து விடுவதைத் தடுக்கும் ஒரே விஷயம் ஒரு எளிய ஆனால் பயங்கரமான கோட்பாடாகும், இது பல ஆயுதங்களை அவற்றின் பதுங்கு குழிகளில் தூசி சேகரிக்க வைக்கிறது: அத்தகைய மோதல் நாம் அறிந்த வாழ்க்கையின் அழிவை விளைவிக்கும் என்பதால்.

அணு ஆயுதங்களை ஒழிப் பதற்காக வாதிடும் அமைதிக்கான ரோட்டரி அதிரடி குழுவின் இணை நிறுவனர் டென்னிஸ் வோங்குடன் திரைப்படத்தைப் பற்றி விவாதித்தேன். படத்தில் நாம் காணும் ஒழுக்கத்தின் நிலைகளை நோலன் எவ்வாறு அலசினார் என்பதில் வோங் ஈர்க்கப்பட்டதாக கூறினார். ''அந்த விஞ்ஞானிகளில் பெரும்பாலோர் உலகை அழிக்க இந்த ஆயுதங்களை யாரும் பயன்படுத்த மாட்டார்கள் என்று நினைத்தார்கள். மோதல்களைத் தடுக்கவும் போர்களை முடிவுக்குக் கொண்டுவரவும் நடுநிலையான கைகளில் அது ஒரு தடையாக இருக்கும் என நம்பினார்கள்'' என்று அவர் கூறுகிறார்.

வெடிகுண்டின் ஆற்றல் நிரூபிக் கப்பட்டதும், இயற்பியலாளர்கள் தங்கள் பல்கலைக் கழகங்களுக்குத் திரும்பி, இந்த அழிவுகரமான தொழில் நுட்பத்தை எவ்வாறு நன்மைக்கான சக்தியாக மாற்றுவது என்பது பற்றி பேசத் தொடங்கினர், உலகம் முழுவதும் மலிவான மின்சாரத்தை உற்பத்தி செய்ய அணுசக்தியால் இயங்கும் ஜெனரேட்டர்களை உருவாக்குவது போன்றவற்றை பற்றி விவாதித்தனர்.

''நீங்கள் பாதுகாப்பைத் தேடுகிறீர்களானால், பரஸ்பர உறுதி யளிக்கப்பட்ட பாதுகாப்புடன் மோதலைத் தடுப்பதே உங்கள் குறிக்கோள் என்றால், அணு சக்தியைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் நல்லெண்ணத்தையும் நட்பையும் உருவாக்க அவர்கள் சில வழிகளை வடிவமைக்க வேண்டும்'' என்று வோங் கூறுகிறார். சோகம் என்னவென்றால், தொழில்நுட்பம் மற்றொரு திசையை நோக்கி விரைவாக நகர்ந்தது. ''அணு ஆயுதங்கள் அதிகாரத்தைப் பற்றியது - பதவியில் இருப்பதற்கான சக்தி மற்றும் முக்கியமானவராக கருதப்படுவதற்கான சக்தி'' என்று அவர் விளக்குகிறார்.

ஓப்பன்ஹைமரின் வாழ்க்கையும், அவர் சுருக்கமாக ஆட்சி செய்த விஞ்ஞான ஸ்தாபனமும், அரசியல் யதார்த்தங்கள் எப்படி ஒரு பெரிய அறிவியல் சாதனையை சிதைக்கும் என்பதைக் காட்டியது. இன்றைய அணுசக்தி புதிர் பற்றி ஓப்பன்ஹைமர் என்ன சொல்வார் என்று ஒருவர் ஆச்சரியப்பட வேண்டும்: ஐரோப்பாவின் மையத்தில் உள்ள உக்ரைனை ரஷ்யா ஆக்கிரமித்துள்ளது மற்றும் அமெரிக்கா மற்றும் நேட்டோ கூட்டணி அப்போரில் தலையிட்டால் அணு ஆயுத தாக்குதல் செய்வோம் என்று ரஷ்யா அச்சுறுத்துகிறது. ஹமாஸின் பயங்கரத் தாக்குதலைத் தொடர்ந்து காஸாவில் இஸ்ரேல் போரில் ஈடுபட்டுள்ளது. இஸ்ரேல் அணு ஆயுதங்களின் பரந்த ஆயுதக் களஞ்சியத்தைக் கொண்டுள்ளது, இது இஸ்ரேலின் இருப்பை அச்சுறுத்தும் எந்தவொரு அரசுக்கு எதிராகவும் பயன்படுத்த முடியும் என்று நிபுணர்கள் நம்புகின்றனர். மற்றொரு அணுஆயுத சக்தி யான ஈரான், இஸ்ரேலின் மிக மோசமான எதிரியாக நிற்கிறது. சமீபத்திய அணுசக்தியான வட கொரியாவின் நடவடிக்கைகள் கணிக்க முடியாதவை. இதற் கிடையில், சீன-அமெரிக்க போட்டி தீவிரமடைந்துள்ளதால், கடந்த சில ஆண்டுகளில் சீனா அணு ஆயுதங்களை கணிசமாக விரிவுபடுத்தியுள்ளது.

வரலாற்றின் கதையை சினிமா வடிவமைக்கிறது, ஆனால் நோலனின் முக்கியமான திரைப் படம் கூட இந்த அணு வனாந்தரத்தை கடப்பதில நமக்கு உதவவில்லை. ஓபன்ஹைமர் சகாப்தத்தை முடித்து பாதுகாப்பான பாதையை எவ்வாறு உருவாக்குவது என்பது பற்றி நாம் சிந்திக்க வேண்டிய அவசியம் உள்ளது. ஏனெனில், ஒரு தொற்றுநோய் அல்லது காலநிலை மாற்றம் பூமிக்கு பயங்கரமான அடியை வழங்கக் கூடும், ஆனால் அணுசக்தி யுத்தம் அதை காட்டிலும் கொடியது. 66 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு வந்த சிறுகோள் போன்றது-ஆனால் இப்போது நாம் தான் டைனோசர்கள்.

*கட்டுரையை எழுதியவர் ஒரு எழுத்தாளர் மற்றும் தி நியூயார்க் டைம்ஸின் முன்னாள் தலைமை நிருபர் ஆவார்.*

©ரோட்டரி

ADVT.


LIFE MEMBER ROTARY CONVENTION
GOERS' ASSOCIATION.
Ray of Hope TOURS INDIA PVT LTD
HOLY LAND TOUR
CONVENTION TRIP ARRANGED BY
RTN S.ESHWAR (PAST ASST. GOVERNOR RID.3160).
ROTARY CLUB HOSPET KARNATAKA.
Explore
SINGAPORE
MALAYSIA
MAY 24 - 29
SINGAPORE
MAY 30 - 31
MALAYSIA
ENJOY NOW
PAY LATER
EMI OPTIONS AVAILABLE
6 MONTHS
12 MONTHS
24 MONTHS
36 MONTHS
1 NIGHT IN KUALA LUMPUR STAY AT HOTEL
IBIS STYLES KUALA LUMPUR
FRASER BUSINESS PARK (3 STAR) ROOM
5 NIGHTS STAY AT VALUE ADDED THOMPSON
ROOM WITH BUFFET BREAKFAST
ONE-WAY TRANSFER FROM SINGAPORE COACH
STATION TO HOTEL
UNIVERSAL STUDIO TOUR WITH TRANSFERS
HALF DAY SENTOSA (1 WAY CABLE CAR)
HALF DAY CITY TOUR
NIGHT SAFARI
TRANSFER FROM SINGAPORE - KUALA LUMPUR
STANDARD AC COACH (7-8 HOURS DURATION)
ONE-WAY TRANSFER FROM HOTEL TO KUALA LUMPUR BY BUS AT NIGHT
KUALA LUMPUR CITY TOUR
BATU CAVES - MURUGAN TEMPLE
BANK FINANCE ON EMI BASIS IS ALSO
ARRANGED FROM 6MTHS TO 36MTHS
₹99,000
PER PAX
eshwarsetter@gmail.com
+91 98805 27242
rayofhopetours@gmail.com
+91 90807 59550

# அழகிய தூக்கத்தை அனுபவிக்கவும்

பரத் - ஷலன் சவூர்

உங்கள் சொந்த நல்லொழுக்க சுழற்சியை உருவாக்கவும். எங்கள் பல் மருத்துவரின் சந்திப்புகளால் நாங்கள் சற்று மாறுப்பட்டு சிந்திக்க வேண்டியிருந்தது. நாங்கள் பல தசாப்தங்களாக செய்து வருவதைப் போலவே, ஒரு நாளைக்கு இரண்டு வேளை உணவை(மதியம் மற்றும் இரவு) தொடர்ந்தோம். நாங்கள் எப்பொழுதும் பரிந்துரைக்கும் எங்களின் வழக்கமான வீட்டில் தயாரிக்கப்பட்ட, எண்ணெய் இல்லாத உணவை உட்கொண்டோம். எங்கள் உணவு நேரத்தை முன்னதாக கடைபிடித்தோம்: 12 மணிக்கு மதிய உணவு, மாலை 6 மணிக்கு இரவு உணவு மற்றும் இரவு 8 மணிக்கு தூங்கவும் முடிவுசெய்தோம். சீக்கிரம் படுக்கைக்குச் செல்வதும், சீக்கிரமாக எழுவதும் நம்மைச் செல்வந்தர்களாக மாற்றலாம் அல்லது மாற்றாமல் போகலாம். ஆனால் நிச்சயமாக நம்மை ஆரோக்கியமானவர்களாகவும் மற்றும் புத்திசாலிகளாகவும் மாற்றும். விடியும் முன் எழுவது கூடுதலாக ஒரு நாள் கிடைப்பதைப் போன்றது. ஆனால் நாம் தூக்கம் மற்றும் அதன் நன்மைகளுக்கு முன் ஒரு விஷயத்தை பற்றிப் பார்ப்போம்.



கோவிட்-19 நம் வாழ்க்கையை ஒட்டுமொத்தமாக மாற்றிவிட்டது. குஜராத்தில் மட்டும், நவராத்திரியின் போது கர்பா/தண்டியா நிகழ்வுகளில் மாரடைப்பு காரணமாக 10 பேர் இறந்துள்ளனர். அதில் இளையவர் - 17 வயதே ஆன சிறுவன். ICMR ஆனது "விவரிக்கமுடியாத திடீர் இறப்புகளுடனான கோவிட் இணைப்பை" ஆராய்ந்து, கடுமையான கோவிட் நோய்த்தொற்றுகளிலிருந்து மீண்டவர்கள், வேலை, ஒர்க்-அவுட் போன்றவற்றில் கூடுதல் உடல் உழைப்பைத் தவிர்க்க வேண்டும் என்று எச்சரித்தது.

திடீர் மரணம் ஏற்பட்ட குடும்ப வரலாற்றைக் கொண்டவர்கள், கோவிட்-19 க்கு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்கள், மற்றும் மயங்கி விழுவதற்கு முன்பு அளவுக்கு அதிகமாக குடிப்பவர்கள் மற்றும் தீவிர உடல் உழைப்பில் ஈடுபடுபவர்கள் திடீர் மரணம் அடைவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்று ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

கூடுதலாக, ஆரோக்கியமான உடல்நிலையில் உள்ள நடுத்தர வயதுடையவர்கள் முன்கூட்டியே இறந்துவிடுவதைப் பற்றி நாம் எத்தனை முறை கேள்விப்பட்டிருக்கிறோம் அல்லது படித்திருக்கிறோம்? ஒரு பாடகர் மேடையில் மூச்சுக்கு திணறினார், விரைவில் இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டார். டிரெட்மில்லில் கடைசியாக ஒரு ஓட்டம் பிடித்த ஒரு உடல்நல ஆர்வலர்.

நாங்களும் எங்கள் நண்பர் ஒருவரை இழந்தோம், வாட்ஸ்அப்பில் 'காலை வணக்கம்' என்று வாழ்த்திய அவர், அதே மதியம் அவரது தூக்கத்தில் இறந்துவிட்டார். இன்றைய வாழ்க்கை ஒரு பயங்கரமான விளையாட்டு மற்றும் மரணம் யாரை தேர்ந்தெடுக்கும் என்பதை யாராலும் கணிக்கமுடியாது. ஆரோக்கியமான மக்களும் இதற்கு விதிவிலக்கல்ல. மன அழுத்தம், உடல் உளைச்சல், காற்று மாசுபாடு... எல்லாமே அமைதியான கொலையாளிக்கான சூழ்நிலைகள் மற்றும் இலக்குகளை அமைப்பதில் பங்கு வகிக்கிறது.

### உங்கள் வேலையில் தூக்கம் தூங்குகிறதா?

உறக்கம், உங்களின் வேலையில்லா நேரம், ஆனால் உங்கள் உடலின் பழுது மற்றும் மீள்வதற்கான 'நேரம்' ஆகும். விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், உங்கள் வாழ்வில் மூன்றில் ஒரு பங்கை உறக்கத்தில் கழிக்க வேண்டும். இது 24 மணி நேர பகல்-இரவு சுழற்சியில் சுமார் எட்டு மணிநேரம் வரையிலாகும். தூக்கம் என்பது நேரத்தை வீணடிக்கும் விஷயம் அல்ல.

சூரிய உதயமும் அஸ்தமனமும் பறவைகளுக்கு மட்டுமல்ல. அவை இயற்கையான அனைத்திற்கும் பொருந்தும். நீங்களும் இயற்கையானவையே.

அதிர்ஷ்டவசமாக, ஆழ்ந்த உறக்கத்தின் வெகுமதிகளுக்கு இப்போது அங்கீகாரம் வேகமாக வளர்ந்து வருகிறது. மெத்தை தயாரிப்பாளர்களும் மருந்துகளும்

தூக்கத்தின் 'அதிசயம் போன்ற' செய்திகளுடன் நம்மைத் தூண்டி, அந்த மந்திர இரவு எட்டு மணிநேரத்தை ஏழாவது அதிசயமாக விளம்பரப்படுத்துகின்றன. இப்போது தூக்க-நிபுணத்துவம் வாய்ந்த மருத்துவர்கள் மற்றும் ஒரு முழு மருந்துத் துறையும் அதன் பின்னணியில் உள்ளது.

புத்தக வெளியீட்டாளர்களும் இதில் களமிறங்கியுள்ளனர். கென்னத் மில்லர் எழுதிய "மேப்பிங் தி டார்க்னஸ்: தி விஷனரி சயின்டிஸ்ட் ஹூ அன்லாக்ட் தி மிஸ்டரீஸ் ஆஃப் ஸ்லீப்" என்ற புத்தகம் அதற்கு ஒரு உதாரணம். தலைப்பு குறிப்பிடுவது போல, மக்கள் 'எளிதில் தூங்குவதற்கு' உதவும் வகையில் மில்லர் தலையணை முன்னோடிகளின் முறை மற்றும் வழக்கங்களை பதிவு செய்கிறார். தொழிற்புரட்சிக்கு முன், மனிதர்களின் உடல் விடியற்காலை மற்றும் சாயங்காலத்தின் தாளத்திற்கு ஏற்றவாறு ஆடின. செயற்கை விளக்குகள் மற்றும் இரவு நேர வேலைகள் தூக்கத்தின் இயக்கவியலை மாற்றியது. டிஜிட்டல் சாதனங்கள் மற்றும் நீல ஒளி நம் உடல் கடிகாரங்களை குழப்புகின்றன. 1930 களில், நதானியேல் க்ளீட்மேன் தூக்க அறிவியல் துறையை நிறுவினார். அவரது சோதனைகள் உடலின் மற்ற சுழற்சிகளுடன் தூக்கம் எவ்வாறு தொடர்பு கொள்கிறது/குறுக்கீடு செய்கிறது என்பதை ஆய்வு செய்தது. நார்கோலெப்ஸி (அதிகமான பகல்நேர தூக்கம்), தூக்கத்தில் நடப்பது போன்ற கோளாறுகள் மருத்துவ நுண்ணோக்கின் கீழ் சென்றன. இறுதியில், இந்த கோளாறுகள் குறைந்த உற்பத்தித் திறன் மற்றும் விபத்துகளுக்கு வழிவகுப்பதாக கண்டறியப்பட்டன.

இன்ஃபோசிஸ் நிறுவனர் நாராயணமூர்த்தியின் வாரத்தில் 70 மணி நேர வேலை என்ற பரிந்துரையை விமர்சிக்க வேண்டாம், ஆனால் அது இயற்கைக்கு முரணானது என்று சொல்லியே ஆகவேண்டும். அது போலவே, மூன்றாவது ஷிப்ட் நீண்ட காலத்திற்கு நீடித்தால் அது ஆரோக்கியத்திற்கு நீண்ட கால தடையாக இருக்கும்.

நமது தற்போதைய சூழலில் கருத்தில் கொண்டு, மூன்றாவது ஷிப்டை பற்றி மட்டும் ஆராய்வோம், இது மனிதனின் இயற்கையான வாழ்கைக்கு எதிரானது மற்றும் நெகிழ்வான வேலை நேரம் மற்றும் வீட்டில் இருந்து வேலை செய்யும் போக்குகளுக்கு எதிரானது. ஆனால் தற்போது AI மற்றும் ரோபோட்டிக்ஸின் யுகமாகும். எனவே, ரோபோக்கள் நம் கேள்விகளுக்கு பதிலாக இருக்கலாம். மூன்றாவது ஷிஃப்ட் குறுகிய ஷிஃப்ட்டாக மாறலாம்! மற்றும் AI மற்றும் ரோபோக்கள் அந்த ஷிஃப்ட்டை செய்யலாம்.

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life மற்றும் Simply Spritiual — You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.

---

Rotary PEOPLE OF ACTION

## நீரிழிவு நோய்க்கான விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

கடந்த ஆண்டு (நவம்பர் 14) உலக நீரிழிவு நோய் தினத்தை முன்னிட்டு RID 3212-க்கு உட்பட்ட ஸ்பிக் நகர் ரோட்டரி சங்கம், தூத்துக்குடியில் உள்ள டாக்டர் அருள் நீரிழிவு நோய் சிகிச்சை மையத்துடன் இணாந்து துறைமுக நகரில் நீரிழிவு நோய் விழிப்புணர்வு முகாமை நடத்தின. இரத்தத்தில் சர்க்கரை அளவு, இரத்த அழுத்தம், கொழுப்பு, HBA1C (நீரிழிவு நோயின் இரண்டாம் நிலையை அறியும் சோதனை), பயோதெசியோமெட்ரி (நரம்பு வலுவிழப்பு நோய் கண்டறியும் பரிசோதனை), பல் மற்றும் கண் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த முகாமில் 500-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

நீரிழிவு நோயை சமாளிப்பது எப்படி என்பது குறித்து நீரிழிவு நோய் சிகிச்சை மையத்தைச் சேர்ந்த நிபுணர்கள் உரையாற்றினர். ஒரு நாள் முழுவதும் நடைபெற்ற முகாம் விழுப்புணர்வு பேரணியுடன் நிறைவுபெற்றது. நகரில் உள்ள பல்வேறு ரோட்டரி சங்கங்கள் மற்றும் இரண்டு நர்சிங் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் உள்ளிட்ட 300 பேர் இதில் பங்கேற்றனர். பேரணியை PDG Dr K விஜயகுமார் கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

ரோட்டரி சங்கம், கடந்த 15 ஆண்டுகளாக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் நீரிழிவு பரிசோதனை முகாம்களுடன் உலக நீரிழிவு தினத்தை கடைப்பிடித்து வருகிறது.■



*சர்க்கரை நோய் பரிசோதனை முகாமில் பயோதெசியோமெட்ரி சோதனை நடத்தப்படுகிறது.*

# ரோட்டரி ஆளுநர்



## முத்தையா பிள்ளை

தகவல் தொழில்நுட்ப ஆலோசகர் மற்றும் கல்வியாளர்,
RC திருநெல்வேலி வெஸ்ட், RID 3212

### ரோட்டேரியன்களிடம் ரோட்டரியின் தாக்கம்

தகவல் தொடர்பு மற்றும் வர்த்தக முன்னேற்றத்தின் உந்துதலால் முத்தையா பிள்ளை ரோட்டரியில் சேர்ந்தார். நாகர்கோவில் எலைட் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த பார்வையற்ற ரோட்டேரியன் ஒருவரை சந்தித்ததை அவர் தெளிவாக நினைவுகூர்ந்தார். பல ஆண்டுகளுக்கு முன்பு எனது சங்கம் அவரது பள்ளியில் ஏற்படுத்திக் கொடுத்த ஆடியோ நூலகத்தின் பயனாளிகளில் தானும் ஒருவர் என்று அவர் என்னிடம் குறிப்பிட்டபோது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. பயனாளிகளுக்கு மட்டுமின்றி ரோட்டேரியன்களுக்குள்ளும் ரோட்டரி ஏற்படுத்திய ஆழமான தாக்கத்தை இது எனக்கு உணர்த்தியது.

உறுப்பினர்களின் சவால்களை பிரதிபலிக்கும் வகையில் ரோட்டரி மூலம் உறுதியான பலன்களைத் தேடும் இளம் உறுப்பினர்களை ஈர்ப்பதில் உள்ள சிரமங்களை அவர் எடுத்துரைத்தார். உறுப்பினர்களின் எண்ணிக்கையைவிட தரமானவர்களுக்கு முன்னுரிமை கொடுப்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்றார். நல்ல தரமான உறுப்பினர்களைச் சேர்ப்பதன் மூலம் 5 சதவீத வளர்ச்சியை பெறுவதை அவர் நோக்கமாக கொண்டிருக்கிறார். உறுப்பினர்களை தக்கவைப்பதில் தொலைபேசி மூலம் மற்றும் நேரில் உரையாடுவதே சிறந்த வழி என்கிறார் அவர். மகளிர் உறுப்பினர் சேர்க்கையில் மாவட்டம் 13 சதவீத வளர்ச்சி கண்டுள்ளது.

சர்வதேச மானியங்களுக்கு விண்ணப்பிக்க சங்கங் களை அவர் தீவிரமாக ஊக்க்குவித்து வருகிறார். எனது பதவிக் காலத்தில் 10 மானியங்களையாவது பெற வேண்டும் என்பதே குறிக்கோள். இதுவரை மூன்று மானியங்களுக்கு ஏற்கெனவே ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. எனது மாவட்டம் TRF-க்கு 500,000 டாலரும், போலியோ நிதிக்கு 150,000 டாலரும் பங்களிப்புச் செய்யவும் இலக்காக கொண்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.■



## மிலிந்த் மார்தாண்ட் குல்கர்னி

கட்டுமானத் தொழில், RC கல்யாண், RID 3142

### பிராந்திய மொழி மூலம் ரோட்டரியை அணுகலாம்

சமூக சேவைதான் ரோட்டரியின் இதயம் போன்றது என்கிறார் மிலிந்த் குல்கர்னி. நாங்கள் தொடர்புக்கும் சகோதரத்துவத்துக்குமாக ரோட்டரியில் சேரு கிறோம். ஆனால், ரோட்டரி அதற்கு மேலும் செல்கிறது. இது உங்களில் சிறந்த நண்பரை காண உதவுகிறது என்கிறார் குல்கர்னி. இளைஞர்கள் மற்றும் பெண்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தவும், மதிப்புமிக்க தலைமைத்துவ திறன்களை பெறவும் ரோட்டரி ஒரு தளமாக இருப்பதாக அவர் நம்புகிறார். குல்கர்னியின் மாவட்டம், 1.2 லட்சம் டாலர் மதிப்பிலான தண்ணீர் சேமிப்பு திட்டம் மற்றும் 32,000 டாலர் மதிப்பிலான குழந்தைகளுக்கான அறுவைச்சிகிச்சை திட்டம் உள்ளிட்ட எட்டு சர்வதேச மானியத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

ரோட்டரிக்கான ஒவ்வொரு உறுப்பினரின் நோக்கத்தையும், அர்ப்பணிப்பையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். மேலும் ரோட்டரியின் வெற்றிக்கு அர்ப்பணிப்பு மற்றும் தீவிர பங்களிப்பும் தேவை என்பதை அவர்களுக்கு புரியவைக்க வேண்டும் என்கிறார். பிராந்திய மொழியில் பேசுவதையும், பயிற்றுவிப்பதையும் அவர் பரிந்துரைக்கிறார். இதன் மூலம் ரோட்டரி எளிதில் அணுகக்கூடியதாகவும் தொடர்புபடுத்த கூடியதாகவும் இருக்கும் என்கிறார் அவர்.■

# களுடன் சந்திப்பு

V கிரண் ஜெஹரா





**அசோக் குமார் குப்தா**
வர்த்தகம், RC சாகேத், மீரட், RID 3100

## ரோட்டரி ஒரு அமைப்பு மட்டுமல்ல, மனநிலை

1996-ம் ஆண்டு முதல் அசோக்குமார் ரோட்டரியில் இருந்து வருகிறார். ரோட்டரியை அவர் ஒரு அமைப்பு மட்டுமல்ல, ஒரு மனநிலையாக பார்க்கிறார். எல்லைகளை கடந்தும், சவால்களை சந்திப்பதற்கும், இரக்கத்திற்கான தமது திறனை கண்டுபிடிக்கும் தளமாகவும் பார்க்கிறார்.

ஒரு குடும்பமாக ரோட்டரியின் உணர்வை உள்ளடக்கிய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதன் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்துகிறார். ஒரு பிரச்னைக்குரிய உறுப்பினர் அமைப்பின் நல்லெண்ண த்தை கெடுக்க முடியும். எனவே, ஒவ்வொரு உறுப்பினரும் சங்கம் மற்றும் ரோட்டரிக்கு சாதகமாக பங்களிப்புச் செய்யும் ஒரு தீவிர உறுப்பினரை தேர்வு செய்ய வேண்டும் என்று அவர் கூறுகிறார். புதிதாக உள்வரும் உறுப்பினர்கள், அவர்கள் நிறுவப்பட்ட நாளில் பால் ஹாரிஸ் பெஃல்லோக்களாக ஆவதன் மூலம் தங்கள் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். குப்தா தனிப்பட்ட முறையில் 37,000 டாலர்கள் பங்களிப்புச் செய்துள்ளார்.

இதுவரை, அவரது மாவட்டம் இந்த ஆண்டு TRF-க்கு 1,50,000 டாலர் பங்களிப்பு செய்துள்ளது. மாவட்டம் இரண்டு சர்வதேச மானிய உதவியிலான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. கண் அறுவைச்சிகிச்சை முகாம் மற்றும் மருத்துவ மனைகளுக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்குவது ஆகியவைதான் அவை.■

**ரிது குரோவர்**
மேலாண்மை மற்றும் நிர்வாகம்,
RC இந்தூர் ராயல்ஸ், RID 3040

## ஒன்றுபட்ட ரோட்டரி சமூகம்

சமூக சேவைதான் 2006-ம் ஆண்டில் ரோட்டரியில் சேர என்னைத் தூண்டியது என்கிறார் ரிது குரோவர். சிறிய சங்கங்களை ஒன்றிணைத்து பெரிதாக்க வேண்டும். ஒருங் கிணைப்பு மூலம் கூட்டுத் தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்பது அவரது வாதமாகும். உறுப்பினர்கள் எண்ணிக்கையை அதிகரிக்க முயற்சித்தல், தலைமைத்துவ வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் குடும்பத்தினரை ஈடுபடுத்துதல் ஆகியவற்றின் மூலம் உறுப்பினர் எண்ணிக்கையை உயர்த்த முடியும் என்கிறார்.

ரிது DEI-ஐ வலுவாக ஆதரிக்கிறார். ஒவ்வொரு உறுப்பினரும் மதிப்பு மிக்கவர்கள், மரியாதைக் குரியவர்கள் என்கிற சூழலை உருவாக்க பாடுபட்டு வருகிறார். LGBTQIA மற்றும் திருநங்கைகளுக்கு தனியாக சங்கம் உருவாக்குவதைவிட தற்போதுள்ள சங்கங்களிலேயே அவர்களை சேர்த்துக் கொள்ளலாம் என்பது அவரது கருத்தாகும்.

வளங்களின் பொறுப்பான நிர்வாகத்தை பற்றி பேசுகையில், TRF நிதியை நியாயமான முறையில் பயன்படுத்தினால், ரோட்டரியின் வளங்கள் அதிகபட்ச நன்மைக்காக பயன் படுத்தப்படுவதை உறுதி செய்ய முடியும் என்று அவர் கூறுகிறார். அவருடைய மாவட்டத்தில் TRF இலக்கு 300,000 டாலர்கள். தற்போது மாவட்டத்தில் ஐந்து சர்வதேச மானிய உதவி திட்டங்களும் 3 CSR திட்டங்களும் செயல்படுத்து வதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன.

உறுப்பினர்களிடம் ரோட்டரி பற்றிய அறிவை மேம்படுத்துவதற்காக ஹிந்தி மற்றும் ஆங்கிலத்தில் புத்தகங்கள் அச்சிட்டு விநியோகித்துள்ளார்.■




# சுற்றுச்சூழல் உணர்வுடன் வீட்டை மாற்றுங்கள்

ப்ரீதி மேஹரா

*ஒரு புதிய வீடு சுற்றுச்சூழல் நட்பு சாத்தியங்கள் பலவற்றை திறக்கிறது.*

வீடு மாறுவது என்பது ஒரு புதிய தொடக்கத்தைப் போன்றது. நீங்கள் வாங்கிய வீட்டுப் பொருட்களின் கணக்கை எடுப்பதற்கான வாய்ப்பை இது வழங்குகிறது. ஆனால் அவ்வாறு செய்யும்போது, சுற்றுச்சூழல் உணர்வுடன் செயல்படுங்கள். உங்களுக்குத் தேவையில்லாத பொருட்களைக் கொடுப்பது மட்டுமல்லாமல், பல ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படாமல் கிடக்கும் தளபாடங்கள் மற்றும் துணிகளை மறுசுழற்சி மற்றும் மறுஊபயோகம் செய்யலாம். மிக முக்கியமாக, உங்கள் புதிய வீடு முடிந்தவரை குறைந்தபட்ச மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்றதாக இருப்பதை உறுதிசெய்ய, புதிய வீட்டுப் பொருட்களில் நீங்கள் புத்திசாலித்தனமாக முதலீடு செய்யவேண்டும்.

தொலைதூர டெல்லியிலிருந்து என் இதயத்திற்கு நெருக்கமான சென்னைக்கு வீடு மாறிய அனுபவத்திலிருந்து இதை நான் அறிவேன். ஒரு புதிய வீட்டை அமைப்பதற்கான முழு செயல்முறையும் ஒரு கண் திறப்பாக செயல்பட்டது. நான் என் சமையலறைப் பொருட்களைப் பிரித்தபோது, நான் தேவைப்படுவதை விட அதிகமாக வாங்கியிருக்கிறேன் என்பதை உணர்ந்தேன். பல ஆண்டுகளாக குவிந்து கிடக்கும் நண்பர்கள் மற்றும் உறவினர்களின் பரிசுகளும் இதில் அடங்கும். டெல்லியில் நான் அதில் பெரும்பகுதியைக் கொடுத்திருக்க வேண்டும் என்று எனக்குத் தெரியும், ஆனால் சில சமயங்களில் உணர்ச்சிகள் நம்மைப் பாதிக்கின்றன, இதனால் அந்த பரிசுகள் அணுக முடியாத மேல் அலமாரியில் பயன்படுத்தப்படாமல் கிடந்தன.

அதிர்ஷ்டவசமாக, சென்னையில் நான் நடைமுறையாக சிந்தித்து செயல்பட்டேன். டிசம்பர் தொடக்கத்தில் சென்னையைத் தாக்கிய சூறாவளியால் இடம்பெயர்ந்த மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்யும் ஒரு அமைப்புக்கு நான் பயன்படுத்தாத பல பாத்திரங்கள் விரைவாக நன்கொடையாக வழங்கப்பட்டன. நல்ல நாட்களைக் கண்ட பல ஆடைகள், வீட்டுப்பொருட்கள் மற்றும் உபகரணங்கள் வெளியேற்றப்பட்டது.

ஆனால் நான் அதோடு நிறுத்தவில்லை. எனது புதிய வீடு நாம் வாழும் காலத்தின் முன்னுரிமைகளை பிரதிபலிக்கவும், இணைக்கவும் வேண்டும் என்று முடிவு செய்தேன்.

காற்றுச்சீரமைப்பிகள் மற்றும் மின்விசிறிகள் போன்ற மின்சாதனங்களை வாங்கும் போது, ஆற்றல் திறன் வாய்ந்ததாகச் சான்றளிக்கப்பட்ட பிராண்டுகளில் புத்திசாலித்தனமாக முதலீடு செய்யுங்கள். காலாவதியான மற்றும் அதிக ஆற்றல் செலவில் இயங்கும் மலிவான இயந்திரங்களைத் தேர்வு செய்யாதீர்கள். நீங்கள் ஒரு வாஷிங் மெஷின் அல்லது நீர் சுத்திகரிப்பு சாதனம் வாங்கினால், குறைந்த மின்சாரம் மற்றும் தண்ணீரைப் பயன்படுத்தும் ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும். ஆற்றலைச் சேமிப்பது போலவே தண்ணீரைச் சேமிப்பதும் முக்கியம். அதிர்ஷ்டவசமாக, பெரும்பாலான உற்பத்தியாளர்கள் தற்போது அதிக சுற்றுச்சூழல் நட்பு இயந்திரங்களை உற்பத்தி செய்கின்றனர்.

ஆற்றலைச் சேமிப்பதற்கான ஒரு வழி உங்கள் வீட்டை நன்கு காற்றோட்டமாக வைத்திருப்பது. பழைய மகாபலிபுரம் சாலையில் நாங்கள் மாறிய அடுக்குமாடி குடியிருப்பு, சென்னையின் பெரும்பகுதியைப் போலவே-கடல் காற்றால் ஆசீர்வதிக்கப்பட்டது. ஆனால் எங்கள் இடத்தில் உள்ள பெரும்பாலான வீடுகள் கொசுக் களுக்குப் பயந்து பெரும்பாலான மாலை மற்றும் இரவு நேரங்களில் ஜன்னல்களை மூடியே வைத்துள்ளன. திறக்கப்படாத ஜன்னல்கள் கொசுக் களைத் தடுக்கலாம், அதேநேரம் புத்துணர்ச்சியான கடல் காற்றையும் தடுக்கும்.

நாங்கள் கலந்தாலோசித்த இளம் வடிவமைப்பாளர், அழகுணர்ச்சி யை தனது வேலையில் நடை முறைவாதத்துடன் இணைத்து வடிவமைக்கப்பவர். பிளாட்டில் உள்ள பெரிய மற்றும் சிறிய ஜன்னல்கள் அனைத்திலும் நெகிழ் உலோக சட்டங்களில் பொருத்தப்பட்ட கொசு வலைகளில் முதலீடு செய்யுமாறு அவர் பரிந்துரைத்தார். நாங்கள் அவருடைய ஆலோசனையைப் கடைப்பிடித்தோம், அவ்வாறு செய்ததால் நாங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறோம். வீடு மிகவும் காற்றோட்டமாக உள்ளது, மேலும் இதுவரை எங்கள் AC-களை ஆன் செய்ய வேண்டிய அவசியத்தை நாங்கள் உணரவில்லை. நாங்கள் எங்கள் மின்விசிறிகளை கூட

சிக்கனமாக பயன்படுத்துகிறோம். உச்ச கோடையில் வீடு வெப்பமாகவும் ஒட்டும் தன்மையுடனும் இருக்கலாம், ஆனால் கொசுக்கள் மற்றும் பூச்சி களைத் தடுக்க மாலை நேரங்களில் ஜன்னல்கள் மூடப்பட்டிருக்கும் வீட்டை விட, நன்கு காற்றோட்டமான வீடு மிகவும் வசதியாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

விரைவில் மெட்ரோ ரயில் இணைப்பு நிறுவப்பட உள்ள இடத்தையும் தேர்வு செய்துள்ளோம். இது எதிர்காலத்தில் புதைபடிவ எரிபொருள் வாகனங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க உதவும். கிடைக்கக்கூடிய மிகவும் நிலையான பொருளாக இருப்பதாலும்,எங்கள் மனசாட்சியின் மீது லேசாக இருப்பதாலும், பெரும்பாலான உட்புற அலங்காரத்தை சுற்றுசூழல் நட்புடைய மூங்கிலால் செய்ய முடிவு செய்தோம்.

எங்களுடையது ஒரு உயரமான அடுக்குமாடி குடியிருப்பு, ஆனால் நீங்கள் சொந்த நிலத்தை வைத்திருக்கும் அதிர்ஷ்டசாலி என்றால், நிலைத்தன்மைக்கான பாதையில் பயணிக்க நீங்கள் செய்யக்கூடிய பல தேர்வுகள் உள்ளன. முதல் விதி என்ன வென்றால், உங்கள் நிலத்தை கவனமாக ஆய்வு செய்து அதில் இருக்கும் பசுமையை அகற்றாமல் இருப்பது. பசுமையை வெட்டுவதற்குப் பதிலாக ஏற்கனவே நிலப்பரப்பை அலங்கரிக்கும் மரங்கள் மற்றும் புதர்களை இணைக்கக்கூடிய வடிவமைப்பை மேற்கொள்ளுங்கள்.

உங்கள் நிலத்திற்கு சேவை செய்யும் நீர் ஆதாரத்தைப் புரிந்து கொள்ளுங்கள். அதைச் சுற்றி திட்ட மிடுவது நல்லது. உதாரணமாக, உங்கள் நிலத்தடி நீரை நிரப்பவும், தோட்டம் மற்றும் காய்கறி திட்டு களுக்கு தண்ணீர் பாய்ச்சவும் உதவும் நீர் சேகரிப்பு அமைப்பை நிறுவியுள்ளீர்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் சமையலறை மற்றும் சிங்க்களில் வெளியேறும் நீரையும் நீங்கள் பயன்படுத்தினால் நன்றாக இருக்கும். உங்கள் ஃப்ளஷிங் அமைப்பில் அதே நீரை எப்படி மறு சுழற்சி செய்வது என்று ஒரு நீர் ஆலோசகர் உங்களுக்குச் சொல்ல கூடும்.

இறுதியாக, சூரிய சக்தி பற்றி ஒரு வார்த்தை. உங்களிடம் சொந்த வீடு இருந்தால், அடுக்குமாடி குடியிருப்பை காட்டிலும், பேனல்களை அமைப்பது மிகவும் எளிதாக இருக்கும். இருப்பினும், விரக்தியடைய வேண்டாம், பால்கனிகளின் பயன்பாடும் உதவக்கூடும். அல்லது சோலார் பேனல்களை நிறுவ உங்கள் கட்டிட சமுதாயத்தை வற்புறுத்துவது ஒரு விருப்பமாக இருக்கலாம். சில நிறுவனங்கள் பால்கனியில் ஒரு மினி காற்றாலை விசையாழியை நிறுவி, ஆற்றலின் விரிவான பயன்பாட்டைக் குறைக்கவும் உதவுகிறது. இதுபோன்றவை சில நொய்டாவில் நிறுவப்பட்டிருப்பதை நான் பார்த்திருக்கிறேன், காற்று வீசும் பகுதியில் அது நிறுவப் பட்டால் இன்னும் திறம்பட செயல்படும். உங்கள் கார்பன் முத்திரையைக் குறைத்து, பூமித்தாய்க்கு உங்களால் முடிந்ததைச் செய்ய வேண்டும் என்பதே இதன் யோசனை.

எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதிவருகிறார்.



# ரோட்டரியின் மக்கள் நல திட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு

## புணே-யில் டயாலிசிஸ் கருவிகள்



*டயாலிசிஸ் மையத்தில் சிகிச்சை பெறும் நோயாளிகள்.*

புணே, லவலெயில் இருக்கும் சிம்பயாசிஸ் பல்கலைக் கழக மருத்துவமனையில், RC புணே ஸ்போர்ட்ஸ் சிட்டி, RID 3131, ஆதரவுடன் ஏழை நோயாளிகளுக்கு இலவச டயாலிசிஸ் வழங்கிவரும் ரோட்டரி டயாலிசிஸ் மையத்துக்கு $85,000 பன்னாட்டு நல்கையின்கீழ் 10 புதிய டயாலிசிஸ் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. இதன் மூலம், ஆண்டுக்குச் சுமார் 21,000 சிகிச்சைகள் நடைபெறும்.■

## கொல்கத்தா பள்ளிகளில் WASH வசதிகள்



*தொடக்க விழாவில் RID அனிருதா ராய்சௌத்ரி ரோட்டரியர்கள் மற்றும் பிரபாசி உறுப்பினர்களுடன்.*

NRI வங்காளச் சமூகமான பிரபாசி, RID 3291-ஐச் சேர்ந்த ரோட்டரி சங்கங்கள் சேர்ந்து, கொல்கத்தாவில் உள்ள போதோதயா தொடக்கப் பள்ளியிலும், ஆஷா பவன் மையம் என்கிற மாற்றுத் திறனாளி மாணவிகளுக்கான பள்ளியிலும் WASH திட்டத்தைத் தொடங்கினார்கள்.■

## தில்லியில் திறன் மையம்



*திறன் மையத்தில் ரோட்டரியர்கள்.*

RC தில்லி சவுத் வெஸ்ட், RID 3011, தன்னுடைய ரோட்டரி தில்லி சவுத் வெஸ்ட் அறக்கட்டளை, ஆரிய சமாஜம் வழியாகப் புது தில்லியில் திறன் மையம் ஒன்றைத் தொடங்கியுள்ளது. இங்கு ஏழை மாணவர்களுக்குக் கணினி, ஆங்கிலம், தையல், அழகுக் கலை, பிற தொழில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.■

## மாற்றுத் திறனாளிக் குழந்தைகளுக்கு உதவி



*ஊனமுற்ற குழந்தைகள், ரோட்டேரியன்களுடன், சக்கர நாற்காலிகளைப் பெற்ற பிறகு.*

ஹூப்ளி, தார்வாட் ஒன், கோகக், முன்ட்காட், ஹங்கல், குன்ட்கொல், தன்டெலி ரோட்டரி சங்கங்களும் RILM-ம் இணைந்து, தார்வாடில் மாற்றுத் திறனாளிக் குழந்தைகள் எளிதாகப் பள்ளி செல்வதற்கென ரூ.13.5 லட்சம் மதிப்புள்ள 150 சக்கர நாற்காலிகளை வழங்கினார்கள்.■




New members from different groups in our communities bring fresh perspectives and ideas to our clubs and expand Rotary's presence. Invite prospective members from all backgrounds to experience Rotary.

REFER A NEW MEMBER
my.rotary.org/member-center

Rotary

FIND A CLUB
ANYWHERE IN THE WORLD!



Use Rotary's free Club Locator and find a meeting wherever you go!

www.rotary.org/clublocator


# District Wise TRF Contribution as on January 2024

(in US Dollars)

| District Number | Annual Fund | PolioPlus Fund | Endowment Fund | Other Funds | Total Contribution |
|---|---|---|---|---|---|
| **India** | | | | | |
| 2981 | 22,051 | 875 | 1,000 | 200 | 24,126 |
| 2982 | 22,888 | 694 | 24,085 | 8,857 | 56,524 |
| 3000 | 72,078 | 290 | 0 | 27,797 | 100,165 |
| 3011 | 134,732 | 23,916 | 26,089 | 249,872 | 434,609 |
| 3012 | 11,124 | 50 | 0 | 129,370 | 140,545 |
| 3020 | 111,355 | 22,227 | 33,235 | 49,025 | 215,842 |
| 3030 | 82,400 | 27,308 | 4,275 | 210,698 | 324,681 |
| 3040 | 3,772 | 108 | 0 | 25 | 3,906 |
| 3053 | 22,399 | 1,000 | 0 | 26,053 | 49,452 |
| 3055 | 82,292 | 2,516 | 30 | 6,228 | 91,067 |
| 3056 | 27,008 | 125 | 0 | 0 | 27,133 |
| 3060 | 74,999 | 9,590 | 7,700 | 178,913 | 271,202 |
| 3070 | 6,449 | 20 | 0 | 0 | 6,469 |
| 3080 | 83,889 | 21,006 | 1,500 | 11,384 | 117,779 |
| 3090 | 43,105 | 1,113 | 12,000 | 26,809 | 83,027 |
| 3100 | 81,611 | 2,787 | 25,301 | 31,118 | 140,817 |
| 3110 | 11,176 | 30 | 0 | 79,348 | 90,554 |
| 3120 | 34,079 | 129 | 0 | 101 | 34,308 |
| 3131 | 389,028 | 9,817 | 90,098 | 552,365 | 1,041,308 |
| 3132 | 87,806 | 4,658 | 10,000 | 48,391 | 150,854 |
| 3141 | 299,787 | 11,405 | 60,012 | 613,398 | 984,602 |
| 3142 | 241,539 | 33,293 | 14,500 | 47,798 | 337,129 |
| 3150 | 39,252 | 30,596 | 160,423 | 91,975 | 322,247 |
| 3160 | 10,568 | 1,051 | 0 | 0 | 11,619 |
| 3170 | 79,718 | 26,818 | 12,700 | 71,334 | 190,570 |
| 3181 | 82,971 | 2,073 | 1,000 | 75 | 86,119 |
| 3182 | 35,381 | 4,606 | 0 | 0 | 39,987 |
| 3191 | 50,405 | 8,991 | 60,976 | 287,466 | 407,837 |
| 3192 | 71,086 | 9,767 | 0 | 46,198 | 127,051 |
| 3201 | 121,533 | 43,971 | 45,684 | 1,040,428 | 1,251,615 |
| 3203 | 16,470 | 16,317 | 1,220 | 15,550 | 49,557 |
| 3204 | 15,346 | 2,574 | 0 | 18,466 | 36,386 |
| 3211 | 42,143 | 4,236 | 27,325 | 98,347 | 172,052 |
| 3212 | 58,621 | 18,987 | 2,000 | 65,152 | 144,760 |
| 3231 | 4,442 | 2,649 | 0 | 0 | 7,090 |
| 3232 | 42,329 | 18,109 | 15,511 | 859,326 | 935,275 |
| 3240 | 87,889 | 8,705 | 13,000 | 92,007 | 201,602 |
| 3250 | 31,185 | 3,051 | 26 | 11,298 | 45,560 |
| 3261 | 12,063 | 1,968 | 0 | 28,978 | 43,009 |
| 3262 | 36,129 | 4,936 | 1,000 | 2,575 | 44,640 |
| 3291 | 119,232 | 2,567 | 41,646 | 1,050 | 164,495 |
| 3220 **Sri Lanka** | 45,763 | 3,232 | 0 | 973 | 49,967 |
| 3271 **Pakistan** | 44,532 | 101,435 | 0 | 20,402 | 166,369 |
| *3272 **Pakistan** | 4,342 | 385 | 0 | 25 | 4,752 |
| *3281 **Bangladesh** | 80,569 | 2,105 | 3,000 | 264,728 | 350,403 |
| *3282 **Bangladesh** | 91,236 | 4,982 | 1,000 | 9,116 | 106,334 |
| 3292 **Nepal** | 150,403 | 20,776 | 13,000 | 94,094 | 278,272 |
| 63 **(former 3272)** | 1,025 | 0 | 0 | 0 | 1,025 |
| 64 **(former 3281)** | 23,045 | 200 | 1,000 | 0 | 24,245 |
| 65 **(former 3282)** | 3,797 | 100 | 0 | 9,000 | 12,897 |

* Undistricted

Annual Fund (AF) includes SHARE, AoF and World Fund.
PolioPlus excludes Bill and Melinda Gates Foundation. **Source:** RISAO

# உள்ளே இருந்து பார்ப்பது



சந்தியா ராவ்

*சிறுகதைகளின் புதிய தொகுப்பு மற்றும் சமீபத்திய புத்தகம் ஒன்று புனைகதை கணக்குகள் மூலம் வரலாற்று மற்றும் சமூக முன்னோக்குகளை வழங்குகின்றன*

உங்களுக்கு நெருக்கமான ஒருவரின் சந்ததியினர் விசேஷமான ஒன்றைச் செய்தால் – நான் விருதுகளைப் பற்றி பேசவில்லை – நீங்கள் விவரிக்க முடியாத மகிழ்ச்சியையும் பெருமையையும் உணர்வீர்கள். அது எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம்: ஆடைகளை வடிவமைத்தல், சமையல் செய்தல், உலகம் முழுவதும் பயணம் செய்தல், நண்பருக்கு ஆலோசனை வழங்குதல், கடினமான முடிவெடுப்பது மற்றும் புத்தகம் எழுதுதல். சமீபத்தில், பூம்டவுன் கேர்ள் என்ற தலைப்பில் பிளாக் லாரன்ஸ் பிரஸ் வெளியிட்ட மெலிதான புத்தகம் எனக்கு கிடைத்தது. இது சுபா சுந்தரின் முதல் சிறுகதைத் தொகுப்பு, அவரைப் பற்றி கொஞ்சம் அதிகமாக பேசுவதற்கு நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும், ஏனென்றால் அவர் எனது புத்தக வாசிப்பு முன்மாதிரியாக இருந்த அன்பான குழந்தை பருவ நண்பரின் மகள். நாங்கள் முதன்முதலில் 6 மற்றும் 8 வயதில் சந்தித்ததிலிருந்து பல ஆண்டுகள் ஓடி விட்டது. அவர் மாஸ்கோவிலும், நான் சென்னையிலும் இருக்கிறோம், ஆனால் நாங்கள் நெருங்கிய நண்பர்களாகவே இருக்கிறோம்.

சுபாவின் புத்தகம் 2021 செயின்ட் லாரன்ஸ் புத்தக விருதை வென்றது, மேலும் ஹட்சன் பரிசு, ஃப்ளானரி ஓ'கானர் விருது மற்றும் புதிய அமெரிக்க புனைகதை பரிசு ஆகியவற்றிற்கான இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றிருந்தது. இன்னும் நிறைய சொல்வதற்கு இருக்கிறது, ஆனால் அவள் பெங்களூரில் வளர்ந்தாள், இப்போது மாசசூசெட்ஸின் பாஸ்டனில் வசிக்கிறாள் என்ற குறிப்புடன் நிறுத்தி கொள்கிறேன். பூம்டவுன் கேர்ள் ஒன்பது கதைகளின் தொகுப்பு, இது பெங்களூரில் அமைக்கப்பட்டது. மேலும் நகரின் பல்வேறு குறுக்கு வழிகள் மற்றும் மூலைகளிலிருந்து வெளிவரும் கதாபாத்திரங்களின் நுணுக்கமான மற்றும் விரிவான வரிசையை வழங்குகிறது. ஒரு புறக்கணிக்கப்பட்ட இளம்பெண் கடத்தப்படுகிறார், இன்னொரு பெண் தன் தந்தையுடன் வெளியே செல்கிறார், வெளிநாட்டில் படிக்கும் ஆசையில் துடிக்கும் ஒரு இளைஞன், ஒரு வெளிநாட்டு அத்தையை 'பாதுகாக்கும்' ஒரு பையன், ஓய்வு பெற்று வாழும் காவேரிநகர் சேர்ந்த ஒருவருக்கு காதல் ஏற்படுகிறது, பயங்கரமான நிகழ்வுகளில் சிக்கிக் கொள்ளும் பள்ளி மாணவிகள் (தலைப்புக் கதை) மற்றும் பல கதைகள் இதில் இருக்கின்றது.

கதைக்களங்கள் பெரும்பாலும் திறந்த-முடிவுகளாக இருந்தாலும், வாழ்க்கையின் ஒரு பகுதி என உணர்வைக் கொடுக்கும் எழுத்து தெளிவாகவும், துல்லியமாகவும், விரிவாகவும், அடங்கியதாகவும் உள்ளது. ஒட்டுமொத்தமாக பார்த்தால், தொகுப்பில் உள்ள கதைகள் சில நேரங்களில் இருள், நிச்சயமற்ற தன்மை, அச்சுறுத்தல் கொண்ட உலகத்தை உருவாக்குகின்றன. எப்போதாவது, எழுத்து சுய உணர்வுடன் தோன்றலாம், ஆனால் அது நிஜ வாழ்க்கை மற்றும் 1980-கள் மற்றும் 1990-களின் கவலைகள் ஆகியவற்றுடன் துடிக்கும் போது நீங்கள் மேலும் விரும்பு வதற்கான சாத்தியக்கூறுகளுடன் பிரகாசிக்கிறது. ஒரு உதாரணம் சொல்ல வேண்டுமென்றால்: "சுதந்திர தினம்" என்ற கதையில், அப்பாவும் மகளும் சுதந்திர தினம் என்ற படத்தைப் பார்க்கப் போகிறார்கள். அவர்கள் சினிமாவை நோக்கிச் செல்லும்போது காரில் எந்த வகையான சக்தி செயல்படுகிறது என்பதைப் பற்றிய உரையாடலுடன் கதை ஆரம்பிக்கிறது.




இயற்பியல் பாடத்தில் சிறிது விவாதத்திற்கு பிறகு, "நியூட்டனின் விதிகளைப் புரிந்து கொள்ளாத நீ எப்படி தொண்ணூற்று ஒன்று மதிப்பெண்கள் பெற்றாய்?" என தந்தை தன் மகளிடம் கேட்கிறார். என் மனம் இந்த பயணத்தின் போது, பல்வேறு குழந்தைகள்/பெற்றோர்களுக்கு இடையே இடம்பெறும் இது போன்ற பல உரையாடல்களுக்கு சென்றது. 'நீங்கள் மனப்பாடம் செய்து ஒப்பிக்கலாம்... ஆனால் கருத்துக்களைப் புரிந்துகொள்ளும் வரை, நீங்கள் எதையும் கற்றுக் கொள்ளமுடியாது...' என்று அவர் தொடர்ந்தார், அதே சமயம் அவர் 16 வயதில் அமெரிக்கா விற்குப் படிக்கச் சென்றதையும், 'தன் தொழிலைத் தொடர இந்தியாவுக்குத் திரும்பியதையும், மூளைச் சிதைவுற்ற இந்த யுகத்தில் அவரைப் போன்றவர்கள் நாட்டிற்கு எப்படி தேவை என்பதையும் அவரது மகள் நினைத்து பார்க்கிறாள்.

மேலும், மற்றொரு உரையாடலில், இந்த முறை தந்தையின் முன்னாள் ஊழியர் ஒருவருடன், வழக்கமான விசாரிப்புகளுக்கு பிறகு, '...நீங்கள் இன்னும் இன்ஃபோசிஸில் இருக் கிறீர்களா?' என அவர் கேட்க, இல்லை என பதில் வருகிறது: 'வேலை அழுத்தங்கள் அதிகமாக இருந்ததால் அவள் அந்த நிறுவனத்தை விட்டு

வெளியேறியதாக' அந்த நபரிடம் கூறுகிறார். பணியை விரும்பி செய்யும் தந்தை அவளிடம் 'உன் வயதில் 16, 18 மணிநேரம் உழைக்க வேண்டும்' என கூற 'வாரத்திற்கு 70 மணிநேரம் வேலை' என்ற நாம் அறிந்த இன்னொருவரின் போர்க்குரலை அது எதிரொலிக்கிறது!

சுபாவின் பெங்களூருவிலிருந்து பிருந்தா சாரியின் "மெட்ராஸுக்கு அருகில் ஒரு இடத்திற்கு" இப்போது பயணிக்கிறோம், அவளுடைய கதாநாயகன் இந்தியாவிலிருந்து லண்டனுக்குப் பயணம் செய்து கடைசியாக அமெரிக்காவின் விர்ஜீனியாவுக்கு செல்கிறார். தி ஈஸ்ட் இண்டியனின் மையக் கதாபாத்திரமான டோனி, இந்த அற்புதமான சரித்திரத்தின் விவரிப்பாளர் ஆவார். இந்த நாவலை முன்னோக்கி வைக்க, ஆசிரியர் தனது குறிப்பில் சொல்வது: 'இது ஒரு புனைகதை படைப்பு என்றாலும், இது காலனித்துவ வட அமெரிக்காவில் "கிழக்கு இந்தியர்களின்" இருப்பால் ஈர்க்கப்பட்டது. அமெரிக்காவில் உள்ள முதல் கிழக்கிந்தியர்கள் (அதாவது, இந்திய துணைக் கண்டத்தின் பூர்வீகவாசிகள்) அநேகமாக ஒப்பந்த ஊழியர்களாக வந்திருக்கலாம். அவர்கள் லண்டன் வழியாக வந்தவர்கள், அங்கு அவர்கள் பெரும்பாலும் கிழக்கிந்திய கம்பெனி அதிகாரிகளின் ஊழியர்களாகவோ அல்லது கிழக்கிந்திய கம்பெனி கப்பல்களின் மாலுமிகளாகவோ இருந்திருக்கலாம். அவர்களில் பெரும்பாலோர், மலிவு உழைப்பை தேடும் முகவர்களால் அமெரிக்காவிற்கு கொண்டு வரப்பட்டனர். "டோனி" என்பது அத்தகைய கிழக்கிந்திய தொழிலாளியின் ஆரம்பகால குறிப்பு ஆகும்.

பிருந்தா சாரி தனது ஆராய்ச்சியின் போது, அத்தகைய நபர் ஒருவர் அமெரிக்காவிற்கு கடவுளின் பரிசு என்ற கப்பலில் ஏற்றப்படுவதற்கு முன்பு லண்டனில் உள்ள ஒரு மருந்தகத்தில் பயிற்சியாளராக பணிபுரிந்தார் என்பதைக் குறிக்கும் பதிவுகளை கண்டுபிடித்தார். அதனால் ஈர்க்கப்பட்டு, இந்த 'டோனியின்' சாத்தியமான வாழ்க்கை மற்றும் காலங்களைச் சுற்றி ஒரு விரிவான கதையை அவர் கற்பனை செய்தார். இது முற்றிலும் கற்பனையானது, ஆனால் ஒரு வரலாற்று சூழலுடன் உறுதியாக இணைக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, நீங்கள் மெட்ராஸ் நகரத்தின் பிறப்பில் ஆர்வமாக இருந்தால் அல்லது அதைப்பற்றி தெரிந்திருந்தால், புத்தகத்தின் ஆரம்ப பகுதியில் குறிப்பிட்டுள்ள பிரான்சிஸ் டே மற்றும் ஆண்ட்ரூ கோகன் போன்ற சில பெயர்களை நீங்கள் அடையாளம் காண்பீர்கள். கோரமண்டல் கடற்கரையில் உள்ள இந்த நகரத்தின் பிறப்பிற்கு அவர்கள் முக்கிய பங்கு வகித்ததாக நம்பப்படுகிறது. விர்ஜீனியா அத்தியாயத்தில், டோனி பணிபுரியும் ஜார்ஜ் மெனிஃபி பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது; ஜார்ஜ் மெனெஃபி விர்ஜீனியாவில் ஒரு பணக்கார நில உரிமையாளர் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது.




புனைகதை அல்லாத பகுதிகளும் சலிப்பாக இல்லாமல் உறுதியாக எழுதப்படிருந்தது. இதன் வாசிப்பு அனுபவம் மிகவும் அசாதாரணமான முறையில் கவர்ந்திழுக்கிறது, இருப்பினும் ஒரு எச்சரிக்கை: உரையின் எழுத்துகள் மன்னிக்க முடியாத அளவு சிறியதாக உள்ளது. ஆனால் அதனால் நீங்கள் அதை நிறுத்த வேண்டாம். பல வாசகர்களுக்கு விர்ஜீனியா மற்றும் மேரிலாந்தில் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் இருக்க வாய்ப்புள்ளது, இந்த புத்தகத்தை படிக்க அதுவும் ஒரு காரணத்தை சேர்க்கிறது. விளக்கங்கள் தூண்டக்கூடியவை, கதைக்களம் ஈர்க்கக்கூடியது... பிருந்தா சாரி, அரிய புத்தகத்தால் மட்டுமே செய்யக்கூடியதைச் செய்கிறார், அவர் டோனியின் பயணத்தில் உங்களை அழைத்துச் செல்கிறார். இது பிரிவினை, அடையாள இழப்பு, பாடுபடுதல், போராடுதல், அடிமைப்படுத்துதல் பற்றிய கதை ஆனால் அதேசமயம் இது தேடுதல், பெறுதல், உருவாக்குதல் பற்றிய கதையும் கூட. இதில் சோதனை மற்றும் தண்டனை உள்ளது, ஆனால் நுண்ணறிவு மற்றும் வெகுமதிகளும் உள்ளன. நீங்கள் விஷயங்களை எப்படிப் பார்க்கிறீர்கள் என்பதைப் பொறுத்து இவை அனைத்தும் ஓரளவு தெளிவற்றதாகவோ அல்லது புதிராகவோ தோன்றலாம், ஆனால் புத்தகம் மிக தெளிவாக உள்ளது என்பதை உறுதியுடன் நான் கூறுவேன்.

டோனி சில சமயங்களில் முற்போக்கு உள்ளவராக தோன்றுகிறார், 'தனது ஊதியத் தரத்திற்கு மேல்' அவதானிப்புகளைச் செய்கிறார். இருப்பினும், நாம் அவரை நம்புகிறோம், அவருடைய சூழ்நிலையில் அனுதாபம் கொள்கிறோம். இது ஒரு மிகபெரிய சவால்: ஒரு பழுப்பு நிற மனிதன் (வெள்ளை அல்ல, கருப்பு அல்ல) காலனித்துவ துணைக்கண்டத்தில், தொழில்மயமாகி வரும் நகரம் வழியாக பயணித்து, சதுப்பு நிலமான, கொள்ளைநோய் நிறைந்த சூழலில், ஆதிவாசிகள் படிப்படியாக அழிக்கப்பட்டு வரும் சூழலில் வேர்களை உன்ற முயற்சிக்கிறார். அங்கே புகையிலை வயல்களில் வேலை செய்வதற்காக அடிமைகளின் கப்பல்கள் கிட்டத்தட்ட தினசரி கொண்டு வரப்படுகின்றன. முதலாளித்துவ கர்வம் மற்றும் சுதந்திரத்திற்கான ஏக்கம் ஆகிய வற்றால் மேலெழுந்த ஒரு சூழ்நிலையில், அதிர்ஷ்டவசமாக டோனிக்கு ஒரு மருத்துவரின் உதவியாளராக வேலை கிடைக்கிறது. சோகமான இழப்புகள் மற்றும் கடினமான முடிவுகளை எடுத்து, அவர் வாழவும் நேசிக்கவும் கற்றுக்கொள்ள, நீங்கள் அவரை உற்சாகப்படுத்துவீர்கள்.

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

# Star Performers (Membership &

| Membership Awards | Zone 4 | Zone 5 |
|---|---|---|
| **Highest membership growth** | Ashok Kantoor (RID 3011) | P Saravanan (RID 2982) |
| **Highest membership growth in %age** | Dushyant Chaudhary (RID 3070) | P Saravanan (RID 2982) |
| **Highest expansion** | Ashok Kantoor (RID 3011) | S Rajmohan Nair (RID 3201) |
| **Highest women membership growth** | Ashok Kantoor (RID 3011) | I Jerald (RID 3000) |
| **Highest existing membership retention** | VP Kalta (RID 3080) | VV Pramod Nayanar (RID 3204) |
| **Highest new member retention** | Rajesh Kumar Chura (RID 3053) | S Rajmohan Nair (RID 3201) |



*RI தலைவர் கோர்டன் மெக்கினலி IPDG V V பிரமோத் நாயனார் மற்றும் அவரது மனைவி ஸ்ரீவித்யா அவர்களுக்கு விருதை வழங்குகிறார். RID ராஜு சுப்ரமணியன், PDGs C சிவஞானசெல்வம், ராஜேஷ் சுபாஷ் மற்றும் அவரது மனைவி தீஷ்மா ஆகியோரும் உள்ளனர்.*

## Public Image Champion Awards — Zones 4, 5, 6 and 7

| Zone 4 | Zone 5 | Zone 6 | Zone 7 |
|---|---|---|---|
| Kailash Jethani (RID 3142) | P Saravanan (RD 2982) | Anand Jhunjhunuwala (RID 3030) | Bhaskar Ram Viswanatham (RID 3020) |
| Shrikant Indani (RID 3060) | S Rajmohan Nair (RID 3201) | Shashank Rastogi (RID 3261) | Anil Parmar (RID 3131) |
| Sandeep Agrawalla (RID 3141) | VV Pramod Nayanar (3204) | DK Sharma (RID 3100) | Rukmesh Jakotia (RID 3132) |
| Dushyant Chaudhary (RID 3070) | K Babumon (RID 3211) | Pawan Agarwal (RID 3110) | Talla Rajasekar Reddy (RID 3150) |
| Balwantsinh Chirana (RID 3054) | VR Muthu (RID 3212) | Jitendra Bahadur Rajbhandary (RID 3292) | Vominna Satish Babu (RID 3160) |
| VP Kalta (RID 3080) | Pubudu de Zoysa (RID 3220) | Anil Agarwal (RID 3120) | Venkatesh Deshpande (RID 3170) |
| | | | Jeetendra Aneja (RID 3190) |

# PI Awards) — Zones 4, 5, 6 and 7

| Membership Awards | Zone 6 | Zone 7 |
|---|---|---|
| **Highest membership growth** | Anand Jhunjhunuwala (RID 3030) | N Prakash Karanth (RID 3181) |
| **Highest membership growth in %age** | Anand Jhunjhunuwala (RID 3030) | N Prakash Karanth (RID 3181) |
| **Highest expansion** | Shashank Rastogi (RID 3261) | Bhaskar Ram Viswanatham (RID 3020) |
| **Highest women membership growth** | Shashank Rastogi (RID 3261) | N Prakash Karanth (RID 3181) |
| **Highest existing membership retention** | Shashank Rastogi (RID 3261)<br>Sanjeev Kumar Thakur (RID 3250) | Dr Jayagowri Hadigal (RID 3182) |
| **Highest new member retention** | Jitendra Bahadur Rajbhandary (RID 3292) | Vommina Satish Babu (RID 3160) |



IPDG ஷஷாங்க் ரஸ்தோகி மற்றும் அவரது மனைவி விசாகா RI தலைவர் மெக்கினலியிடமிருந்து விருது பெறுகிறார்கள். DG மஞ்சித் சிங் அரோரா (இடது), PDG பிரதீப் முகர்ஜி மற்றும் RID சுப்பிரமணியன் ஆகியோரும் உள்ளனர்.



IPDG அசோக் கண்டூர் மற்றும் அல்கா RI தலைவர் மெக்கினலியிடமிருந்து விருது பெறுகிறார்கள். PDG குர்ஜித் சிங் செகோன் இடப்பக்கம் காணப்படுகிறார்.



RI தலைவர் மெக்கினலி Public Image விருதை IPDG பல்வந்த் சிங் சிரானாவிடம் வழங்குகிறார். RPIC பிங்கி படேல், RID சுப்பிரமணியன் மற்றும் PDG அசோக் குப்தா ஆகியோரும் காணப்படுகின்றனர்.



IPDG வெங்கடேஷ் தேஷ்பாண்டே RI தலைவர் மெக்கினலியிடமிருந்து விருது பெறுகிறார். PRID A S வெங்கடேஷ், RID சுப்பிரமணியன், DGE ஷரத் பாய் மற்றும் PDG சங்க்ராம் பாட்டீல் ஆகியோரும் உள்ளனர்.

# ரோட்டரி நட்புறவின் சக்தி

**கல்பனா கௌண்ட்**

1921-ஆம் ஆண்டு எடின்பர்கில் நடைபெற்ற ரோட்டரி சர்வதேச மாநாட்டில் பேசிய பால் ஹாரிஸ் ரோட்டரியின் உந்து சக்தி நட்புறவுதான் என்கிறார். ரோட்டேரியன்களுடனான நட்புறவு சமுதாயத்தில் பல நன்மைகளுக்கான ஆரம்பமாக இருந்தது. இந்தியாவிலும், ஆசியாவின் பிரதான பகுதிகளிலும் உள்ள ரோட்டரியின் நூற்றாண்டு விழா 2020-ஆம் ஆண்டு கொல்கத்தாவில் விமரிசையான முறையில் நடைபெற்றது. 30-க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 4,000-த்துக்கும் மேற்பட்ட ரோட்டேரியன்கள் ஒன்றுகூடியதால் நகரமே மகிழ்ச்சியில் திளைத்தது. நான் வரவேற்பு குழுவில் ஒருவராக இடம்பெற்றிருந்தேன். RID 7730-க்கு (அமெரிக்கா மற்றும் கனடா) உட்பட்ட வடக்கு கரோலினா ரோட்டரி சங்கத்தின் முன்னாள் மாவட்ட ஆளுநர் நான்ஸி பார்பியை, ஹௌரா ரயில்நிலையத்தில் வரவேற்கும் பொறுப்பு என்னிடம் வழங்கப்பட்டது.

அவரை நான் ரயில்நிலையத்தில் சந்தித்தபோது, அந்த சந்திப்பு நேசத்துக்குரிய நட்பின் தொடக்கமாகவும், பலரின் நெஞ்சங்களை தொடக்கூடியதாகவும் இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. அந்த மூன்று நாட்களில் PDG நான்சியை நான் பலமுறை சந்தித்தேன். நாங்கள் நண்பர்களானோம். 2008-ம் ஆண்டு அவர், GSE குழுத் தலைவராக RID 3250-க்கு வந்திருந்தார். இந்தியாவுடன் ஒரு உணர்ச்சி கரமான பிணைப்பை வளர்த்துக் கொண்டார். போலியோ ஒழிப்பு நடவடிக்கைகள் அவரது இதயத்திற்கு நெருக்கமாக இருந்தது. மேலும் அவர் இந்தியாவில் NID நடைபெற்றபோது அவர், தமது மாவட்டத்தைச் சேர்ந்த ரோட்டேரியன்களின் குழு தலைவராக வந்திருந்தார்.

கொல்கத்தாவில் நடைபெற்ற நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தின் உற்சாகம் தொற்று நோயின் வருகையால் காணாமல் போனது. நாட்டு மக்கள் அச்சுறுத்தலுக்கு ஆளானதால் பாதுகாப்பு இல்லாத நிலை இருந்தது. பலரும் துன்பத்துக்கு ஆளானார்கள். கோவிட் தொற்றின் இரண்டாவது அலையின்போது நான்ஸி என்னிடம், தேவையான ஆக்ஸிஜன் செறிவூட்டிகளை அனுப்பிவைப்பதாகக் கூறினார். அதன்படி 40 ஆக்ஸிஜன் செறிவூட்டிகள், ரோட்டரி மாவட்டம் 7730, மண்டலம் 28, 32, 33 (அமெரிக்கா மற்றும் கனடா) சார்பில் எனக்கு நன்கொடையாக அனுப்பிவைக்கப்பட்டன. இதற்கான முழு முயற்சியையும் அவர் மேற்கொண்டார். அஸ்ஸாமில் நான் வசிக்கும் திப்ரூகர் நகருக்கு உயிர்காக்கும் கருவிகளை அனுப்பிவைக்க சேவா அமைப்பின் உதவியை அவர் நாடினார். அவற்றை பெற்றுக்கொண்ட நான், ரோட்டரி சங்கம் மூலம் அஸ்ஸாம் மற்றும் பக்கத்து மாநிலங்களில் உள்ள சரியான அமைப்புகளுக்கு ரோட்டேரியன்கள் மூலம் அனுப்பிவைத்தேன். முதல் செறிவூட்டி திப்ரூகர் போலீஸ் மருத்துவமனைக்கும் மற்றவை மார்வாரி யுவ மஞ்ச் மோரன், தீப்ஷிகா புற்றுநோய் அறக்கட்டளை, பிரதிஷ்ஸ்ருதி புற்றுநோய் மற்றும் பல்வேறு நோய் தடுப்பு அறக்கட்டளை, திப்ரூகர் பல்கலைக்கழக மருத்துவமனை உள்ளிட்டவற்றுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

RID 3012 இ கனெக்ட் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்தவர் டாக்டர் நிஷால் பாண்டே. நான் அவருடன் கிஃப்ட் ஆஃப் லைப் திட்டத்துக்காக பணிபுரிந்திருக்கிறேன். பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு இதய அறுவைச் சிகிச்சை செய்யும் திட்டம் அது. டாக்டர் நிஷால் பாண்டே, சில மருத்துவ கருவிகளையும் இரண்டு ஆக்ஸிஜன் செறிவூட்டிகளையும் மியன்மாருக்குத் தேவைப்பட்டதால் அனுப்பிவைக்க விரும்பினார். ஆனால், மியன்மாரில் ராணுவ ஆட்சி நடந்து வந்ததால் அவற்றை அனுப்புவது கடினமாக இருந்தது. இதற்கு ஏதாவது செய்ய வேண்டும்




*மியான்மரில் உள்ள RC மாண்டலே முன்னாள் செயலாளர் நே மின் ஊ (இடமிருந்து நான்காவது) மற்ற உறுப்பினர்களுடன்.*

என மனம் உறுத்திக் கொண்டே இருந்தது. இதைத் தொடர்ந்து 14 ஆக்ஸிஜன செறிவூட்டிகள் திப்ரூகரிலிருந்து ரயில் மூலம் நாகாலாந்தில் உள்ள திமாபூருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. வேறு நாட்டில் உள்ள குடிமக்களுக்கு பயன்பாட்டுக்காக இவை ரயில் மூலம் அனுப்பி வைக்கப் படுவது குறித்து ரயில்வே ஊழியர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

இந்த கடினமான பணிக்காக பல ரோட்டேரியன்கள் ஒன்று சேர்ந்தனர். மியன்மார் கோவிட் தொற்றை எதிர்த்து கடினமாக போராடிக் கொண்டிருந்த நேரத்தில் 2021 பிப்ரவரி மாதத்தில் ஆட்சிக் கவிழ்ப்பு நடந்து ராணுவம் ஆட்சியை கைப்பற்றியதால் தொற்றுநோயை எதிர்கொள்வது கடினமாக இருந்தது. வெளி உலகுக்கே தெரியாமல் ரோட்டேரியன்கள் சிலர் தெருக்களில் தாற்காலிக மருத்துவ மையங்களை ஏற்படுத்தியிருந்தனர். வெளி உலகுடன் எந்த தொடர்பும் இல்லாததால் எந்த பகுதியிலிருந்து உதவிகள் வரவில்லை. RID 3350 மாவட்டத்தில் 7 ரோட்டரி சங்கங்கள் இடம்பெற்றிருந்தாலும் ராணுவ ஆட்சியில் வெளிஉலக தொடர்பு துண்டிக்கப்பட்டிருந்ததால் ரோட்டரி மாவட்டத்தின் தொடர்புள்ள எந்த நாட்டிலிருந்தும் உதவிகள் வரவில்லை.

இறுதியில் நாங்கள் அனுப்பி வைத்த செறிவூட்டிகள், இந்தியாவிலிருந்து மியான்மரின் நுழைவுப் பகுதியான டாமு என்ற சிறிய நகரத்தை சென்றடைந்தது. எனினும் மரங்கள் அடர்ந்த மலைப்பாங்கான பகுதி வழியாக எடுத்துச் செல்லப்பட்டதால் அதிக நாட்கள் ஆனது. மண்டலே ரோட்டரி சங்கத்தின் செயலாளர் ரோட்டேரியன் நே மின் ஊ மற்றும் அவரது சங்கத்தைச் சேர்ந்த இதர உறுப்பினர்கள் செறிவூட்டிகளை பெற்று விநியோகிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர். மியான்மரில் வசிக்கும் மணிப்பூரி வம்சாவளியைச் சேர்ந்த மியன்மார் மெய்ட்டீ வளர்ச்சி சங்கத்திடம் சகோதரத்துவத்தை உணர்த்தும் வகையில் ஒரு செறிவூட்டியை, மண்டலே ரோட்டரி சங்கத் தலைவர் Dr நயீங் வின் வழங்கினார். மண்டலேயில் மட்டுமின்றி யாங்கூனிலும் கோவிட் தொற்று பாதித்த கடினமான நேரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு செறிவூட்டிகள் மூலம் நிவாரணம் அளிக்கப்பட்டது.

இதனால் பல உயிர்கள் காப்பாற்றப் பட்டன. எனது நண்பர் PDG நான்ஸியின் தன்னலமற்ற செயலையும், அமெரிக்கா மற்றும் கனடாவைச் சேர்ந்த ரோட்டேரியன்களின் ஆதரவை அவர் பெற்றதையும் நினைத்துப் பார்க்கையில், ரோட்டேரியன்களின் நட்பின் சக்தியும் அதனால் ஏற்பட்ட நன்மைகளும் வியப்பை ஏற்படுத்தியது.



PDG *நான்சி பார்பியுடன்* PDG *கல்பனா கவுண்ட் ஹவுரா ரயில் நிலையத்தில்.*

மண்டலே ரோட்டரி சங்கத்தின் முன்னாள் செயலாளர் நே மின் ஊ, 2021-ல் மீண்டும் கோவிட் தொற்று அலை உச்சத்தில் இருந்தபோது போதிய ஆக்ஸிஜன் கருவிகள் மற்றும் மருத்துவ வசதிகள் இல்லாமல் மியன்மாரில் ஆயிரக் கணக்கான உயிர்கள் பலியானதை நினைவுகூர்ந்தார். இந்த நிலையில் 2021 ஆகஸ்ட் மாதம் அமெரிக்கா மற்றும் கனடா விலிருந்து அனுப்பிவைக்கப்பட்ட 10 ஆக்ஸிஜன் செறிவூட்டிகள், திப்ரூகர், கொஹிமா, இம்பால் ரோட்டரி சங்கங்கள் RID 3240 மற்றும் RID 3012 இ கனெக்ட் சங்கம் மூலம் கடவுள் அளித்த பரிசாக அனுப்பிவைக்கப்பட்டன.

இந்த கூட்டு முயற்சிக்காக, 10 ஆக்ஸிஜன் செறிவூட்டிகளை மியன்மாருக்கு அனுப்பி வைப் பதற்காக ஏராளமான மெய்நிகர் கூட்டங்கள் நடத்தப்பட்டன. ரயில், பேருந்து மற்றும் உள்ளூர் குழுக்கள் மூலம் இவை அனுப்பிவைக்கப்பட்டன. மியன்மார் ரோட்டரி சங்கங்கள் சார்பாக மண்டலே ரோட்டரி சங்கம் இந்த செறிவூட்டிகளைப் பெற்றுக் கொண்டது.




PDG *கல்பனா* RC *துலியாஜன் உறுப்பினர்களுடன் அவர்களுக்கு ஆக்ஸிஜன் செறிவூட்டல் கொடுத்த பிறகு.*

எழுத்தாளர் RID 3240-ன் முன்னாள் ஆளுநர்.

## RC பட்டுக்கோட்டை கிங்ஸ் — RID 2981



பொங்கல் பண்டிகையை யொட்டி, வசதி குறைந்த குடும்பங் களுக்கு பரிசுப் பொருட்கள் மற்றும் ஆடைகள் வழங்கப்பட்டன.

## RC காசியாபாத் ஐடியல் — RID 3012

DG பிரியதோஷ் குப்தா ஷம்பு தயாள் கல்லூரியில் சங்கம் சார்பில் ஸ்மார்ட் வகுப்பு ஒன்றை திறந்து வைத்தார். ஒரு மழைநீர் சேகரிப்பு அமைப்பும் அங்கு அமைக்கப்பட்டது.




## RC மாநகர் கிருஷ்ணகிரி — RID 2982



சேலத்தில் உள்ள NCC கேடட்கள் மற்றும் பணியாளர் களைக் கொண்டு காவேரிப் பட்டினம் அரசு ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் மரக்கன்றுகள் நடும் விழா நடப்பட்டது.

## RC நாக்பூர் மெட்ரோ — RID 3030

64 முதியோர்களை கொண்ட முதியோர் இல்லமான மாடோஸ்ரீ விருதாஷ்ரமத் திற்கு அறுபது டின்னர் செட்கள் வழங்கப்பட்டன.



## RC ஜெயங்கொண்டம் — RID 3000



கால்நடை பராமரிப்புத் துறையுடன் இணைந்து கால்நடை குடற்புழு நீக்க மருத்துவ முகாம் நடத்தப்பட்டது.

## RC பாலி — RID 3056

ஹேமாவாஸ் கிராமத்தில் உள்ள அரசுப் பள்ளிக்கு கணினிகள் நன்கொடை யாக வழங்கப் பட்டது, இதன் மூலம் மாணவர்கள் பயனடைந்தனர்.



# செய்திகள்

## RC ரூர்க்கி மிட் டவுன் — RID 3080



கடந்த நான்காண்டுகளாக ஜனவரி மாதம் முழுவதும் குளிரை சமாளிக்க டீ, சமோசா மற்றும் பிஸ்கட் போன்றவற்றை சங்கம் கூலித் தொழிலாளர் களுக்கு வழங்கி வருகிறது.

## RC குஷிநகர் — RID 3120

உலக அமைதிச் செய்தி சுற்றுப் பயணத்தில் இருக்கும் ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த சுதத்வா ரிஜு (12) மற்றும் மூன்று சைக்கிள் ஓட்டுநர்கள் கங்கோத்ரியில் இருந்து வந்ததும் கௌரவிக்கப்பட்டனர்.




## RC முசாபர்நகர் மிட் டவுன் — RID 3100



TRF துணைத்தலைவர் பரத் பாண்டியா மற்றும் DG அசோக் குப்தா மாவட்ட சிறையில் சங்கம் மூலம் மேம்படுத்தப் பட்ட கழிப் பறை மற்றும் சுதந்திரப் போராட்ட வீரர் நினைவுத் தொகுதியை திறந்து வைத்தனர்.

## RC புனே கோத்ருட் — RID 3131

க்ளாட் சிஸ்டம்ஸ் நிறுவனத்துடன் கூட்டுத் திட்டத்தில் 35 பெண்களுக்கு தையல் பயிற்சி அளிக்கப்பட்டது.



## RC நைனிடால் — RID 3110



B D பாண்டே மருத்துவமனை மற்றும் ஹல்த்வானியில் உள்ள சர்க்காரி மஹிலா சிக்கிட்சாலயா ஆகியவற்றில் புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு போர்வைகள் மற்றும் ஆடைகள் வழங்கப்பட்டன.

## RC மும்பை பாந்தப் — RID 3141

மூன்று நாள் ரோட்டரி ஃபன் ஃபீயஸ்டாவில் சமூகப் பிரபலங்கள் கலந்து கொண்ட பல நிகழ்வுகள் பின்தங்கிய மக்களுக்கான சேவை திட்டங்களுக்கு நிதி திரட்டியது.



## RC ஜம்மலமடுகு — RID 3160




அரசு பாலிடெக்னிக் கல்லூரிக்கு இருபது நாற்காலிகள் வழங்கப் பட்டது.

## RC கலியன்புரா — RID 3182

PDG நாகேந்திர பிரசாத் இரண்டு டயாலிசிஸ் கருவிகளை (ரூ.17 லட்சம்) கோரட்டி மருத்துவ மனையில் உள்ள ரோட்டரி டயாலிசிஸ் மையத்திற்கு வழங்கினார்.



## RC கஜேந்திரகாட் — RID 3170



கண்புரை பரிசோதனை முகாமில் 400 நோயாளிகள் பரிசோதிக்கப் பட்டு, 103 பேர் அறுவை சிகிச்சைக் காக ஹூப்பள்ளி யில் உள்ள M M ஜோஷி கண் மருத்துவ மனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

## RC பெங்களூரு ஹெரிடேஜ் நார்த் — RID 3192

காமக்ஷிபுரா அரசு தொடக்கப் பள்ளிக்கு வண்ண மயமான மேசைகள் மற்றும் நாற்காலிகள் வழங்கப்பட்டன.



## RC கொள்ளேகல் — RID 3181



இரண்டு நாள் மாவட்ட அளவிலான பூப்பந்து போட்டியை சங்கத்தலைவர் நஞ்சுண்ட சாமி துவக்கி வைத்தார். வெற்றி பெற்றவர்களுக்கு கோப்பைகள் வழங்கப்பட்டன.

## RC களமசேரி — RID 3201

சங்கம் ஒரு ஏழை குடும்பத்திற்கு கொச்சின் சென்ட்ரல் சங்க உறுப்பினர் கோச்சௌஸஃப் சிட்டிலப்பள்ளி உதவியுடன் ஒரு வீடு அமைத்துக் கொடுத்தது.



# செய்திகள்

## RC நிலம்பூர் — RID 3204




வீடு கட்டுவதற்காக 20 செண்ட் நிலம் (ரூ.20 லட்சம்) பெற்ற ஐந்து நிலமற்ற குடும்பங்களில் ஒன்றிக்கு ஆவணங்களை DG சேது சிவசங்கர் வழங்கினார்.

## RC ராய்பூர் — RID 3261

சங்கம் நடத்திய வேலைவாய்ப்பு கண்காட்சியில், முதல் கட்டமாக 18 நிறுவனங்கள் மூலம் 157 பேர் பணியமர்த் தப்பட்டனர்.




## RC விருதுநகர் — RID 3212



சர்க்கரை நோய் விழிப்புணர்வு பேரணியை PDG-க்கள் V R முத்து, ஒவிஜயகுமார் ஆகியோர் கொடி அசைத்து தொடங்கி வைத்தனர். சர்க்கரை நோய் கண்டறியும் முகாமும் நடத்தப்பட்டது

## RC புவனேஸ்வர் மெடோஸ் — RID 3262

CIME கல்லூரியில் நடைபெற்ற சைபர் பாதுகாப்பு கருத்தரங்கில் சுமார் 300 மாணவர்கள் கலந்துக் கொண்டனர், இதில் DG ஜெயஸ்ரீ மொகந்தி தலைமை விருந்தினராக பங்கேற்றார்.



## RC வேலூர் — RID 3231




தமிழ்நாட்டின் பொங்கல் பண்டிகை குறித்து வேலம்மாள் போதி வளாகத்தில் 4-ம் வகுப்பு படிக்கும் ஒன்பது வயது மாணவி சம்யுக்த ஸ்ரீ சங்க கூட்டத்தில் சிறப்புரையாற்றினார்.

## RC ஜோத்பூர் கார்டன்ஸ் கல்கத்தா — RID 3291

ஜாய்பூர் ஹவுராவில் RCC சிசிர் பாகனின் ஆதரவுடன் குடும்பங் களுக்கு போர்வைகள் விநியோகிக் கப்பட்டன. மரக்கன்றுகளும் நடப்பட்டன.



ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்



# சத்தம், சத்தம், சத்தம்

**TCA ஸ்ரீனிவாச ராகவன்**

பல விஷயங்களில் நமக்குள் உடன்பாடு இல்லையென்றாலும் நாம் முழு மனதுடன் ஒப்புக் கொள்ளும் சில விஷயங்களில் ஒன்று சத்தத்திற்கு மேல் நமக்கு இருக்கும் வலுவான விருப்பம். திடீரென்று, எங்கள் வீட்டின் பின்புறத்திலிருந்து ஒரு பெரிய மின்னியல் இசை ஒலிக்கத் தொடங்கியது. இது ஒரு பெரிய பில்டருக்கு சொந்தமான வாகன நிறுத்துமிடம். இது எப்போதும் நிறைந்திருக்கும் ஆனால் வார இறுதி நாட்களில் தவிர. அதனால் அதை பில்டர் 'ஈவென்ட்ஸ்' நிறுவனங்களுக்கு வாடகைக்கு கொடுத்து வருகிறார்.

இவற்றில் ஒன்று இசை நிகழ்வுகளை ஒருங்கிணைக்கிறது, உண்மையில் இதில் இசை இருந்தால் நன்றாக இருக்கும். மாறாக, டிரம்ஸ் மற்றும் பேஸ் கிட்டார்களின் உரத்த சத்தம் மட்டுமே உள்ளது. இது டெக்னோ இசை என்று அழைக்கப்படுகிறது. அந்த வார இறுதியில் இந்த தாக்குதல் மாலை 3 மணி முதல் இரவு 10 மணி வரை ஏழு மணி நேரம் நீடித்தது. இரண்டு வாரங்களுக்கு முன்பு இது மீண்டும் நடந்தது.

அண்டை வீட்டாரில் ஒருவர் அதன் டெசிபல் அளவை வெற்றிகரமாக அளந்தார். அது 90 என காட்டியது. சட்டப்படி அனுமதிக்கப்பட்ட அளவு 45. எனவே அடுத்த நாள், எங்கள் வீட்டுவசதி சங்கத்தின் தலைவர் உள்ளூர் காவல் நிலையத்தில் இதை எப்படி அனுமதித்தார்கள் என்று கேட்டார். இதற்கு மாவட்ட மாஜிஸ்திரேட் உத்தியோக பூர்வ அனுமதி அளித்துள்ளதாக போலீசார் தெரிவித்தனர். ஆனால் இசை எவ்வளவு சத்தமாக இருக்கலாம் என்பதை அனுமதி குறிப்பிடவில்லை என்று தெரிந்தது. இந்த நிகழ்வு குடியிருப்பு கட்டிடங்களின் அருகில் நடைபெறும் என்று விண்ணப்பத்தில் கூறப்பட்டிருந்ததா என்றும் சந்தேகமும் எழுந்தது. விவரங்களின் மேல் கவனம் செலுத்தப்படவில்லை. நாமும் அப்படித்தான்.

எனவே எங்களுக்கு முழு 90 டெசிபலும் கிடைத்தது. எல்லா வீடுகளிலும் ஜன்னல்கள் அதிர ஆரம்பித்தன, எங்கள் எலும்புகளும் சேர்ந்து அதிர்ந்தன. சிறு குழந்தைகள் மற்றும் மிகவும் வயதானவர்களுக்கும் அதே கதி தான். காதுகேளாதவர்கள் மட்டுமே... அதிர்ஷ்டசாலிகள்... காயமின்றி தப்பினர். பற்கள் விழுந்து விடாமல் இருக்க அவற்றை இறுக்கமாக கடிப்பதை தவிர வேறு எதுவும் எங்களால் செய்ய முடியவில்லை.

இது ஒரு அசாதாரண நிகழ்வு என்று நீங்கள் கூறலாம். ஒருவேளை அப்படிக்கூட இருக்கலாம். ஆனால் மக்களாகிய நாம் அன்றாட வாழ்வில் கூட சத்தமாக இருக்கிறோம் என்று நான் சொல்கிறேன். பேருந்துகள், ரயில்கள், விமானங்கள், திரையரங்குகள், வணிக வளாகங்கள், உணவகங்கள், அலுவலகங்கள், வீடுகள், மருத்துவமனைகள், மசூதிகள் மற்றும் கோவில்கள் என எல்லா இடங்களிலும் நாம் சத்தமாக இருக்கிறோம். நாம் சத்தமாக பேசுகிறோம், நம் தொலைபேசியில் சத்தமாக இசையை இசைக்கிறோம், நாம் நம் மனைவிகளுடன் பொது இடங்களில் கூட சத்தமாக பேசுகிறோம். ஒருமுறை ஒரு விமானத்தில் நான் ஒன்றை கேட்டேன் – ஒட்டுக்கேட்கவில்லை, நினைவில் கொள்ளுங்கள், ஏனென்றால் அவர்கள் இடைகழிக்கு எதிரே அமர்ந்திருந்தனர் – ஒரு தம்பதியினர் தங்கள் மருத்துவப் பிரச்சினைகளைப் பற்றி விவாதித்தனர். ஆணுக்கு புரோஸ்டேட் பிரச்சினைகள் இருந்தன, பெண்ணுக்கு பற்கள் மற்றும் ஈறுகள் அழுகியிருந்தன. டெல்லியில் இருந்து போபாலுக்கு வெறும் 75 நிமிடங்கள் எடுக்கும் விமானத்தின் முழு நேரமும் அவர்கள் மிகவும் சத்தமாக பேசினார்கள். ஏறக்குறைய மூன்றரை மணி நேரம் எடுக்கும் டெல்லி-திருவனந்தபுரம் விமானத்தில் நான் இல்லை என்பதற்காக எனது நட்சத்திரங்களுக்கு நன்றி தெரிவித்தேன்.

ஆனால் சத்தம் அதன் வேடிக்கையான தருணங்களையும் கொண்டுள்ளது. இதுவரை, நான் கேள்விப்பட்டதிலேயே மிகவும் வேடிக்கையான கதை, ஓய்வுபெற்ற வெளிநாட்டுச் சேவை அதிகாரியிடமிருந்து கேட்டதாகும். இது கட்டுக்கதையா என எனக்கு தெரியாது. நீண்ட காலத்திற்கு முன்பு, சுவிட்சர்லாந்தில் உள்ள பெர்னில் உள்ள நம் தூதர் யாரோ கத்துவதைக் கேட்டிருக்கிறார். அவர் தனது பிஏவை அழைத்து என்ன நடக்கிறது என்று கேட்டார். அதற்கு பிஏ ''ஐயா, ஜெனிவாவில் உள்ள துணைத் தூதரகத்திடம் அவர் பேசி கொண்டிருக்கிறார்'' என்றார். தூதர் முற்றிலும் குழப்பமடைந்து, ''தயவு செய்து அவரை தொலை பேசியைப் பயன்படுத்தச் சொல்லுங்கள்'' என்று பிஏவிடம் உத்தரவிட்டார்! ■

ADVT.



Rotary | CREATE HOPE in the WORLD

# Yadhumanaval

A Project by Rotary Club of Virudhunagar Dist-3212

EMPOWERING GIRLS | 66-79

ROTARY CLUB OF VIRUDHUNAGAR
in association with

CONSULATE GENERAL OF INDIA, JAFFNA

HILL COUNTRY WOMEN ASSOCIATION, SRILANKA

ARROW CHARITY ORGANIZATION, KANDY, SRILANKA

| | | |
|---|---|---|
| 66 | 19 FEB, 2024 | Hindu Culture Hall, KANDY |
| 67 | 20 FEB, 2024 | Central Provincial Council Auditorium, PALLEKALE |
| 68 | 21 FEB, 2024 | Grand Pavilion, NAWALAPITIA |
| 69 | 22 FEB, 2024 | Prince Hall, HATTON, Srilanka |
| 70 | 23 FEB, 2024 | Swamy Vipulanandha Institute of Aesthetics Studies, BATTICALOA |
| 71 | 24 FEB, 2024 | University @ VAVUNIYA |
| 72 | 25 FEB, 2024 | Event at Jaffna Cultural Center by Consulate |
| 73 74 | 26 FEB, 2024 | 8 AM - 10 AM Jaffna Central College, JAFFNA; 11 AM - 1 PM Union College, JAFFNA |
| 75 76 77 | 27 FEB, 2024 | 8 AM - 10 AM Hartley College, JAFFNA; 11 AM - 1 PM Chavakachcheri Hindu College, JAFFNA; 2 PM - 4 PM Jaffna University, JAFFNA |
| 78 79 | 28 FEB, 2024 | 8 AM - 10 AM Palai Central College, KILLINOCHCHI; 11 AM - 1 PM Killinochchi Central College, KILLINOCHCHI |



*Jayanthasri Balakrishnan*

" SHE PAVES A PATH FOR GIRL CHILDREN TO BECOME STRONGER VERSIONS OF THEMSELVES THROUGH HER MESMERIZING TALK. "

Inspiring and empowering workshops for girls in schools and universities, known as "Yadhumanaval," has been led by Mrs. Jayanthasri Balakrishnan. We are proud to declare that the main speaker of the program Yadhumanaval Dr Jayanthasri Balakrishnan has touched the lives of 100,000 girls in India and Srilanka. A journey of 25 months.. 79 Sessions.

Get in Touch

Yadhumanaval Project Chairman
Rtn D. Vijayakumari
+91 94887 66388

IDHAYAM
PROMISE OF HEALTH AND HAPPINESS

Registered No. TN/CCN/677/2022-2024
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2022-24
Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹40
Regd with RNI TNTAM/2018/76372. Rotary News Tamil Published 1st week of every month. Posted at Egmore RMS Patrika Channel. Date of posting: 9–15 every month.

ADVT.

# UG / PG / Ph.D. & Professional Programmes

## CAREER ORIENTED & SKILL DEVELOPMENT PROGRAMMES

3-Level certificate/Diploma/ Advanced Diploma alongwith Degree Programmes

## Career Counselling & Guidance

PSYCHOMETRIC TESTING ALSO AVAILABLE
https://icfia.org/iisu/psychometrictest

# IIS (deemed to be UNIVERSITY) JAIPUR

Accredited by NAAC

FORMERLY
INTERNATIONAL COLLEGE FOR GIRLS

Nurturing Excellence



## IISU CENTRE FOR PREPARATORY CLASSES

▪ Civil Services ▪ NET ▪ US CMA

## DISTINGUISHING FEATURES

- CONVEYANCE FACILITY
  Covering all parts of Jaipur including remote areas
- HOSTEL FACILITY
  Safe Environment
  A/C Rooms
  Healthy Vegetarian Food
- EXTRA & CO-CURRICULAR ACTIVITIES
- PLACEMENT SUPPORT
- WI-FI ENABLED CAMPUS
- EXTENSION ACTIVITIES
- NCC, NSS
- SPORTS

## OUR PLACEMENTS

FOR COUNSELING AND QUERIES

| Arts & Social Sciences | Science | Commerce & Management |
|---|---|---|
| +91 9358819994 | +91 9358819995 | +91 9358819996 |

**IIS (deemed to be University)**
Gurukul Marg, SFS, Mansarovar, Jaipur-302020 Rajasthan (INDIA)
+91 141 2400160, 2397906/07
Toll Free No.: 1800 180 7750
admissions@iisuniv.ac.in
www.iisuniv.ac.in



